ஸ்ரீ பிரசன்ன வெங்கட தாசர்
இயற்றிய

நாராயண பஞ்ஜரம்

(ஸ்லோகங்கள் மற்றும் அவற்றின் விளக்கத்துடன்)

கன்னடத்தில்:
ஞானஜ்யோதி விருதினைப் பெற்ற,
பரிமள பிரஷஸ்தி விருதினைப் பெற்ற
'ஹரிதாச சேவா பிரவீண'
வித்வான் திரு. ஸ்ரீனிவாஸ சு. மடத

தமிழில்:
'ஜகன்னாத கேசவ' சத்ய நாராயணன்

89044 58276. sathyatv123@gmail.com

jagannathakesava.blogspot.com

ஸ்ரீபிரசன்னவெங்கட தாசர் ஹரிதாச சாகித்யத்திற்கு கொடுத்த பரிசுகள் அபாரமானவை. இதுவரை அவரது அங்கிதத்தில் (பிரசன்னவெங்கட, பிரசன்ன வெங்கடகிருஷ்ண) மொத்தம் 449 கிருதிகள் கிடைத்திருக்கின்றன. அவற்றில் ஆறு பெரிய கிருதிகள் உள்ளன. அவை:

1. சத்யபாமா விலாஸ
2. நாராயண பஞ்ஜர
3. சமஸ்த நாமமணிகண ஷட்சரணமாலா
4. பேத முக்தாவளி
5. நாரத கொரவஞ்சி
6. ஸ்ரீ பிரசன்னவெங்கடதாசரின் பாகவதம்

இவற்றில் நாராயண பஞ்ஜர கிருதியில் 41 நுடிகள் உள்ளன. இதில் நாராயண ஸ்துதி, அவதாரங்களின் மகிமைகள் முதல் 28 நுடிகளிலும், பிறகு 29 முதல் 41 நுடிகள் வரை பிரார்த்தனைகள் வருகின்றன.

இந்தத் தொடரில் நாராயண பஞ்ஜரவின் 41 ஸ்லோகங்களையும், அதன் பொருளையும் பார்ப்போம். பல்வேறு ஆதாரங்களுடன் எழுதப்பட்ட இந்த ஸ்லோகங்களின் பொருளை, ஹரிபக்தர்கள் அனைவரும் கவனத்துடன் படித்து பயன்பெறுமாறு வேண்டுகிறோம்.

நாராயணாய நமோ நாராயணாய நமோ
நாராயணாய நமோ நாராயண |
நாரத^{3}ர முக^{1}தி^{3}ந்த^{3} நரக^{1}ஸ்த^{2}ரெப்பி^{3}ஸிதெ^{3}
நாராயணாய நமோ நாராயண ||ப

நாராயணனே உனக்கு நமஸ்காரம். முன்பு நாரதர் நாராயண மந்திரத்தை உச்சரித்தவாறு, நரகத்தில் இருந்த மக்களை அவர்களின் துக்கத்திலிருந்து காப்பாற்றி ஸ்வர்க்கத்திற்கு அனுப்பிவைத்தார். நாராயண நாமத்தின் மகிமைகளை ஸ்ரீதாசர் இங்கு தெரிவிக்கிறார்.

ஆதராத் விருக்தி: என்பதற்கேற்ப இந்த பல்லவியின் முதலாம், இரண்டாம் மற்றும் நான்காம் வரிகளில் நாராயண என்னும் சொல் இரு முறை வருகின்றது. நாராயண என்னும் சொல்லை மரியாதையுடன் / பக்தியுடன் உச்சரிக்கவேண்டும் என்று ஸ்ரீதாசரின் விருப்பமாக இருக்கிறது. நாராயண என்னும் சொல்லின் பொருளை பார்ப்போம். பகவந்தனுக்கு நாராயணன் என்னும் சொல் மிகவும் பொருத்தமாக வந்துள்ளது.

ஆபோ^{1} நாரா இதி^{1} ப்^{1}ரோக்த^{1}: ஆபோ^{1} வை நரஸூனவ: |
அயனம் த^{1}ஸ்ய தா^{1}: பூர்வம் தே^{1}ன நாராயண ஸ்ம்ருத^{1}: ||
(அனுவியாக்யான 1-1-85)

நாரா என்றால் தண்ணீர். நாராயணன் தண்ணீரில் இருப்பவன். சமுத்ர-சாயியான பகவந்தனுக்கு நாராயணன் என்ற பெயர் வந்திருக்கிறது. நாராயணன் என்னும் பெயருக்கு இன்னும் பல காரணங்கள் உள்ளன. (ஸ்ரீபிதரஹள்ளி ஸ்ரீனிவாசாசார்யர் இயற்றிய நாராயண ஷப்தார்த்தா என்னும் நூலைப் பார்க்கலாம். அதில் நாராயண என்னும் சொல்லிற்கு அவர் 72 அர்த்தங்களைக் கொடுத்திருக்கிறார்).

1. நாரா: முக்தா^{1}: தே^{1}ஷாம் அயன: நாராயண: |
முக்தர்களுக்கு ஆதாரமாக விளங்குவதால் பகவந்தனுக்கு நாராயணன் என்று பெயர்.

2. அராணாம் தோ^{3}ஷாணாம் விருத்த^{4}த்வாத்^{1} நாரா: கு^{3}ணா: | தே^{1}ஷாம் அயனத்^{1}வாத்^{1} நாராயண: |
குணபூர்ணனாக இருப்பதால் அவனுக்கு நாராயணன் என்று பெயர்.

3. நாரம் ஞானம் தே^{1}ன நாரேண ஈயத^{1} இதி^{1} நாராயண: |
ஞானத்தால் நிரம்பியவன் ஆகையால் அவனுக்கு நாராயணன் என்று பெயர்.

4. நாரா லக்ஷ்மி த^{1}ஸ்யா: அயனம் ஆஸ்ரய: நாராயண: |
லட்சுமிதேவிக்கு தலைவனாதலால் அவனுக்கு நாராயணன் என்று பெயர்.

5. நராணாம் அதி^{4}பதி^{1}: முக்^{2}யவாயு: த^{1}தா^{3}ஸ்ரயத்^{1}வாத்^{1} நாராயண: |
வாயுதேவருக்கு ஸ்வாமியாதலால் பகவந்தனுக்கு நாராயணன் என்று பெயர்.

இப்படி முக்தியை கொடுப்பவன், குணபரிபூர்ணன், ஞானபூர்ணன், தோஷங்கள் இல்லாத வாயுதேவருக்கு ஸ்வாமியான நாராயணனுக்கு மறுபடி மறுபடி நமஸ்காரம் செய்கிறார் ஸ்ரீதாசர்.

நாரத^{3}ர முக^{2}தி^{3}ந்த^{3} நரக^{1}ஸ்த^{2}ரெப்பி^{3}ஸிதெ^{3}.

ஸ்ரீ ஜகன்னாததாசர் தமது மேருகிருதியான ஹரிகதாம்ருதசாரத்தில் - பகவந்தனின் பரம மங்களமான நாமமானது, நரகஸ்தர்களை காப்பாற்றிய விஷயத்தை இப்படியாக சொல்கிறார்.

ஸ்ரீமுகுந்த^{3}ன பரம மங்க^{3}ள
நாம நரக^{1}ஸ்த^{2}ரனு ஸலஹிது
பா^{1}மரர பண்டித^{1}ரெனிஸி புருஷார்த்த கொ^{1}டுதி^{1}ஹுது||
(ஹரிகதாம்ருதசார - கருணாசந்தி - 2-21)

நாரதர், பகவந்தனின் நாமோச்சாரணையினால், நரகத்தில் இருந்தவர்களை காப்பாற்றினார். முன்னர், நாரதர் வைகுண்டத்திற்குச் சென்று ஸ்ரீ நாராயணனை கண்டு, பாடி, அவரின் ஆணையின் பேரில் யமபட்டணத்திற்கு வந்தார். அங்கு இருப்பவர்கள் படும் கஷ்டங்களைப் பார்த்து, மனம் நொந்து இப்படியாக பாடினார்.

"நாராயண - என்னும் மந்திரம் இருக்கிறது. நாக்கினால் சொல்வதும் மிகச் சுலபம். இப்படியான சுலபமான மந்திரத்தை சொல்லாமல், கோர நரகத்தில் மக்கள் கஷ்டங்களை அனுபவித்து வருகின்றனர். இது எனக்கு மிகவும் வியப்பாக இருக்கிறது".
(கிருஷ்ணாம்ருத மஹார்ணவம் ஸ்லோகம் #64ன் அர்த்தம்).

பிறகு நாரதர் அத்தகைய பாபிகளுக்கு, பகவந்தனின் நாமமே கதி, அதனை விட்டு நமக்கு வேறு கதியிலை என்று கூறி அங்கிருக்கும் மக்களின் நிலையைக் கண்டு வருந்தி தம் வீணையை மீட்டியவாறு கோவிந்தனின் நாம சங்கீர்த்தனையை செய்தார்.

ஓம். கோவிந்த நாராயண வாசுதேவ முகுந்த கிருஷ்ணாச்யுத மாத4வேதி1 |
ந்ருசிம்ஹ தேவேஷ ஹரே முராரே ரமேஷ லோகேஷ ஜகன்னிவாஸ ||
அனந்த1 வைகுண்ட2 து1ரந்த ஷக்தே சமஸ்த1 லோகஸ்ய நிதா1னமூதே |
நிரஞ்சனானந்த3 கு3ணாக1ரேஷ சித்3ரூப1 நிர்தோ3ஷ ஜகத்விஹார ||
நிரூப நித்யாவ்யய நிர்விகார நிராஸ்ரயானந்த விசித்ரகர்மன் |
தாஷார்ஹ க்ருஷ்ண க2க3வாஹன வாரிஜாக்ஷ நாராயணாகி2ல குரோ பகவன் நமஸ்தே ||

விஷ்வோத3யஸ்தி2தி1 லயோன்னியதி1ப்ரதே3தி1
கா3யன்மமோத3 முத3வாபித1வான் ஜனானாம் ||
தச்ஸ்ருத்வா நரக1ஸ்தா2ஸ்தே ஹரேர் நாமாம்ருதம் ஷுபம் |
உத்த1ஸ்து2ர்யாத1னா ஸ்தா2னாத் முக்தபா1பா1ஸ்ச ஸர்வஷ: ||
தத் க்ஷணாத் பு1ஷ்டகா1ரூடா4 திவ்யரூபா மனோரமா: |
தி1வம் ஜக்மு: ப்1ராஞ்சலய: ஸ்து1வந்தோ1 நாரதம் முனிமிதி1 ||
(சாண்டில்யதத்வ - 22வது அத்தியாயம்)

இப்படியாக நாராயண நாமமானது, நரகத்தில் இருந்த மக்களை அங்கிருந்து காப்பாற்றி ஸ்வர்க்கத்திற்கு அனுப்பி வைத்தது.

மத்த1க1ரியவஸானகெ1 ஹரியே நீ ப3ந்து3 கா1ய்தெ3
நாராயணனாய நமோ நாராயண |
ப4க்த1 ப்1ரஹ்லாதனேகாந்த1 நிஷ்டெ2கெ3 ஒலிதெ3
நாராயணாய நமோ நாராயண ||1

கஜேந்திர யானை, முதலையின் வாயில் சிக்கி, உயிர்பயத்தில் தவித்தபோது, ஸ்ரீஹரியே நீ வந்து அந்த கஜேந்திரனை காப்பாற்றினாய். அத்தகைய நாராயணனே உனக்கு நமஸ்காரங்கள். பக்த பிரகலாதனின் பக்திக்கு மெச்சி நீ கம்பத்திலிருந்து வந்து அவனின் தந்தையான ஹிரண்யகசிபுவைக் கொன்று, பிரகலாதனை ரட்சித்தாய்.

இத்தகைய நாராயணனே உனக்கு நமஸ்காரங்கள்.

முன்னர் தாபஸ மன்வந்தரத்தில் ஸ்ரீஹரி, கஜேந்திரனை முதலையின் வாயிலிருந்து காப்பாற்றியதை ஸ்ரீமத் பாகவதம் விவரிக்கிறது. (பாகவத எட்டாம் ஸ்கந்தம் 3-30 & 3-31).

ஸோsந்த1: ஸரஸ்யுருப3லேன க்3ருஹேத1 ஆர்தோ1
த்3ருஷ்ட்1வா க3ருத்மதி1 ஹரிம் க2 உபாத்த1சக்ரம் ।
உத்க்ஷிப்ய ஸாம்பு3ஜக1ரம் கி3ரமாஹக்1ருச்சாத்1
நாராயணா அகி1லகு3ரோ ப4கவன் நமஸ்தே ॥

த1ம் வீக்ஷ்ய பீ1டித1முஜ: ஸஹஸாவதீ1ர்ய
ஸ க்3ராஹமாஶு ஸரஸ: க்1ருபயோஜ்ஜஹார ।
க்3ராஹாத் விபாடி1த1 முகா2த3ரிணா கஜேந்த்ரம்
ஸம்ப1ஷ்யதா1ம் ஹரிரமூமுசது3 ஸ்த்ரியாணாம் ॥

வெயிலின் தாக்கத்தில் வருந்திய கஜேந்திரன் தன் தாகத்தை தீர்த்துக் கொள்ள, ருதுமத் என்னும் தோட்டத்தில் இருந்த தடாகத்திற்கு வந்தான். அங்கு குளித்து, தன் தாகத்தை தணித்து கரைக்கு வரும்போது அங்கிருந்த ஒரு முதலயானது அவன் காலைப் பிடிக்கிறது. கஜேந்திரனுடன் இருந்த யானைகள் எவ்வளவு முயன்றும் அவனை முதலையிடமிருந்து மீட்க முடியவில்லை. அப்போது கஜேந்திரன் ஸ்ரீமன் நாராயணனை வணங்குகிறான்.

'தம் யாயி பரம் பராயணம்' என்பது போல கஜேந்திரன், சக்கரத்தை ஏந்திய கருடாரூடனான ஸ்ரீஹரியை பார்த்து, தன் தும்பிகையில் தாமரையை ஏந்தி, அவனை வணங்கினான். சகல செல்வங்களையும் கொண்டவனான, அனைவருக்கும் குருவான ஸ்ரீஹரியே உனக்கு வணக்கங்கள் (நாராயணா அகிலகுரோ பகவன் நமஸ்தே) என்று வணங்கினான். அப்போது தோஷங்கள் இல்லாதவனான ஸ்ரீஹரி, தும்பிக்கையில் தாமரையை ஏந்தி தன்னை வணங்கும் கஜேந்திரனை பார்த்தவுடன், கருட வாகனத்திலிருந்து இறங்கி, முதலை மற்றும் யானையை சரோவரத்திலிருந்து தூக்கி, தேவதைகள் பார்த்துக் கொண்டிருக்கும்போதே தன் சக்கரத்தால் முதலையின் வாயைக் கிழித்து கஜேந்திரனை விடுவித்து காப்பாற்றினான்.

அடுத்து பக்த பிரகலாதனின் பக்திக்கு மெச்சி அவனை காப்பாற்றிய விதத்தையும் பாகவதம் விவரிக்கிறது.

ஹிரண்யகசிபுவிற்கு இருந்த நான்கு புதல்வர்களில், பிரகலாதராஜர் மூத்தவர். பக்திமான். சிறுவனாக இருந்த பிரகலாதன், தன் விளையாட்டுகளை விட்டு ஸ்ரீஹரியைக் குறித்து தியானத்தையே செய்து வந்தார். கூட இருந்த நண்பர்கள், பிரகலாதனை விளையாட அழைத்தாலும், இவர் 'ஸ்ரீஹரியின் அருளை வேண்டி, சிறுவர்களாக இருக்கும்போதே பாகவத தர்மங்களை பின்பற்ற வேண்டும்' என்று அவர்களுக்கு உபதேசம் செய்தார். (பாகவத ஏழாவது ஸ்கந்தம் 7-6-1).

அவரின் குருகளான ஷண்டாமர்கர், பிரகலாதனின் பேச்சுகளைக் கேட்டு, ராஜன் ஹிரண்யகசிபுவிடம் சென்று இந்த விஷயங்களை தெரிவித்தார். அதைக் கேட்டு கோபம் கொண்ட ஹிரண்யகசிபு 'அனைவரையும் கெடுக்கும் உன்னை இப்போதே கொன்றுவிடுகிறேன்' என்று சொல்லி, 'என்னையே எதிர்க்கும் அளவிற்கு உனக்கு தைரியம் கொடுத்தது யார்?' என்று கேட்டார்.

அப்போது பிரகலாதராஜர் 'ராஜனே, எனக்கு உனக்கு மற்றும் பிரம்மாதி அனைத்து ஜீவர்களுக்கும் ஸ்ரீஹரியே தைரியத்தைக் கொடுப்பவன். அனைத்தும் அவன் வசமே' என்றார். 'இந்த உலகத்தை படைத்து, காப்பாற்றி, அழிப்பவன் அவனே' என்றார். (பாகவதம் 7-8-8)

ஹிரண்யகசிபு கோபத்துடன், 'ஏய் முட்டாளே, நீ கூறும் அந்த ஹரி எங்கிருக்கிறான்? அவன் ஏன் நம் கண்ணுக்கு தெரிவதில்லை? இந்த கம்பத்தில் ஏன் அவன் தெரிவதில்லை?' என்று கேட்டார். 'நீ கூறும் ஸ்ரீஹரி உன்னை காப்பாற்றுகிறாரா பார்க்கலாம்' என்று அங்கிருந்த கம்பத்தை தன் முஷ்டியினால் பலமாக அடித்தார்.

உடன், மிகப் பெரிய சத்தத்துடன், பிரம்மதேவரின் வரத்தை நிஜமாக்குவதற்கு, ஏகாந்த பக்தனான பிரகலாதனின் வாக்கினை உண்மையாக்குற்கு ஸ்ரீநரசிம்மதேவர் அந்த கம்பத்திலிருந்து வெளிவந்தார்.

ஸத்1யம் விதா4து1ம் நிஜ ப்4ருத்1ய பா4ஷித1ம்
வ்யாப்தி1ம் ச பூ4தேஷ்வகி2லேஷு சாத்மன: |
அத்3ருஷ்யதா1த் அத்1யத்பு4த ரூபமுத்3வஹன்
ஸ்தம்பே4 சபா4யாம் ந ம்ருக3ம் ந மானுஷம் ||
(பாகவதம் 7-8-18)

கருடன் எப்படி பாம்பை குத்திக் கிழித்து கொல்கிறதோ அதைப் போல ஸ்ரீ நரசிம்மர், வாயிலில் அமர்ந்து, ஹிரண்யகசிபுவை தன் துடையில் போட்டு, தன் நகங்களினால் அவனின் மார்பைக் கிழித்து, அவனைக் கொன்று, பிரகலாதனை காப்பாற்றினார்.

இத்தகைய நாராயணரூபி பகவந்தனே, உனக்கு நமஸ்காரங்கள் - என்று ஸ்ரீ பிரசன்ன வெங்கட தாசர் இங்கு கூறுகிறார்.

ப்ருது2விக1ள்ள நனிரிது3 ஸதி1யனுத்த4ரிஸிதெ3
நாராயணாய நமோ நாராயண |
ப்ருது2சக்ரவர்த்திகெ3 ப்ரத்யட்சனாகி3 ஒலிதெ3
நாராயணாய நமோ நாராயண ||2

முன்னர் ப்ருத்வியை அபகரித்த ஹிரண்யாக்ஷகனை, ஸ்ரீஹரி வராக ரூபத்தினால் கொன்று, பூமிதேவியை காப்பாற்றினாய். அத்தகைய நாராயணனே உனக்கு நமஸ்காரங்கள். அந்த ப்ருது சக்ரவர்த்தியின் பக்தியை மெச்சி, அவனுக்கு பிரத்யட்சமாகி வந்து வரமளித்து அருளிய அந்த நாராயண ரூபி பகவந்தனுக்கு நமஸ்காரங்கள்.

ப்ருத்வியை அபகரித்த ஹிரண்யாக்ஷகனை ஸ்ரீஹரி வராக ரூபத்தில் கொன்ற விவரம் இதுவே. (பாகவத மூன்றாவது ஸ்கந்தம்).

பி^{3}ரம்மஜஸ்து ஹிரண்யாக்ஷ: ப்ரத^{2}மம் த^{3}ம்ஷ்ட்ரயா ஹத^{1}: |
ஸ ஏவ பார்ஷதா^{3}விஷ்ட: த்^{3}விதீய: கர்ணதாட^{3}னாத் ||
பூர்வம் லயோத^{3}கே மக்^{3}னாம் த்^{3}விதீயம் தேன மஜ்ஜிதாம் |
பு^{4}வமுத்த^{3}ரதெ^{1}ய்வாஸௌ ஹரிணா க்ரோட^{3}மூர்தினா ||
இதி பிரம்மாண்டே.

பிரம்மனிடமிருந்து பிறந்த ஹிரண்யாக்ஷகனே, வராக தேவரின் கோரைப்பல்லினால் முதலில் கொல்லப்பட்டவன். அவனே ஸ்ரீஹரியின் துவாரபாலகனான விஜயன் என்பவரிடம் கோபப்பட்டவன். இதற்கு முன், பிரளய நீரில் மூழ்கிய பூமியை மேலெடுத்த வராகரூபி ஸ்ரீஹரியினால் பிரம்மபுத்ரனான ஹிரண்யாக்ஷகன் கொல்லப்பட்டான். இரண்டாம் முறையாக ஹிரண்யாக்ஷகன் பூமியை அபகரித்து கடலில் மூழ்கடித்தான். வராகரூபி ஸ்ரீஹரி இந்த பூமியை மேலெடுக்கும்போது, அவரின் கையால் அடிவாங்கி இறந்தான் ஹிரண்யாக்ஷகன். இப்படியாக ஹிரண்யாக்ஷகனை கொன்று பூமியை காப்பாற்றிய விஷயத்தை ஸ்ரீதாசர் இங்கு விவரித்திருக்கிறார்.

ப்ருது சக்ரவர்த்திக்கு ஸ்ரீஹரி வரமளித்த விஷயம் பாகவத நான்காம் ஸ்காந்தத்தில் வருகிறது. பிரம்மபதவியை பிடிக்கவேண்டி 100 அஸ்வமேத யாகங்களை செய்வதாக ப்ருது சங்கல்பம் செய்கிறார். அப்படியே 99 யாகங்களை முடித்து 100ம் யாகத்தை செய்யும்போது, இந்திரன் அந்த யாகத்தை தடை செய்யவேண்டி, அஸ்வமேத குதிரையை அபகரிக்கிறார். அதனால் கோபம் கொண்ட ப்ருதுராஜனை, அத்ரி முதலான முனிவர்கள் சமாதானம் செய்கின்றனர். தங்களது மந்திர பலத்தினால் இந்திரனை அழைத்து, அவரை கொன்றுவிடுவதாக சொல்லி தயாரானபோது, பிரம்மதேவன் வந்து அவர்களை தடுத்துவிடுகிறார்.

அப்போது யக்ஞபதியும், யக்ஞபோக்தனுமான ஸ்ரீவிஷ்ணு ப்ருதுராஜனின் யாகங்களினால் மகிழ்ந்து இந்திரனுடன் அங்கு வருகிறார். ப்ருதுவும் ஸ்ரீவிஷ்ணுவிற்கு அர்க்ய பாதாதிகளைக் கொடுத்து வணங்குகிறார். அவரைக் குறித்து இவ்வாறு சொல்கிறார் - 'முக்தியைக் கொடுக்கக்கூடிய பிரபுவே! வரங்களைக் கொடுக்கும் பிரம்மன் முதலான தேவதைகளுக்கும் வரங்களைக் கொடுப்பவராக இருக்கிறீர். நான் உன்னிடம் மோட்ச சுகத்தை கேட்பதில்லை. உன் கதாம்ருதத்தைக் கேட்பதைத் தவிர வேறெந்த வரத்தையும் நான் கேட்பதில்லை'.

இப்படியாக ப்ருதுராஜன் பகவந்தனைக் குறித்து வேண்டியபோது, ஸ்ரீஹரி அவனுக்கு பதிலளிக்கிறார் - 'ராஜனே! உனக்கு என்னிடம் பக்தி உண்டாகட்டும். உன் சித்தம் என் மேலேயே இருக்கட்டும். நீ எப்போதும் என் ஆணைகளை பின்பற்றிக் கொண்டிரு. என் ஆணைகளை செய்து முடிக்கும் உனக்கு எப்போதும் நல்லதே நடக்கும்'. ப்ருது சக்ரவர்த்தியின் பக்திக்கு மெச்சி, ஸ்ரீஹரி அவனுக்கு காட்சியளித்து அருளினார்.

இத்தகைய நாராயணனே உனக்கு என் நமஸ்காரங்கள் என்று ஸ்ரீதாசர் இங்கு தெரிவிக்கிறார்.

ஷூலியனு பெ^{3}ம்ப^{3}த்தி சுடு^{3}வெனெம்ப^{3}ன ஸூட்டி
நாராயணாய நமோ நாராயண ।
ஷீல விடி^{3}த^{3}ம்பரீஷன மத^{1}வ கெ^{3}லிஸிதேயோ
நாராயணாய நமோ நாராயண ।।3

முன்னர், சகுனியின் மகனான வ்ருகாசுரனுக்கு - அவன் யார் தலைமேல் கை வைக்கிறாரோ அவர் இறந்துவிடுவார் - என்னும் வரத்தை ருத்ரதேவர் கொடுக்கிறார். இந்த வரத்தை சோதிப்பதற்கு அவன் ருத்ரதேவரின் தலையிலேயே கைவைக்க முயன்றபோது, ருத்ரதேவர் அவனிடமிருந்து தப்பித்து ஓடத்துவங்கினார். வ்ருகாசுரனும் அவரை துரத்திக்கொண்டே ஓடினான். ருத்ரதேவர் பயந்து அனைத்து உலகங்களுக்கும் ஒடி அபயம் கேட்டும் யாரும் காப்பாற்றாததால் இறுதியாக வைகுண்டத்திற்கு வந்தார். இதனைக் கண்ட நாராயணன் ஒரு சிறுவனின் ரூபத்தை கொண்டு வ்ருகாசுரனை மயக்கி அவன் கையை அவனின் தலையிலேயே வைக்குமாறு செய்து அவனைக் கொன்றார். இத்தகைய நாராயணனுக்கு என் நமஸ்காரங்கள்.

திதி-த்ரய விரதங்களை சரியாக பின்பற்றக்கூடியவனான அம்பரீஷராஜன், ஒரு சாதன த்வாதசியன்று பாரணை செய்வதற்கு தயாராக இருந்தான். அப்போது அங்கு துர்வாச முனிவர் வருகிறார். ராஜனும் முனிவருக்கு அர்க்ய பாத்யாதிகளைக் கொடுத்து, அவரை பாரணை செய்ய அழைக்கிறான். அதற்கு முனிவர், தான் குளித்துவிட்டு வருவதாக ஆற்றுக்கு சென்றார். பாரணைக்கான நேரம் நெருங்கியபோதும் அவர் வரவில்லை.

அப்போது ராஜன், பிராமணர்களின் ஆலோசனையின்படி, தீர்த்தம் வாங்கி, நீர் குடித்து, பகவந்தனின் தியானத்துடன், துர்வாசரை எதிர்பார்த்து காத்திருந்தான். சிறிது நேரத்தில் அங்கு வந்த துர்வாசர், நடந்த விஷயங்களை தமது ஞான திருஷ்டியால் அறிந்தார். உடன் தமது ஜடையிலிருந்து ஒரு கொத்தினை பிடுங்கி ஒரு கெட்ட தேவதையை ஸ்ருஷ்டித்தார். அந்த தேவதை அம்பரீஷ ராஜனின் முதுகில் ஏறியபோது, ஸ்ரீஹரி ராஜனுக்குக் கொடுத்திருந்த சக்ராயுதமானது, அந்த தேவதையைக் கொன்று, துர்வாசரிடம் வந்தது. அவர் எங்கு சென்றாலும் அவருக்கு பாதுகாப்பு சிக்கவில்லை.

ஸ்ரீநாராயணனிடம் வந்தபோது அவரோ 'நான் பக்தர்களுக்கு கட்டுப்பட்டவன். தற்போது அஸ்வதந்த்ரனாக இருக்கிறேன். சஜ்ஜனரான பக்தர்களிடம் என் மனது சிறைபட்டிருக்கிறது. நான் பக்தர்களுக்கு கட்டுப்பட்டிருக்கிறேன். எந்த பக்தர் தம் மனைவி, மக்கள், செல்வம் ஆகியவற்றை தியாகம் செய்து என்னிடம் சரணடைகின்றரோ, அத்தகைய பக்தர்களை நான் கைவிடுவது எப்படி சாத்தியம்? நீங்கள் யாருக்காக அந்த துர்தேவதையை உருவாக்கினீரோ, அவரிடமே நீங்கள் போய் சரணடையுங்கள்' என்று திருப்பி அனுப்பினார்.

துர்வாசரும் அங்கிருந்து புறப்பட்டு அம்பரீஷ மகாராஜனிடம் வந்து அவன் பாதங்களை பிடித்துக் கொண்டார். அம்பரீஷனும் மிகவும் கருணையுடன் பகவந்தனின் சக்ராயுதத்தை வேண்டினான். அவனின் வேண்டுதலுக்கிணங்க, ஸ்ரீவிஷ்ணு சக்கரமானது சாந்தமடைந்தது. துர்வாசரும் அந்த அஸ்திரத்தின் தாபத்திலிருந்து விடுதலை அடைந்து, ராஜனை ஆசிர்வதித்து, பின் அங்கிருந்து புறப்பட்டார்.

இப்படியாக நல்ல விரதங்களை அனுஷ்டித்த அம்பரீஷ ராஜனின் சார்பை ஜெயிக்க வைத்த நாராயணனே உனக்கு என் நமஸ்காரங்கள் என்று ஸ்ரீதாசர் இங்கு தெரிவிக்கிறார்.

இந்த விஷயம் ஸ்ரீமத் பாகவத பத்தாம் ஸ்கந்தத்தில் இவ்வாறு விளக்கப்பட்டிருக்கிறது.

வ்ருகாசுராய கிரிஷோ வரம் தத்வாSP சங்கடம் ।
யஸ்ய் யஸ்யகரம் ஷீர்ஷி தஸ்யே ஸ ம்ரியதாமிதி ॥

ஓம்மிதி ப்ரஹஸ்ன்ஸ்தஸ்மை ததேSஹேரம்ருதம் யதா ।
இத்யுக்த்வா ஸோSசுரோ நூனம் கௌரீஹரணலாலஸ: ॥

ஸ தத்வர பரீக்ஷார்த்தம் ஷம்போர்மூர்த்னிகிலாஸுர: ।
ஸ்வஹஸ்தம் தாதுமாரேபீ சோSபிவ்யத: ஸ்வக்ருதாப்திவ: ॥

அஜானந்த: ப்ரதிவிதிம் தூஷ்ணீமாஸன் சுரேஷ்வரா: ।
ததோ வைகுண்டமகமத் பாஸ்வரம் தமஸ: பரம் ॥

....

யதிவஸ்தத்ர விஸ்ரம்போ தானவேந்த்ர ஜகத்குரௌ ।
தர்ஹ்யங்காஷு ஸ்வஷிரஸி ஹஸ்தம் ந்யஸ்த ப்ரதீயதாம் ॥

யத்யஸ்த்யம் வச: ஷம்போ கதஞ்சித் தானவர்ஷப ।
தத்யைனம் ஜஹ்யஸத்வாசம் நயத் வக்தான்ருதம் முன: ॥

இத்தம் பகவத்ஸ்சித்தைர்வசோபி: ஸ ஸுபேஷலை: |
பின்னதீர்விஸ்ம்ருத: ஷீர்ஷ்ணஸ்வஹஸ்தம் குமதிர்வ்யதாத் ||

அதாபதத் பின்னஷிரா வஜ்ராஹத இவ க்ஷணாத் |
ஜயஸ்யப்தோ நம:ஷப்த: ஸாது ஷப்தோꜱபவத் திவி |
முமுசு: புஷ்டவர்ஷாணி ஹதே பாபே வ்ருகாஸுரே ||
(ஸ்ரீமத் பாகவதம் 10-88-21 முதல் 26 வரை)

சகுனியின் மகனான வ்ருகாசுரன், சிவன் விரைவாக வரம் கொடுப்பார் என்னும் விஷயத்தை நாரதர் மூலமாக அறிந்து, தன் தேக மாமிசத்தை அக்னியில் போட்டு ஹோமம் செய்தான். சிவன் வரவில்லை. அடுத்து அவன் தன் கழுத்தை வெட்டிக்கொள்ள தயாரானபோது, சிவன் பிரத்யக்ஷமானார். 'நான் யார் தலைமேல் என் கையை வைக்கிறேனோ அவர் உடனே எரிந்து சாம்பலாக வேண்டும்' என்று வரம் கேட்டான். சிவன் 'அப்படியே ஆகட்டும்' என்றார். சிவன் கொடுத்த இந்த வரத்தை சோதித்துப் பார்க்க அசுரன் சிவனின் தலைமேலேயே கைவைக்க வந்தான். சிவனும் பயந்து அனைத்து உலகங்களுக்கும் ஓட, எங்கும் பாதுகாப்பு கிடைக்காமல் இறுதியாக வைகுண்டத்திற்கு வந்தார்.

இதை பார்த்த ஸ்ரீநாராயணன் ஒரு சிறுவனாக வந்து 'வ்ருகாசுரனே! சிவனின் பேச்சை நான் என்றும் நம்புவதில்லை. அவர் பேச்சை நீ நம்புவாய் என்றால் உன் தலை மேல் நீயே கை வைத்துப் பார். அவரின் பேச்சு உண்மையோ பொய்யோ என்று நிச்சயமாகிவிடும்' என்றார். பகவந்தனான நாராயணனின் பேச்சில் மயங்கிய வ்ருகாசுரன், தன் தலை மேல் கை வைத்தான். உடனடியாக அவன் எரிந்து சாம்பலானான். தேவதைகள் புஷ்பவ்ருஷ்டி செய்தனர். இப்படியாக சிவனை பிரச்னையிலிருந்து காப்பாற்றிய அந்த நாராயணனுக்கு என் வணக்கங்கள்.

மகரரூபதி^{3} சத்யவ்ரதகெ தத்வவனொரெதெ^{3}
நாராயணாய நமோ நாராயண |
முக^{2}தி^{3} ஸ்ருதி பிடி^{3}தந்து^{3} வாரிஜாஸனகி^{3}த்தெ
நாராயணாய நமோ நாராயண ||4

அந்த நாராயணரூபி பகவந்தன் மத்ஸ்யாவதாரத்தை எடுத்து, சத்யவிரத ராஜனுக்கு தத்வோபதேசம் செய்தான். மத்ஸ்யரூபி பகவந்தன் வேதங்களை அபகரித்த, சஜ்ஜனர்களின் எதிரியான ஹயக்ரீவ என்னும் தைத்யனை கொன்று, நான்கு வேதங்களை நான்முக பிரம்மதேவருக்குக் கொடுத்தான். இத்தகைய நாராயணனே உனக்கு என் நமஸ்காரங்கள்.

முன்னர் ஒரு முறை சத்யவ்ரத ராஜன், க்ருதமாலா ஆற்றங்கரையில் அர்க்யம் கொடுத்திருந்தபோது, அவரது கமண்டலத்தில் மிகவும் அழகான மீன் ஒன்று சிக்கியது. அந்த மீனை ஆற்றில் விட முயன்றபோது, அந்த மீன் தயாவந்தனான சத்யவ்ரத ராஜனைக் குறித்து பேசத் துவங்கியது. 'அனைவரையும் காப்பாற்றுபவனான ராஜனே! என் எதிரிகளைக் கண்டு நான் பயந்திருக்கிறேன்.

கஷ்டத்தில் இருக்கும் என்னை இந்த ஆற்றில் விடாதீர்கள். சரணடைந்தவர்களை கைவிடுவது அரசர்களுக்கு அழகல்ல' என்று வேண்டியது.

சத்யவிரதராஜன் அந்த மீனின் பேச்சைக் கேட்டு, அதை தன் கமண்டலத்திலேயே வைத்துக் கொண்டு, ஆசிரமத்திற்கு திரும்பி வந்தார். ஒரே இரவில் அந்த மீன் கமண்டலத்தை விட பெரியதாக வளர்ந்தது. ராஜனைப் பார்த்து - 'எனக்கு இதைவிட பெரிய இடம் ஒன்றில் விடவும்' என்றது. ராஜனும் அதை கிணற்றில் விட்டார். ஒரே முகூர்த்தத்தில் அது மூன்று மடங்காக வளர்ந்தது. கிணறு அதற்கு போதவில்லை என்று அதை ஏரியில் விட்டார். அதுவும் போதாதென்று அந்த மீன் வளர்ந்தபோது, அதை கடலில் விட்டார். அப்போது அந்த மீன் ராஜனைப் பார்த்து 'ராஜனே! மிக பலம் பொருந்திய முதலைகள் என்னை தின்றுவிடும் ஆகையால் இந்த கடலில் என்னை விடவேண்டாம்' என்றது.

இப்படியாக மிகவும் அழகான மொழியில் பேசிய அந்த மீனைப் பார்த்து, ராஜன் 'என்னை மயக்கும் நீ யார்? ஏன் இப்படி மீனாக இருக்கிறாய்?' என்றார். இப்படி மீனின் சாமர்த்தியத்தைக் கண்ட சத்யவிரதராஜன், ஸ்ரீஹரியின் அருளால் அந்த மீன், மத்ஸ்யரூபியான பகவந்தனே என்று அறிந்து அதைக் குறித்து துதித்தான். அவனின் துதிகளால் மகிழ்ந்த மத்ஸ்யரூபி பகவந்தன், சத்யவ்ரதராஜனைக் குறித்து - 'இன்றிலிருந்து 7 நாட்களில் மூன்று உலகங்களும் பிரளயத்தில் மூழ்கிவிடும். அப்போது உனக்காக ஒரு பெரிய தோணியை அனுப்புகிறேன். நீ அதில் அமர்ந்து எந்தவொரு கவலையும் இல்லாமல் பயணம் செய். சூறாவளியில் சிக்கி தோணி தத்தளிக்கும்போது நான் அங்கு வருவேன். அங்கிருக்கும் ஒரு கயிற்றினால் உன் தோணியை என் கொம்பில் கட்டிவிடு' என்று கூறி மறைந்தார்.

சத்யவ்ரதராஜனும் பிரளய காலத்தை எதிர்நோக்கி அமர்ந்திருந்தான். ஏழு நாட்களுக்குப் பிறகு மூன்று உலகங்களும் மூழ்குமாறு பிரளயம் நிகழ்ந்தது. அந்த வெள்ளத்தில் மிதந்து வரும் படகினை ராஜன் கண்டார். ஸ்ரீஹரியின் ஆணைப்படி விதைகள், தாவரங்கள் ஆகியவற்றை சேகரித்து, சப்தரிஷிகளுடன் அந்த படகில் ஏறினார். சப்தரிஷிகள் - 'ராஜனே! ஸ்ரீஹரியைக் குறித்து தியானம் செய். அவன் நம்மை நம் கஷ்டங்களிலிருந்து காப்பாற்றுவான்' என்றார். சத்யவிரதராஜன் பக்தியுடன் தியானம் செய்யவும், ஸ்ரீஹரி, தங்கக் கொம்புள்ள ஒரு யோஜனை அளவுக்கு நீளமான மத்ஸ்யரூபத்தில் அங்கு தோன்றினார். ராஜனும், தன் படகினை அந்த மத்ஸ்யத்தின் கொம்பில் கட்டினார். மத்ஸ்யரூபி பகவந்தன்,

சத்யவ்ரதராஜனுக்கு ஞான, பக்தி, நிஷ்காம கர்மங்கள் என்னும் மோக்ஷ உபாயத்தை, தத்வங்களை உபதேசம் செய்தார் - (ஸ்ரீமத் பாகவதம் 8ம் ஸ்கந்தம் 24ம் அத்தியாயம்) இத்தகைய நாராயணனுக்கு என் நமஸ்காரங்கள்.

பிரம்மனின் முகத்திலிருந்து வெளிவந்த வேதங்களை ஹயக்ரீவ என்னும் அசுரன் அபகரிக்க, அவனை மத்ஸ்யரூபி பகவந்தன் கொன்று, அந்த நான்கு வேதங்களையும் நான்முக பிரம்மனிடம் மறுபடி ஒப்படைத்தான். இத்தகைய நாராயணனுக்கு நமஸ்காரங்கள்.

புருஹூதக3கி2ள பரமார்த்த2வனு அருஹிதெ3
நாராயணாய நமோ நாராயண ।
சுரபன்ன ப4யவட்டி த்4ருவகெ3 த்4ருவபத3வித்தெ
நாராயணாய நமோ நாராயண ॥5

தேவேந்திரன் அர்ஜுனனாக அவதரித்தபோது ஸ்ரீகிருஷ்ணன் பரமார்த்த என்று அழைக்கப்பட்ட ஸ்ரீமத் பகவத்கீதையை உபதேசித்தான். குருக்ஷேத்திரத்தில் அர்ஜுனன் தான் போர் புரிவதில்லை என்று அஸ்திரங்களை கீழே வைத்து நின்றபோது, ஸ்ரீகிருஷ்ணன் அவனுக்கு 18 அத்தியாயங்களைக் கொண்ட கீதையை உபதேசம் செய்து, பரமார்த்தத்தின் சாரத்தையே உபதேசித்தான்.

கீதையின் ஒவ்வொரு அத்தியாயத்தின் இறுதியிலும் வருவது:
ஓம் தத்ஸதிதி ஸ்ரீமத்பகவத்கீதாசூபநிஷத்ஸு பிரம்மவித்யாயாம் யோகசாஸ்திரே ஸ்ரீகிருஷ்ணார்ஜுன சம்வாதே ... இதிலிருந்து தெளிவாகிறது மற்றும்

ஸர்வோபநிஷதோ3 கா3வ: தோ3க்தா4கோ3பால நந்த3ன: ।
பார்த்தோ2 வத்ஸ: சுதீ4ர்போ4க்தா துக்த4ம் கீ3தாம்ருதம் மஹத் ॥
(கீதா மகாத்யம் - 6வது ஸ்லோகம்)

அத்தகைய நாராயண ரூபி ஸ்ரீகிருஷ்ணனுக்கு நமஸ்காரங்கள். இந்திரபுரியான அமராவதியின்மேல் பலிராஜன் படையெடுத்து, இந்திரனிடமிருந்து ஸ்வர்க்கத்தை அபகரித்துக்கொண்டான். அப்போது ஸ்ரீமன் நாராயணன் வாமன ரூபம் எடுத்து பலிராஜனின் யக்ஞசாலைக்கு வந்து அவனிடம் மூன்று அடி நிலம் தானம் கேட்டு, உடன் த்ரிவிக்ரமனாக வளர்ந்து முதல் அடியால் பூமியை ஆக்ரமித்து, இரண்டாம் அடியால் ஸ்வர்கத்தை ஆக்ரமித்தார்.

மூன்றாம் அடி வைப்பதற்கு இடமே இல்லை என்று சொல்ல, பலிராஜன் அந்த மூன்றாம் அடியை தன் தலைமேல் வைத்து அருளுமாறு கூறினார். ஸ்ரீவாமனனும் அப்படியே செய்து இந்திரனுக்கு அவர் ஸ்வர்க்கத்தை திரும்பக் கொடுத்து அவரின் பயத்தை போக்கினார். இந்திரனும் ஸ்வர்க்கத்தின் ஆட்சியைப் பெற்று, ஸ்ரீவாமனனின் புஜபலத்தில் எந்தவொரு பயமும் இல்லாமல், ஆட்சி செய்து மகிழ்ந்திருந்தான்.

இந்த விஷயம் பாகவதத்தில் இவ்வாறு வருகிறது.

ப்ராப்ய த்ரிபு4வனம் சேந்த்ர உபேந்த்ர3 பு4ஜபாலிதம் ।
ஷ்ரியா பரமயா ஜுஷ்டோ முமுதே3 க3தஸாத்4வஸ: ॥
(8-22-25)

வளர்ப்புத்தாயான சுருசியின் பேச்சைக் கேட்டு வருத்தத்துடன் இருந்த த்ருவராஜன், சுநீதியின் அறிவுரைப்படி தவம் செய்வதற்காக காட்டிற்குச் சென்றார்.

வழியில் நாரதருடன் சந்திப்பு நிகழ்ந்தது. அவர் த்ருவராஜனுக்கு ‘ஓம் நமோ பகவதே வாசுதேவாய’ என்னும் த்வாசாக்ஷர மந்திரத்தை உபதேசித்தார். அவரின் உபதேசத்தின்படி த்ருவராஜன், ஸ்ரீமன் நாராயணனைக் குறித்து தவம் செய்தார். அவரின் பக்திக்கு மெச்சிய ஸ்ரீமன் நாராயணன் அவருக்கு காட்சியளித்தார். அப்போது த்ருவராஜன், ஸ்ரீஹரியைக் குறித்து துதிக்க விரும்பினார். ஆனால் அவர் வாயிலிருந்து வார்த்தையே வெளிவரவில்லை. அப்போது ஸ்ரீமன் நாராயணன், த்ருவராஜனின் கன்னத்தில் தன் சங்கினைக் கொண்டு தொட, உடனே த்ருவராஜனின் துதி தொடங்கியது.

யோந்த1: ப்ரவிஷ்ய மமவாசமிமாம் ப்1ரசுப்தா1ம்
சஞ்சீவயத்யகி2ல ஷக்தித4ர: ஸ்வதா4ம்னா |
அன்யாம்ஸ்சஹஸ்த சரண ஷ்ரவணத்வகா3தீ3ன்
ப்ராணான் நமோ ப4கவதே1 புருஷாய துப்4யம் ||
(ஸ்ரீமத் பாகவத 4-9-6)

இந்த ஸ்தோத்திரத்தால் மகிழ்ந்த ஸ்ரீமன் நாராயணன், த்ருவராஜனுக்கு 36000 ஆண்டுகள் ராஜ்யபரிபாலனம் செய்யும் அதிகாரத்தைக் கொடுத்து அருளினார். பின்னர் அவருக்கென்று த்ருவலோகத்தையும் ஏற்படுத்திக் கொடுத்தார். இத்தகைய நாராயணனே, உனக்கு என் நமஸ்காரங்கள்.

மகாபா1ப1நிரத அஜாமிளனனிஷ்டக1ரிஸிதெ3
நாராயணாய நமோ நாராயண |
மஹிதாஸனாகி3 தா1யிகெ3 த1த்வவனு பே1ள்தெ3
நாராயணாய நமோ நாராயண ||6

மிகப்பெரிய பாவங்களை செய்தவனான அஜாமிளனின் வினைகளை போக்கிய நாராயணனே உனக்கு என் நமஸ்காரங்கள். அந்த நாராயணன் இதராதேவியிடம் மஹிதாஸனாக அவதரித்து தன் தாய்க்கு தத்வங்களை உபதேசம் செய்தான். இத்தகைய நாராயணனே உனக்கு என் நமஸ்காரங்கள்.

அஜாமிளன் மிகக் கொடிய பாவங்களை செய்திருந்தான். தன் இறுதி காலத்தில், பகவந்தன் நாராயணனை நினைத்தவாறு ‘நாராயண’ என்னும் பெயருள்ள தன் மகனை அழைத்தான். அப்போது விஷ்ணு தூதர்கள் வந்து, அவனை யமனின் பாசக்கயிற்றிலிருந்து விடுவித்தனர். செய்த பாவங்களினால் வந்த வினைகளை போக்கி, அவனை காப்பாற்றி, அவனுக்கு மோக்ஷத்தை அந்த நாராயணன் அருளினான்.

ஸ்ரீமத் பாகவதத்தில் இவ்விஷயம் இவ்வாறு வருகிறது.

ஏதா1வதா1sலமக4னிர்ஹரணாய பு1ம்ஸாம்
ஸங்கீர்த்த1னம் ப4கவதோ1 கு3ணக1ர்மனாம்னாம் |

விக்1ருஷ்ய பு1த்ர மக4வான் யத3ஜாமிளோsபி
நாராயணேதி1 ம்ரியமாண இயாய முக்தி1ம் ||
(6-3-24)

பகவந்தனின் குண, லீலை மற்றும் நாமங்களை நன்றாக உணர்ந்து பாடுவது, மனிதர்களின் பாவங்களை முழுவதாக நாசம் செய்யும். அதுமட்டுமல்ல. ஏனெனில், மிகப் பாபியான அஜாமிளன் மரண சமயத்தில், தன் மகன் ‘நாராயண’னின் பெயரைச் சொல்லி அழைத்தான். நாராயண என்னும் சொல்லின் பொருளை உணர்ந்து அவன் அழைத்ததால், அவனின் அனைத்து பாவங்களும் நீங்கி அவன் முன்னர் மோட்சத்தை அடைந்தான்.

அந்த நாராயணன் இதராதேவியிடம் ‘மஹிதாஸ’ என்னும் பெயரில் அவதரித்து தன் தாய்க்கு தத்வங்களை உபதேசம் செய்தார். விஷ்ணுவின் நாமஸ்மரணையை மிகவும் சுத்தமான மனதுடன் சொல்லியவாறு இருந்த ஒரு பிராமணன் மற்றும் இதராதேவியிடம் ‘மஹிதாஸ’ என்னும் ரூபத்தில் அவதரித்தான். மிகவும் பிரச்னைகளுடன் கூடிய இந்த உலகத்தில், பாவங்களைப் போக்குவதற்காக பற்பல வைஷ்ணவ தந்திரங்கள் கூடிய சச்சாஸ்திரங்களை உபதேசித்தார்.

பிரமாண்ட புராணம், பிரம்ம புராணம் மற்றும் பாகவதத்தில் மஹிதாசரின் கதை விளக்கப்பட்டிருக்கிறது. ஸ்ரீ சுமத்வ விஜயத்தில் மஹிதாஸனைப் பற்றி சொல்லியிருக்கிறார் பண்டிதாசார்யர்.

மஹிதா3ஸ பூஜ்ய சரணோ த்3விஜாதபூ4த்1 விதி3தாத் ஸ விஷ்ணு
யஷஸோsமலாத்1மன: |
இஹ யோ த4தே4 ஜக3தி பா1ப1ஷாந்த1யே பஹுதா4ம ஹேதி1
மதி1தீப்தகோ3ஸ்தி4தி1ம் ||

பிரம்மாண்ட புராணத்தில் மஹிதாஸனின் வர்ணனை இவ்வாறாக இருக்கிறது.

மஹிதா3ஸாபி4தோ4 ஜக்ஞே இத1ராயாஸ்தபோ1ப3லாத்1 |
சாக்ஷாத் ஸ பக4வான் விஷ்ணுர்யஸ் த1ந்த்1ரம் வைஷ்ணவம் வ்யதா4த் ||

பிராஹ்ம புராணத்தில் மஹிதாஸனின் வர்ணனை இவ்வாறாக இருக்கிறது.

அவதா1ர ஸ்துதி1யோsஸ்ய தே3வர்ஷி: ப்ரதி4தோ1 தி3வி |
மஹிதாஸ ஸ்த்வைத1ரேயோ யஸ்த1ந்த்1ரம் நாரதே3 வத3த்1 ||

ஸ்ரீமத் பாகவதத்தில் மஹிதாஸனின் வர்ணனை இவ்வாறாக இருக்கிறது.

த்ருதீய ம்ருஷிசர்க3ம் வை தே3வர்ஷித்1வமுபேத்ய ஸ: |
தந்த்ரம் ஸாத்வதமாசஷ்ட நைஷ்க1ர்ம்யம் க1ர்மணாம் யத1: ||

இத்தகைய மஹிதாஸ ரூபி நாராயணனுக்கு என் நமஸ்காரங்கள்.

முனி காலலொதெ3யெ எத்து3 கருணிஸிதெ3 க1ருணாநிதி4
நாராயணாய நமோ நாராயண |
முனிவெங்களரெயாகெ3 ப1த3ஸோங்கிஸ்யெத்தி1தெ3யோ
நாராயணாய நமோ நாராயண ||7

யார் சர்வோத்தமன் என்பதை உலகிற்கு தெரிவிப்பதற்காக புறப்பட்ட ப்ருகு முனிவர், பிரம்ம, சிவன் இருவரும் சர்வோத்தமன் இல்லை என்று நிர்ணயித்து, வைகுண்டத்திற்கு வந்து சேஷசாயியான ஸ்ரீஹரியின் மார்பில் தன் காலால் எட்டி உதைக்க, கருணா சமுத்திரனான ஸ்ரீநாராயணன், எழுந்து வந்து ப்ருகு முனிவரை வரவேற்று, மரியாதை செலுத்தியதும், ப்ருகு முனிவர், ஸ்ரீமன் நாராயணனே சர்வோத்தமன் என்று அறிவித்தார். இத்தகைய நாராயணனே உனக்கு நமஸ்காரங்கள்.

கௌதம ரிஷிகளின் சாபத்தினால் அகலிகை கல்லின் ரூபத்தில் இருக்க, ஸ்ரீராமன் தன் காலினால் அந்த கல்லினைத் தொட, மறுபடி அவள் அகலிகையாக தோன்றினாள். இப்படி அகலிகையை காப்பாற்றிய ஸ்ரீராமரூபி நாராயணனே உனக்கு நமஸ்காரங்கள்.

ஸ்ரீஹரியே சர்வோத்தமன் என்று நிரூபிக்க ப்ருகுமுனிவர் முதலில் பிரம்மதேவரிடம் வந்தார். பிரம்மன் அவரை வரவேற்று உபசரிக்கவில்லை. அதனால் முனிவருக்கு கோபம் வந்தது. அங்கிருந்து புறப்பட்டு கைலாசம் வந்தார். அங்கு சிவன், பார்வதியுடன் அமர்ந்திருந்தார். முனிவரைக் கண்டு கோபம் கொண்டு, அவரைக் கொல்ல முயல, பார்வதி சிவனை தடுத்து நிறுத்தினாள். அங்கிருந்து ப்ருகு முனிவர் வைகுண்டத்திற்கு சென்று, அங்கு அவரும் வரவேற்காததால், ஸ்ரீமன் நாராயணனின் மார்பில் எட்டி உதைத்தார். உடனடியாக நாராயணன் அவரை வரவேற்று, அர்க்ய பாத்யாதிகளால் உபசரித்தார். இதனைக் கண்ட ப்ருகு முனிவர், ஸ்ரீ நாராயணனே சர்வோத்தமன் என்று அறிவித்தார். இப்படியாக ப்ருகு முனிவரை கருணையுடன் வரவேற்று உபசரித்த நாராயணனே, உனக்கு என் நமஸ்காரங்கள். இந்த விஷயம் ஸ்ரீமத் பாகவதம் பத்தாவது ஸ்கந்தத்தில் வருகிறது.

சரஸ்வத்யாஸ்தடே ராஜன் ருஷய: சத்ரமாஸத |
விதர்க: சமபூத்தேஷாம் த்ரிஷ்வதீகேஷுகோ மஹான் ||
தஸ்ய ஜிக்ஞாசயா தே வை ப்ருகும் ப்ரஹ்மசுதம் ந்ருப |
தஜ்ஜக்ஞேப்தை ப்ரேஷயாமாஸு: சோப்யகாத் ப்ரஹ்மண: ஸபாம் ||
ந தஸ்மை ப்ரஹ்வணம் ஸ்தோத்ரம் சக்ரே சத்வ பரீக்ஷயா |
தஸ்ம்யை சுக்ரோத பகவான் ப்ரஜ்வலன் ஸ்வேன தேஜஸா ||
தத: கைலாஸமகமத் ஸ தம் தேவோ மஹேஸ்வர: |
பரிரப்தும் சமாரேபே உத்தாய ப்ராதரம் முதா ||
நைச்சத்வ மஸ்யுத்வதகம் இதி தேவஸ்சுகோபஹ |

சூலமுத்யம்ய தம் ஹந்துமாரேபே திக்மலோசன: ||
பதித்வா பாதயோர்தேவி ஸாந்த்வயாமாஸ தம் கிரா |
அதோஜகாம வைகுண்டம் யத்ர தேவோ ஜனார்த்தன: ||
ஷயானம் ஸ்ரிய உஸங்கே ததா வக்ஷஸ்யதாடயத் |
தத உத்தாய பகவான் சஹலக்ஷ்ம்யா சதாங்கதி: ||
ஸ்வதஸ்பாதவருஹ்ய அத நனாம ஷிரஸா முனிம் |
ஆஹ தே ஸ்வாகதம் ப்ருஹ்மன் நிஷீதத்ராஸனேக்ஷணம் ||

இவ்வாறு ப்ருகுமுனிகளுக்கு கருணை வழங்கிய ஸ்ரீமன் நாராயணனே, உனக்கு என் நமஸ்காரங்கள்.

கௌதம ரிஷிகளின் சாபத்தினால் அகல்யை ஒரு கல்லாக மாறி பின், ஸ்ரீராமனின் பாதங்கள் பட்டதால் சாப விமோசனம் ஆன கதை, ஸ்ரீமன் மகாபாரத தாத்பர்ய நிர்ணயத்தில் விளக்கப்பட்டிருக்கிறது. ஸ்ரீபத்ம புராணத்தின்படி, ஸ்ரீராமனின் பாதம் பட்டதாலேயே அகலிகைக்கு சாபவிமோசனம் கிடைத்தது என்று தெரிய வருகிறது. அதையே ஸ்ரீதாசரும் இங்கு சொல்லியிருக்கிறார்.

தாத்பர்ய நிர்ணயத்தின் ஸ்லோகம் (4-10).

அதோ2 அஹல்யாம் ப1தினாபி4ஷப்தா1ம்
ப்ரத4ர்ஷணாதி3ந்த்3ர க்ருதா1ச்சிலே க்1ருதா1ம் |
ஸ்வத3ர்ஷனானாம்னுஷதா1முபே1தா1ம்
சுயோஜயாமாஸ ஸ கௌ3த1மேன ||

பத்மபுராணத்தில் அகல்யையின் கதையை எப்படி வர்ணித்திருக்கின்றனர் என்பதை கவனிக்க வேண்டும்.

க3ச்சத1ஸ்த1ஸ்ய ராமஸ்ய பாதா3ஜ்ஜேன மஹாத்மன: |
அபூ4த் ஸுரூபா வனிதா1 சமாக்1ராந்தா1 மஹாஷிலா ||
ஷாபத3க்தா4 புராப4ர்த்ரா கௌ3த1மேன த்3விஜன்மனா |
அஹல்யா ரகு4நாத4ஸ்ய பாத3ஸ்பர்ஷாத் ஷுபா4sப4வத் ||
(பத்மபுராண உத்தரகண்ட 242-134)

ஸ்ரீபத்ம மகாபுராணத்தின் வாக்கியத்தின்படி அஹல்யை, ஸ்ரீராமனின் பாத ஸ்பர்ஷம் ஆனதாலேயே சாப விமோசனம் பெற்றாள் என்று சொல்லியிருப்பதை அறியவேண்டும்.

மக2வரக்ஷிஸி ராஜ ரிஷிக3பீ4ஷ்டெயனித்தெ1
நாராயணாய நமோ நாராயண
மக1ரத்4வஜாரி த3னு முரித3வனிஜேஷ
நாராயணாய நமோ நாராயண ||8

நாராயணனே. நீ விஸ்வாமித்ர ராஜரிஷியின் யாகத்தை பாதுகாத்து அவரின் விருப்பத்தை நிறைவேற்றினாய். அத்தகைய உனக்கு நமஸ்காரங்கள். மகரத்வஜ என்றால் மன்மதன். அவனின் எதிரி சிவன். இவரின் தனுஸ்ஸை முறித்து, அவனிஜா என்றால் சீதையை ஏற்றுக்கொண்ட அந்த ராமரூபனான நாராயணன். இத்தகைய நாராயணனுக்கு நமஸ்காரங்கள்.

ஸ்ரீராமன் விஸ்வாமித்ர ராஜரிஷியின் யக்ஞத்தை காத்த விஷயத்தை ஸ்ரீமதாசார்யர், மகாபாரத தாத்பர்ய நிர்ணயத்தில் இவ்வாறு சொல்லியிருக்கிறார்.

தே1னார்த்தி4தோ1 யக்ஞரிரக்ஷயைவ
க்1ருச்4ரேண பி1த்ராஸ்ய ப4யாத்3விஸ்ருஷ்ட1: ।
ஜகா3ம ராம: ஸஹ லக்ஷ்மணேன
ஸித்தா4ஷ்ரமம் ஸித்த4 ஜனாபி4வந்த்3ய: ॥ (4-5)

விஸ்வாமித்ரரால் தமது யாகத்தை காக்க வேண்டும் என்று வேண்டப்பட்ட ஸ்ரீராமன், அவனின் தந்தையான தசரதனால், விஸ்வாமித்ரர் சபிக்கக்கூடும் என்னும் பயத்தால், மிகவும் கஷ்டப்பட்டு அனுப்பப்பட்டு, லட்சுமணனுடன் சித்தாஸ்ரமத்திற்கு வந்தான். அனைவராலும் பூஜிக்கப்பட்ட அவன் மகாமஹிமன் ஆவான்.

அதோ2 ஜகா4னாஷு ஷரேண தா1டகா1ம்
வராத்3 விதா4து1ஸ்த1த3ன்ய வத்4யாம் ।
ரரக்ஷயக்ஞம் ச முனேர்னிஹத்1ய
சுபாஹு மீஷானகி3ரா விம்ருத்1யம் ॥ (4-7)

பின்னர் ஸ்ரீராமன், பிரம்மதேவரின் வரத்தினால் அனைவரையும் (ஸ்ரீராமனைத் தவிர) வென்ற தாடகையை ஒரே பாணத்தினால் அனாயாசமாகக் கொன்றான். ருத்ரதேவரின் சாபத்தினால் சாகா வரம் பெற்றிருந்த சுபாஹுவையும் கொன்று, விஸ்வாமித்ரரின் யக்ஞத்தை காப்பாற்றி அவரின் விருப்பத்தை நிறைவேற்றினான். இத்தகைய ராமரூபி ஸ்ரீநாராயணனுக்கு என் நமஸ்காரங்கள்.

இந்த ஸ்ரீராமனே சிவதனுஸை முறித்து அவனிஜா எனப்படும் சீதாதேவியை மணம் புரிந்தான். ஸ்ரீமகாபாரத தாத்பர்ய நிர்ணயத்தில் இவ்விஷயம் இவ்வாறு விளக்கப்பட்டுள்ளது.

சமத்4யத1ஸ்த1த் ப்ரவிப4ஜ்யலீலயா
யதே4க்ஷுத3ண்ட3ம் ஷத1மன்யகு1ஞ்ஜர: ।
விலோக1யன் வக்த்ர ம்ருஷேரவஸ்தி4த1:
ஸலக்ஷ்மண: பூர்ணத1னுர்யதா4 ஷஷே ॥ (4-26)

இந்திரனின் ஐராவதமானது கரும்பை எப்படி உடைக்குமோ, அப்படியாக ஸ்ரீராமன், சிவதனுசை நடுவில் பிடித்து முறித்தான். லட்சுமணனுடன் விஸ்வாமித்ர

முனிவரின் முகத்தைப் பார்த்து, 16 கலைகளுள்ள பூர்ண சந்திரனைப் போல புன்னகைத்து நின்றான்.

தாமரை மலர் மாலையைப் பிடித்த சீதாதேவி, ஸ்ரீராமனிடம் வந்து அவனின் கழுத்தில் அந்த மாலையை அணிவித்தவளாகி, அவனின் இடப் புறத்தில் நின்றாள். ரமேஷனான ஸ்ரீஹரியை மகாலட்சுமியான சீதை அடைந்து, அனைத்து உலக மக்களுக்கும் மகிழ்ச்சியைக் கொடுத்தாள்.

இத்தகைய ராமரூபி ஸ்ரீமன் நாராயணனுக்கு என் நமஸ்காரங்கள்.

ஷுப4க1பீ1ஷெகெ3 அப4ய வரவித்து4 கை1பிடிதே3
நாராயணாய நமோ நாராயண |
ஷுப4க1ண்ட2னஞ்சிகெ1ய ஹனும ஹேளலு க1ளெதெ
நாராயணாய நமோ நாராயண ||9

ராமாயணத்தில் சுக்ரீவனுக்கு அபயம் அளித்து அவனுக்கு கைகொடுத்து உதவிய நாராயணா உனக்கு நமஸ்காரங்கள். ரிஷ்யமூக பர்வதத்திற்கு வந்த ஸ்ரீராம லட்சுமணர்களை, சுக்ரீவன் எதிரியின் ஆட்கள் என்று தவறாக நினைத்தபோது, உண்மையை அறிந்த அனுமன், அருகில் வந்து நட்பு பாராட்டினார். பின்னர், ஸ்ரீராமன் வாலியைக் கொன்று சுக்ரீவனுக்கு அரசாட்சியைக் கொடுத்தான். இத்தகைய ஸ்ரீராமரூபி நாராயணனே உனக்கு நமஸ்காரங்கள்.

ஸ்ரீராமன் சுக்ரீவனுக்கு அபயம் அளித்து காப்பாற்றிய விஷயத்தை, மகாபாரத தாத்பர்ய நிர்ணயத்தில் ஸ்ரீமதானந்த தீர்த்தர் விளக்கியிருக்கிறார்.

தே3ஹேபி1 யத்1ர ப1வனோsத்1ர ஹரிர்யதோ1sஸௌ
தத்1ரைவ வாயுரிதி வேத3வச: ப்ரஸித்த4ம் |
'க1ஸ்மின்வஹம்' த்1விதி1 ததை2வ ஹி ஸோsவதா1ரே
தஸ்மாத் ஸ மாருதிக்1ருதே1 ரவிஜம் ரரக்ஷ || (5-46)

அனைத்து ஜீவர்களிலும், எங்கெல்லாம் வாயுதேவர் இருக்கிறாரோ அங்கெல்லாம் ஸ்ரீஹரியும் நிலைத்திருக்கிறார். மேலும் எங்கு ஸ்ரீஹரி இருக்கிறாரோ அங்கு வாயுதேவரும் இருக்கிறார் என்று வேத வசனங்கள் சொல்கின்றன. 'கஸ்மின்வஹம் து' என்பதே அந்த வேத வசனம். அவதாரங்களின் சந்தர்ப்பத்திலும் இது இப்படியே நடக்கிறது. ஸ்ரீராமதேவர், வாயுபுத்ரனான அனுமனுக்காக சூர்யபுத்ரனான சுக்ரீவனை காப்பாற்றினார். இத்தகைய நாராயணனுக்கு நமஸ்காரங்கள்.

ரிஷ்யமூக பர்வதத்திற்கு வந்த ராமலட்சுமணர்களைக் கண்ட சுக்ரீவன், அவர்கள் வாலியின் ஆட்களாக இருக்கக்கூடும் என்று சந்தேகப்பட்டான். அது மட்டுமல்லாமல், பயத்தினால் இதர வானரங்களுடன் சூர்ய புத்ரனான சுக்ரீவன்

ஓடத்துவங்கினான். வாயுபுத்ரனான மாருதி, அவர்கள் அனைவரையும் தடுத்து நிறுத்தினார். இதை இந்த ஸ்லோகத்தில் பார்க்கலாம்.

ஸமாக3தே து1 ராக4வே ப்லவங்க3மா: ஸஸூர்யஜா: |
விபு1ல்பு1வுர்ப4யார்த்திதா1 ந்யவாரயஸ்ச மாருதி: || (தாத்பர்ய நிர்ணய்ம் 5-50)

பின்னர், சுக்ரீவன், வாலியைக் கொன்று தான் அரசாள்வதற்கு உதவி புரியுமாறு ஸ்ரீராமனிடம் வேண்ட, அதன்படியே ஸ்ரீராமன் தன் பாணத்தினால் இந்திர புத்ரனான வாலியைக் கொன்றார்.

ஆக3 இந்த்3ராத்மஜோ கி3ரிரிவாபத1தா3ஷு நன்ன: || (6-18)

உடன் இந்திரபுத்ரனான வாலி கீழே விழுந்து மடிந்தான். இப்படியாக ஸ்ரீராமன், சுக்ரீவனின் பயத்தைப் போக்கி அவனை காப்பாற்றினார். இத்தகைய ராமரூபி நாராயணனுக்கு என் நமஸ்காரங்கள்.

ஷருணு ஹொக்கி1ரெ விபீ4ஷணக3ரஸுத1ன கொட்டெ
நாராயணாய நமோ நாராயண
ஷரதி3 ராவணனரிது ஸுரர சங்க1ட ஹரிதெ3
நாராயணாய நமோ நாராயண ||10

ராவணனின் தம்பியான விபீஷணன், ஸ்ரீராமனிடம் சரணடைந்தபோது, ஸ்ரீராமன் அவரை 'பாவி-லங்காதிபதி' (இலங்கையின் எதிர்கால அதிபதி) என்று சொல்லி வரவேற்றார். இத்தகைய ஸ்ரீராமரூபி நாராயணனே உனக்கு நமஸ்காரங்கள். பின்னர் ராம ராவண யுத்தம் நடந்தபோது, அந்த யுத்தத்தில் ஸ்ரீராமன் ஒரே பாணத்தினால் ராவணனைக் கொன்று, அனைத்து தேவதைகளின் சங்கடங்களையும் தீர்த்தார். இத்தகைய ஸ்ரீராமரூபி நாராயணனே உனக்கு நமஸ்காரங்கள்.

தேவதேவனான ஸ்ரீராமன் தெற்குக் கடற்கரைக்கு வந்தபோது, ராவணனின் தம்பியான விபீஷணன் அங்கு வந்து ஸ்ரீராமனிடம் சரணடைந்தார். அப்போது அனுமன் 'இந்த விபீஷணன் ஸ்ரீராமனின் சரணங்களில் விழுந்து பக்தனாகியிருக்கிறார். அதற்கு இவர் தகுதி பெற்றவராகவும் இருக்கிறார். ராவணன் நாசமடையப் போகிறான் என்று அறிந்திருக்கிறார்' என்று கூறினார். இந்த விஷயம் தாத்பர்ய நிர்ணய ஸ்லோகத்தில் இவ்வாறு விளக்கப்பட்டிருக்கிறது.

அத்1ராஹ ரூப1மப1ரம் ப3லதே3வதா1யா:
க்3ராஹ்ய: ச ஏஷ நித1ராம் ஷரணம் ப்ரப1ன்ன: |
ப4க்தஸ்ச ராம பத3யோர்வினஷிஷ்ணு ரக்1ஷோ
விக்ஞாய ராஜ்யமுபபோ4க்1துமிஹாபி4யாத1: || (8-5)

அனுமன் இப்படி சொன்னதும், அதற்கு ஸ்ரீராமன் இவ்வாறு கூறினார்.

இத்1யுக்தவத்யத2 ஹனூமதி1 தே3வதே3வ:
சங்க்3ருஹ்ய தத்3வசனமாஹ யதை2வபூ1ர்வம் ।
சுக்ரீவ ஹேது1த1 இமம் ஸ்தி1ரமாக்ரஹிஷ்யே
பா1த3ப்1ரப1ன்னமித3மேவ ஸதா3வ்ரத1ம் மே ॥ (8-6)

முன்னர் செய்ததைப் போலவே, சுக்ரீவனின் விஷயத்தில் அனுமனின் வார்த்தைகளை ஒப்பி, ஸ்ரீராமன் ‘என்னை சரணடைந்த சுக்ரீவனை நான் ஏற்றுக் கொள்கிறேன். இதுவே என் விரதம்’ என்றார்.

இங்கு வால்மிகி ராமாயணத்தின் ஸ்லோகத்தை நினைவு கூறலாம்.

ஸக்1ருதே3வ ப்1ரப1ன்னாய த1வாஸ்மீதி1 ச யாசதே1 ।
அப4யம் சர்வபூ4தேப்4யோ த3தா3ம்யேத1த்1 வ்ரத1ம் மம ॥ (6-18-33)

பின்னர் விபீஷணனை இலங்கையின் அதிபதியாக அமர வைத்த விஷயம் இவ்வாறு வருகிறது.

இத்1யுக்த1வாக்1ய உத1 த1ம் ஸ்வஜனம் விதா4ய
ராஜ்யேப்4யஷேசயதபா1ரஸு ஸத்1வராஷி: ।
மத்1வா த்1ருணோப1மம சேஷசத3ந்தக1ம் த1ம்
ரக்ஷ: ப1தே1ஸ்த்வவரஜஸ்ய த3தௌ3ஸ லங்கா1ம் ॥ (8-8)

ஸ்ரீராமன் விபீஷணனை தனது நண்பனாக ஏற்றுக்கொண்டு அவருக்கு ராஜ்யாபிஷேகம் செய்தார். அவரே இலங்கையின் வருங்கால அதிபதி என்று அறிவித்தார்.

பா3ணேன வஜ்ரஸத்3ருஷேன ஸ பி4ன்னஹ்ருத்கோ1
ரக்த1ம் வமன் ந்யப1த3தா3ஷு மஹாவிமானாத்1 ॥ (8-210)

ஸ்ரீராமன் தனது பாணத்தால் ராவணனின் மார்பை கிழித்தார். ராவணன், தனது பெரிய ரதத்திலிருந்து கீழே விழுந்தான். இதனால் தேவதைகள் தமது சங்கடங்களிலிருந்து விடுதலை பெற்று மகிழ்ச்சி அடைந்தனர். இத்தகைய ராமரூபி நாராயணனுக்கு என் நமஸ்காரங்கள்.

அனுஜனக்3னிகெ3 து4முக1லவதி4 மீரதே3 பொ1ரெதெ3
நாராயணாய நமோ நாராயண ।
அனிமிஷர நிக1ரக1தி1 ஆஹ்லாத3 பெ3ளெயிஸிதெ3
நாராயணாய நமோ நாராயண ॥11

தனது 14 ஆண்டு வனவாசம் முடிந்தவுடன் தான் மறுபடி வந்து அரசாட்சியை ஏற்றுக் கொள்வேன் என்று ராமன், பரதனுக்கு செய்தி சொல்லி அனுப்பினார்.

அதற்கு பரதன், 'அண்ணா, ஒரு வேளை நீ 14 ஆண்டுகள் முடிந்த அடுத்த நாள் ஊருக்கு வரவில்லையெனில், நான் அக்னி பிரவேசம் செய்துவிடுவேன்' என்றிருந்தார். ஆகவே, அனுமன் மூலம் தான் வரும் செய்தியை சொல்லி, தன் மேல் பக்தி கொண்டிருந்த பரதனை காப்பாற்றினார் ஸ்ரீராமன். பின்னர் பல ஆண்டுகளுக்கு அரசாட்சி செய்து, தேவதைகளின் பிரார்த்தனையைப் போலவே வைகுண்டத்திற்கு திரும்பி வந்து அவர்கள் அனைவருக்கும் மகிழ்ச்சியைக் கொடுத்தார்.

14 ஆண்டுகள் வனவாசம் முடிந்த அடுத்த நாள் வந்து ஆட்சியைப் பெற்றுக் கொள்ளாவிடில், பரதன் தான் அக்னிப் பிரவேசம் செய்யப் போவதாக சொல்லியிருந்த காரணத்தால், ஸ்ரீராமன் அனுமனின் மூலமாக செய்தி சொல்லி அனுப்பினார்.

த^{3}த^{3}ர்ஷசாஸௌ ப^{4}ரத^{1}ம் ஹுதா^{1}ஷனம்
ப்^{1}ரவேஷ்டுகா^{1}மம் ஜக^{3}தீ^{3}ஷ்வரஸ்ய ।
அத^{3}ர்ஷனாத்^{1} த^{1}ம் வினிவார்ய ராமம்
சமாக^{3}தம் சாஸ்ய ஷஷஸ்ய மாருதி: ||
(மகாபாரத தாத்பர்ய நிர்ணயம் 8-227)

ஜகதீஷ்வரனான ஸ்ரீராமன், தனது 14 ஆண்டுகள் வனவாசம் முடிந்தபிறகும், அயோத்திக்கு திரும்ப வரவில்லை என்று சொல்லி, அக்னி பிரவேசம் செய்வதற்கு தயாரான பரதனைக் கண்டார் அனுமன். உடனடியாக அவரைத் தடுத்து, ஸ்ரீராமன் வந்துகொண்டிருக்கும் செய்தியை கூறினார்.

ஷ்ருத்^{1}வா ப்^{1}ரமேதோ^{3}ருப^{4}ர: ஸ தே^{1}ன
ஸஹைவ பௌ^{1}ரை: ஸஹித^{1}: ஸமாத்^{1}ருக^{1}: ।
ஷத்^{1}ருக்^{4}னயுக்தோ^{1}sபி^{4}ஸமேத்^{1}ய ராக^{4}வம்
நநாம பா^{3}ஷ்யாகு^{1}லலோசனானன: || (8-228)

அனுமனின் பேச்சைக் கேட்டவுடன் பரதன் மட்டற்ற மகிழ்ச்சி கொண்டான். தனது தாய்கள், சத்ருக்னன் மற்றும் நகரத்து மக்களுடன் சேர்ந்து பரதன், ஸ்ரீராமனை எதிர்கொண்டான். மிகுந்த மகிழ்ச்சியில் கண்ணீர் நீர் பெருகி, அன்றே மலர்ந்த தாமரை மலர் போன்ற முகத்தைக் கொண்ட ஸ்ரீராமனை வணங்கினான்.

பு^{1}ரீம் ப்^{1}ரவிஷ்ய முனிபி^{4}: சாம்ராஜ்யேசாபி^{4}ஷேசித: || 8-230

திட்டமிட்டபடி ஸ்ரீராமன் அயோத்தி நகரத்தில் பிரவேசித்து, முனிவர்களால் பட்டாபிஷேகம் செய்து கொண்டார். பரதனையும் மகிழ்ச்சிப்படுத்தினார். இத்தகைய ராமரூபி நாராயணனுக்கு என் நமஸ்காரங்கள்.

அனைத்து தேவதைகளும், ஸ்ரீராமனை மறுபடி வைகுண்டத்திற்கு வரவேண்டும் என்று பிரார்த்தித்து, அதற்காக ருத்ரதேவரை அவரிடம் அனுப்பி இந்த செய்தியை தெரியப்படுத்தினர்.

ருத்3ரம் ஸ்வலோக1க3மனாய ரகூ4த்த1மஸ்ய
ஸம்ப்ரார்த்த4னே ஸ ச ஸமீத்1ய விபு4ம் யயாசே || (9-45)

தேவதைகளின் பிரார்த்தனைக்கேற்ப ஸ்ரீராமன் பரந்தாமத்திற்கு திரும்ப நிச்சயித்து, தன் மகனான குசனை அரசனாக்கி, லவனை இளவரசனாக அமர்ந்தினார். ரகுவம்சத்தில் தலைசிறந்தவனான ஸ்ரீராமன், தமது ஒரு ரூபத்தினால் ஸ்வர்க்க லோகத்தில் தேவதைகளால் பூஜிக்கப்படுமாறு நிலைத்தான். இரண்டாவது ரூபத்தால் சத்யலோகத்தில் நிலைத்தான். மூன்றாவது ரூபத்தினால் தம்மிடமான ஸ்வேதத்வீபத்தில் நிலைத்து, அனைத்து தேவதைகளின் சமூகத்திற்கும் மகிழ்ச்சியை உண்டுபண்ணினார்.

உரினுங்கி3 கி3ரினெக3ஹி வ்ரஜவ பா1லனெ மாடிதெ3
நாராயணாய நமோ நாராயண
உரக1னெளெத1ந்த3வன ராணியர ஸ்துதி1கொ3லிதெ3
நாராயணாய நமோ நாராயண ||12

இந்த பத்யத்தில் ஸ்ரீகிருஷ்ணாவதாரத்தில் ஸ்ரீஹரி செய்த மகிமைகளை வர்ணித்து, அத்தகைய நாராயணனே உனக்கு நமஸ்காரங்கள் என்கிறார் ஸ்ரீதாசர்.

ஸ்ரீகிருஷ்ணன் காட்டுத்தீயை உண்டான். தொடர்ச்சியாக ஏழு நாட்கள் இந்திரன் மழையைக் கொடுக்க, ஸ்ரீகிருஷ்ணன் கோவர்த்தனகிரியை தூக்கிப் பிடித்து கோகுலத்தை காப்பாற்றினான். காளிங்கன் யமுனை நீரினை விஷமாக முயன்றபோது, ஸ்ரீகிருஷ்ணன் அனைத்து கோபாலகர்களுடன் யமுனைக்கு வந்து, காளிங்கனின் தலைமேல் குதித்து ஆட, அவன் ரத்தம் கக்கத் துவங்கினான். அப்போது அவனின் மனைவியர் ஸ்ரீகிருஷ்ணனிடம் வந்து வேண்ட, ஸ்ரீகிருஷ்ணனும் காளிங்கனை மன்னித்து அங்கிருத்து வெளியேற்றினான். இத்தகைய ஸ்ரீகிருஷ்ணரூபி நாராயணனே உனக்கு நமஸ்காரங்கள்.

ஸ்ரீகிருஷ்ணன் காட்டுத்தீயை உண்ட (குடித்த) கதை இதுவே.

ஒருமுறை ஸ்ரீகிருஷ்ணனுடன் கோபாலகர்கள் அனைவரும் தத்தம் இடங்களுக்குப் போகாமல் ஒரு இரவில் யமுனா நதிக்கரையில் தங்கினர். அது கோடைக்காலம். மரங்கள் அனைத்தும் காய்ந்திருந்தன. நடுநிசியில் காட்டுத்தீ பரவியது. அங்கிருந்தவர்களை தீ சுற்றிக்கொண்டு சுடத் தொடங்கியது. அனைவரும் எழுந்து - கிருஷ்ணா, முகுந்தா, எங்களை இந்த காட்டுத்தீயிலிருந்து காப்பாற்று - என்று வேண்டினர். அப்போது ஸ்ரீகிருஷ்ணன் :

இத்த2ம் ஸ்வஜன வைக்1லவ்யம் நிரீக்1ஷ ஜகதீ3ஷ்வர: |

தமக்னி3மபி1ப3த்தே1வ்ர மனந்தோ1ऽனந்த1 ஷக்தித்ரு³க்1 || (10-17-25)

ஜகதீஷ்வரனான ஸ்ரீகிருஷ்ணன், தன் மக்கள் கஷ்டப்படுவதைக் கண்டு, அந்த பயங்கர காட்டுத்தீயை குடித்து முழுங்கினான்.

கோபாலகர்கள் அனைவரும், இந்திரனை மகிழ்விக்க ஆண்டுக்கொருமுறை கோவர்த்தன பூஜையை செய்து வந்தனர். ஒருமுறை ஸ்ரீகிருஷ்ணன், இந்திரனின் பூஜையை வேண்டாம் என்று சொல்லி, அனைவரும் தன்னை பூஜிக்குமாறு சொல்ல, அவர்கள் கொடுத்த அன்னாதி பலிகளை தானே ஸ்வீகரித்தான். ஸ்ரீகிருஷ்ணனின் பேச்சைக் கேட்டு, மக்கள் அனைவரும் தன் பூஜையை நிறுத்தியதைக் கண்டு கோபமடைந்த இந்திரன் இவ்வாறு கூறினான்.

பா1சா1லயம் மானித1ம் மத்த1ம் அக்ஞும் ப1ண்டித1மானினம் |
கிருஷ்ணம் மர்த்யமுபாஸ்ரித்1ய கோ3பா1 மே சக்1ருரப்1ரியம் ||
(ஸ்ரீமத் பாகவதம் 10-23-5)

இந்த கோபாலகர்கள், எதுவும் தெரியாத பண்டிதனைப் போலிருக்கும் ஸ்ரீகிருஷ்ணனிடம் போய் உதவி கேட்டிருக்கிறார்கள் என்று சொல்லியவாறு, ஸ்ரீகிருஷ்ணன் சாக்ஷாத் நாராயணனின் அவதாரமே என்பதை மறந்து, மிகுந்த கோபத்துடன் அந்த கோகுலத்தை அழிப்பதற்கு, பிரளய காலத்து வெள்ளத்தைப் போல மழையை வரவழைத்தான்.

இத்தகைய பெரிய மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட கோபாலகர்கள், தங்கள் காப்பாற்றுமாறு ஸ்ரீகிருஷ்னனிடம் பிரார்த்தனை செய்தனர்.

கரேண்யைகேன லீலயா புஷ்கரம் கஜராடிவ பிப்ரத் || தன் ஒரே கையினால் அந்த கோவர்த்தன பர்வதத்தை தூக்கி, அனைத்து கோபாலகர்களையும் காப்பாற்றினான் ஸ்ரீகிருஷ்ணன். அவர்களை மகிழ்வித்தான்.

யமுனா நதியில் காளிங்கன் என்னும் பாம்பு வசித்து வந்த காரணத்தால், அந்த நீர் கோபாலகர்கள், பசுக்கள் குடிப்பதற்கு லாயக்கற்றதாக ஆனது. விஷமானதை அறியாமல் அந்த நீரைக் குடித்த பசுக்கள் இறந்தன. இத்தகைய பிரச்னைகளை தீர்ப்பதற்கு, கருடவாகனான ஸ்ரீகிருஷ்ணன், கோபாலகர்களுடன் அந்த யமுனை நதிதீரத்திற்கு வந்து அந்த ஆற்றின் பக்கத்திலிருந்த ஒரு மரத்தின் மீதேறி, அங்கிருந்து யமுனையில் குதித்தான். நீரில் விழுந்து நீச்சலடித்த புருஷோத்தமனான ஸ்ரீகிருஷ்ணனை கடிக்க வேண்டுமென்று காளிங்கன் வந்தான். அப்போது ஸ்ரீகிருஷ்ணன் அந்த காளிங்களைப் பிடித்து அதன் மீதேறி, அதன் வாலினைப் பிடித்து நடனமாடத் துவங்கினான்.

அனீனதத்1 பத்மப4வோ ம்ருத3ங்க3ம் ஜகௌ3 ஹனூமான் ஜகதா1மதீ4ஷம் |
அத3ர்ஷயத்1 தா1லக3தி1: கபர்தீ3 நனர்த1 கோபாலக பா3லமௌலி: ||
(ருக்மிணீச விஜயம் 4-68)

ஸ்ரீகிருஷ்ணன் நடனமாடத் துவங்கியபோது, பத்பனாபனான நான்முக பிரம்மன், மிருதங்கம் வாசித்தார். அனுமன் ராகத்துடன் பாடினான். ருத்ரர் ராகத்திற்கேற்ப தாளம் தட்டினார்.

குதித்து நடனமாடிய ஸ்ரீகிருஷ்ணனின் நாட்டியத்தால், காளிங்கனின் உடம்பிலிருந்து ரத்தம் வரத்துவங்கியது. இதைப் பார்த்த அவனின் மனைவியர், ஸ்ரீகிருஷ்ணனை நமஸ்கரித்து, தங்களுக்கு தாலி பாக்கியத்தை வழங்குமாறு வேண்டினர்.

அனுக்3ருண்ஹீஷ்வ ப4க3வான் பிராணாம்ஸ்த்யஜதி1 பன்னக3: |
ப்1ரீணாம் ந: ஸாது4 ஷோச்யானாம் ப1தி: பி1ராண: ப்1ரதீ3யதா1ம் ||
(ஸ்ரீமத் பாகவதம் 10-16-52)

அப்போது கருணா சமுத்ரனான ஸ்ரீகிருஷ்ணன் அவர்களின் ஸ்தோத்திரங்களுக்கு செவிசாய்த்து, அவர்களுக்கு மகிழ்ச்சியளித்து, காளிங்கனை ரமணக தீவிற்கு அனுப்பினான்.

க்1ரது நாரியரன்னு சவிது3ண்டு சுக2வித்தெ1
நாராயணாய நமோ நாராயண
க்1ரது போ4க்த்ரு க்1ரதுகா3த்ர க்1ரதுபா1ல க்1ரதுஷீல
நாராயணாய நமோ நாராயண ||13

ஸ்ரீகிருஷ்ணன் ஒரு முறை தன் அண்ணன் பலராமன் மற்றும் கோபாலகர்கள், பசுக்களுடன் காட்டிற்குச் சென்றிருந்தான். அப்போது கோபாலகர்கள், 'ஸ்ரீகிருஷ்ணா! எங்களுக்கு பசிக்கிறது. சாப்பிட ஏதாவது கொடு' என்றனர். அதற்கு ஸ்ரீகிருஷ்ணன் 'இங்கேயே பக்கத்தில் பிராமணர்கள் யக்ஞம் செய்து கொண்டிருக்கின்றனர். அவர்களிடம் சென்று அண்ணன் பலராமனின் பெயர் சொல்லி உணவு கேட்கவும்' என்றான். பிராமணரும் அவ்வாறே செய்தனர். ஆனால், அவர்கள் எதையும் கொடுக்காமல் திருப்பி அனுப்பிவிட்டனர்.

அதற்கு ஸ்ரீகிருஷ்ணன், இப்போது அந்த பிராமணர்களின் மனைவியரிடம் சென்று, என் (கிருஷ்ணனின்) பெயரைச் சொல்லி உணவு கேட்கவும் என்றான். அப்படியே செய்தபோது, உடன் அவர்கள் நான்கு விதமான உணவுகளை (பக்ஷ, போஜ்ய, லேஹ்ய, பேய) கொண்டு வந்து ஸ்ரீகிருஷ்ணனுக்கு அர்ப்பித்தனர்.

சது1ர்வித4ம் பஹுகு3ணமன்னமாதா3ய பா4ஜனை: |
அபி4ஸஸ்ரு: ப்1ரியம் ஸர்வா: ஸமுத்3ரமிவ நிம்மகா3: || (10-23-19)

பிராமணர்களின் மனைவியர் பக்தியுடன் அர்ப்பித்த உணவினை ஸ்ரீகிருஷ்ணன் அனைத்து கோபாலகர்களுக்கும் கொடுத்து, தானும் உண்டு, அவர்களுக்கு அருளி

சுகத்தைக் கொடுத்தான். இத்தகைய ஸ்ரீகிருஷ்ணரூபி நாராயணனே உனக்கு நமஸ்காரங்கள்.

கோ[3]ப[1]ஸ்த்[1]ரீயர கு[1]சதி ந்யஸ்த[1] சரணாப்[3]ஜயுக[3]
நாராயணாய நமோ நாராயண |
கோ[3]பீ[1]ஜனஜார நவனீத[1] த[3]தி[4]சோர
நாராயணாய நமோ நாராயண ||14

ஸ்ரீகிருஷ்ணன், கோபிகா ஸ்த்ரியருடன் ராஸக்ரீடை செய்யவேண்டுமென்று எண்ணி தான் மிகவும் ரம்மியமான வேணுகானத்தை வாசித்தான். அந்த இசைக்கு மயங்கிய அனைத்து கோபியர்களும், அவரவர் வீட்டு வேலைகளை அப்படியே விட்டு, ஸ்ரீகிருஷ்ணனிடம் ஓடி வந்தனர். ஸ்ரீகிருஷ்ணன் அவர்களிடம் - 'நீங்கள் வந்த காரணம் என்ன? ஏற்கனவே இருட்டாகிவிட்டது. நீங்கள் திரும்பி வீட்டிற்கு செல்லுங்கள். உங்களைக் காணாத தந்தை, தாய், சகோதரர், கணவர், மக்கள் உங்களை தேடிக் கொண்டிருக்கலாம். அவர்களை பயப்படுத்துவது நல்லதல்ல. ஆகவே திரும்பிச் செல்லுங்கள்' என்றான்.

ஸ்ரீகிருஷ்ணனின் இந்த பேச்சினைக் கேட்ட கோபிகா ஸ்த்ரீயர் துக்கமடைந்தனர். 'பாவங்களைப் போக்கும் பரமேஸ்வரனே! உனக்கு சேவை செய்யவேண்டுமென்ற ஆசையில் நாங்கள் வீடு, கணவன், மக்கள், உறவுகளை விட்டு வந்திருக்கிறோம்' என்று அவர்கள் சொல்ல, ஸ்ரீகிருஷ்ணனும் அவர்களுடன் ராசக்ரீடையை துவக்கினான். இப்படி இருக்கையில், அந்த கோபிகையர்களுக்கு தங்களின் அழகினை நினைத்து கர்வம் உண்டாயிற்று. அந்த கர்வத்தைப் போக்குவதற்காக ஸ்ரீகிருஷ்ணன் திடீரென்று மறைந்தான். ஸ்ரீகிருஷ்ணனைக் காணாத கோபிகையர்கள் விரக தாபத்தில் வேதனையடைந்து பாடத் துவங்கினர். அதுவே கோபிகீதை.

ஸ்ரீகிருஷ்ணா! என் துன்பங்கள் அனைத்தையும் தீர்க்க வல்லவன் நீ ஒருவனே. உன் பாதங்களை பற்றியவர்களின் அனைத்து விருப்பங்களையும் நீ நிறைவேற்றுகிறாய். இத்தகைய பாத கமலங்களை எங்கள் இதயத்தில் நிறுத்தி எங்களுக்கு அருள் புரிவாயாக.

சரணப[1]ங்க[1]ஜம் ஷந்த[1]மம் ச தே
ரமணன: ஸ்த[1]னேஷ்வர்ப[1]யாதி[4]ஹன் ||
(ஸ்ரீமத் பாகவதம் 10-31-13)

இதையே ஸ்ரீதாசர் - கோபிஸ்த்ரீயர குசதி ந்யஸ்த சரணாப்ஜயுக - என்று சொல்லியிருக்கிறார். இத்தகைய நாராயணான உனக்கு என் நமஸ்காரங்கள்.

கோபீஜனஜார - கோபிகா ஸ்த்ரீயரின் சம்சார பந்தனத்தை அறுப்பவனாகையால் ஸ்ரீகிருஷ்ணனுக்கு கோபீஜனஜார என்று பெயர்.

ஸ்ரீவியாசராஜர் இவ்வாறு கூறுகிறார்:
ஜாரத்1வவனு மாடித பாபகளிகெல்ல கோபீஜனஜாரனெந்தரெ ஸாலதே ।
சோரத்வவனு மாடித பாபகளிகெல்ல நவனீதசோரனெந்தரெ ஸாலதே ।
க்ரூரத்வவனு மாடித பாபகளிகெல்ல மாவன கொந்தவ எந்தரெ ஸாலதே ।
ப்ரதி திவஸதல்லி மாடித பாபகளிகெல்ல பதிதபாவன எந்தரெ ஸாலதே ।
இந்தி1ப்ப மஹிமெயொளிந்தனாதரு ஒம்மெ
சந்த1த1 நெனெவர ஸலஹுவ சிரிகிருஷ்ண ॥

ஸ்ரீகிருஷ்ணன் வெண்ணெய், தயிர்களைத் திருடி 'நவனீத ததிசோர' என்று அழைக்கப்பட்டான். ஸ்ரீமதாசார்யர், மகாபாரத தாத்பர்ய நிர்ண்யத்தில் இவ்வாறு சொல்கிறார்.

அக்1ருத்யதா1ம் கேஷவோऽனுக்ரஹாய
ஷுப4ம் ஸ்வயோக்யாததி4க1ம் நிஹந்தும் ।
ஸக்1ருத்யதா1ம் நவனீதா1தி3 முஷ்ணம்
ஷச்சார தே3வோ நிஜஸத்சுகா2ம்பு3தி3 : ॥ (12-119)

கோபித்துக் கொள்பவர்களுக்கு அருள் செய்வதற்கும், அவர்களின் அதிகமான புண்ணியங்களை குறைப்பதற்கும் ஸ்ரீகிருஷ்ணன் வெண்ணெய், தயிர் ஆகியவற்றை திருடி வந்தான். இதே விஷயத்தை, ருக்மிணீஷ விஜயத்தில், ஸ்ரீவாதிராஜர் இவ்வாறு சொல்கிறார்.

அதி4க்ஷிப1ந்த்1யாம் ஸுக்1ருதே1ன ஸாக1ம்
த3தீ4னி தீ4ர: ஸ சுசோர சோர: ।
அக3ண்ய பு1ண்யாக்2யத4னானி தா3யீ
ப்ரதா3ய ஸோऽசூசுர தா3னதா1யாம் ॥ (3-36)

ஒரு திருடனைப் போல திரிந்து வந்த ஸ்ரீகிருஷ்ணன், தன்னை திட்டும் கோபிகையர்களின் புண்ணியத்துடன், பால் தயிர்களையும் திருடினான். தன்னை வணங்கியவர்களுக்கு எண்ணிலடங்கா புண்ணியத்தைக் கொடுத்தான்.

ஸ்ரீகிருஷ்ண அஷ்டோத்தர ஷத நாமாவளியில் இவ்வாறு சொல்லியிருப்பதை இங்கு நினைவுகூற வேண்டும்.

நவனீத விலிப்தா1ங்கோ3 நவனீத நடோ1ऽநக4: ।
நவனீத நவாஹாரோ முசுகு1ந்த ப்1ரஸாத3க: ॥
(ஸ்ரீ பிரம்மாண்ட புராணம்)

வம்ஷகா3யன ப்ரிய விது4கு1லோத்ப4வ க்ருஷ்ண
நாராயணாய நமோ நாராயண ।
வம்ஷவர்த4க ஸுஜன வம்ஷமர்த3க கு1ஜன
நாராயணாய நமோ நாராயண ॥15

வம்ஷகாயன ப்ரிய என்றால் வேணுகான ப்ரியன் என்று பொருள். ஸ்ரீகிருஷ்ணனை கோபிகா ஸ்த்ரியர்கள் இவ்வாறு புகழ்கின்றனர் என்று பாகவதம் சொல்கிறது.

ஹந்த1 சித்ரமப3லா: ஷ்ருணுதே1த3ம்
ஹாரஹாஸ உரஸி ஸ்தி4ரவித்3யுத்1 ।
நந்தஸூனுரயமார்த்த1 ஜனானாம்
நர்மதோ3 யர்ஹிகோ1ஜித1வேணு: ॥ (10-35-4)

வ்ருந்த3ஷோ வ்ரஜவ்ருஷா ம்ருக3கா3வோ
வேணுவாத்3ய ஹ்ருத1சேத1ன ஆராத் ।
த3ந்த1த3ஷ்ட க1வலா த்4ருத க1ர்ணா
நித்3ரிதா1 லிகி2த சித்ரமிவாஸன் ॥ (10-35-5)

முத்துப் போன்ற சிரிப்பினைக் கொண்ட, மார்பில் மின்னலைப் போன்ற ஒளியுள்ள லட்சுமிதேவியைக் கொண்ட, திடமான பக்திக்கு சுகத்தைக் கொண்டுப்பவனான, நந்தகோபனின் மகனான ஸ்ரீகிருஷ்ணன் குழலை ஊதத் தொடங்கினால், உடனடியாக ஆங்காங்கே மேயும் பசுக்கள், எருதுகள் அனைத்தும் அந்த குழலோசையில் மெய் மறந்து, மேய்வதை நிறுத்திவிடுகின்றன. பல்லில் கடித்துக் கொண்டிருக்கும் புல்லினை அப்படியே கடிக்காமல், விழுங்காமல், தம் காதுகளை நேராக்கிக் கொண்டு, அப்பாடலைக் கேட்டவாறு அப்படியே நின்றுவிடுகின்றன.

விவித4கோ3ப சரணேஷு விதக்3தோ4
வேணுவாத்ய உருதா4 நிஜஷிக்ஷா: ।
த1வ ஸுத1: ஸதி யதா3த4ரபி3ம்பே3
த3த்த1வேணுரனயத்1ஸ்வர ஜாதீ1: ॥
(ஸ்ரீமத் பாகவதம் 10-35-14)

நவனஷஸ்ததுப1தா4ர்ய ஸுரேஷா:
ஷக்1ர ஷர்வபரமேஷ்டி பு1ரோகா3: ।
க1மல ஆனத1க1ந்த4ர சித்தா1:
க1ஷ்மலம் யயுரனிஸ்சித1த1த்வா: ॥ (10-35-15)

இன்னொரு கோபிகா ஸ்த்ரீ சொல்கிறாள். ‘ஹே யசோதா தாயே. உன் அழகான மகன் கோபாலகர்களுடன் விளையாடுவதில் சமர்த்தன். அவன் அனைவரின் அன்பிற்கும் பாத்திரமானவன். மிகுந்த புத்திசாலி. அவன் யாரிடமும் குழல் ஊதுவதை கற்கவில்லை. ஆனால், அந்த குழலை அவன் உதடுகளில் வைத்தவுடன், பல்வேறு ராகங்கள் தாமாகவே வரத் துவங்குகின்றன. மனதிற்கு ஆனந்தத்தைக் கொடுக்கக்கூடிய அந்த குழலோசையைக் கேட்கும் இந்திர, ருத்ர, பிரம்மனே முதலான தேவதைகள், வித்வாம்சர்கள் என அனைவரும் தம் மனதை ஸ்ரீகிருஷ்னனிடம் பறிகொடுக்கின்றனர்.

இதே விஷயத்தை சுமத்வவிஜயம் இவ்வாறு சொல்கிறது.

கருணாகர: ஸ வஸுதேவ மோத3தோ3
ப4கவான் பு1ரா ஹிமகரான்வயேsப4வத்1 ।
ஜித1வான் தி3ஷோ த3ஷரதோ2sக்3ர்ய ஸம்ப1தோ3
ஜனகோ1 ப3பூ4வ பு4வி யஸ்ய வைரிஹா ॥ (8-19)

யாருடைய ரதமானது பத்து திசைகளிலும் சென்று, எதிரிகளை வென்று, கொன்று, அரிய செல்வங்களைக் கொண்டு வருகின்றதோ, அத்தகைய கருணாளுவான பகவந்தன், த்வாபர யுகத்தின் இறுதியில் சந்திர வம்சத்தில் அவதரித்து வசுதேவனுக்கு மகிழ்ச்சியைக் கொடுத்தான்.

ஸ்ரீகிருஷ்ணன் பகவத்கீதையில் சொல்லியிருப்பதை இங்கு கவனத்தில் கொள்ள வேண்டும்.

ப1ரித்1ராணாய ஸாதூ4னாம் வினாஷாய ச து3ஷ்க்1ருதாம் ।
த4ர்ம ஸம்ஸ்தா1பனார்த்தா1ய ஸம்பவாமி யுகே3 யுகே3 ॥ (4-8)

எப்போதெல்லாம் தர்மம் அழிந்து, அதர்மம் தலைதூக்குகிறதோ, அப்போதெல்லாம் சஜ்ஜனர்களை பாதுகாப்பதற்காகவும், துர்ஜனர்களை கொல்வதற்காகவும் நான் அவதரிப்பேன்.

அக்ரூரவந்த்3ய க1ம்ஸாரி கு1ப்ஜாரமண
நாராயணாய நமோ நாராயண
ஆக்ரந்தி3ஸித3 தந்தெ தாயியர ப4யவளிதெ3
நாராயணாய நமோ நாராயண ॥16

ஸ்ரீகிருஷ்ணன், அக்ரூரரின் அத்யந்த பக்தர். அவனை எப்போதும் வணங்குபவர். துஷ்டனான கம்சன், ஸ்ரீகிருஷ்ண பலராமனை கொல்வதற்காக, தனுர்யாகத்திற்காக அவர்களை அழைத்து வர அக்ரூரரை அனுப்புகிறான். அக்ரூரரும் - இன்று என் பிறவிப்பயனை அடைந்தேன். இன்று என் பாவங்கள் அனைத்தும் நாசமடையப் போகின்றன. யோகிகளுக்கு, தியானத்திற்கு விஷயனான பகவந்தனின் சரணாரவிந்தங்களை நான் இன்று தரிசிக்கப் போகிறேன் என்று சொல்லி மிகுந்த மகிழ்ச்சியுடன் புறப்படுகிறார்.

இப்படியாக சிந்தித்தவாறு அக்ரூரர் நந்தகோகுலத்தை அடைகிறார். ஸ்ரீகிருஷ்ணன், பலராமன் இருக்குமிடத்தை அடைந்தார். சாஷ்டாங்கமாக விழுந்து அவர்களை வணங்குகிறார்.

பிரம்மாண்ட புராணத்தில் ஸ்ரீகிருஷ்ணன் கம்சாரி என்று அழைக்கப்படுகிறார்.

மூஷிகா1ஸுர சாணூரமல்லயுத்த3 விஷாரத3: ।

ஸம்ஸாரவைரி க[1]ம்ஸாரிர் முராரிர் நரகா[1]ந்தக[1]: ||

ஸ்ரீகிருஷ்ணன் மூஷிக, சாணூர இவர்களுடன் போரிடுவதில் வல்லவனாக இருக்கிறான். மேலும் சம்சாரவைரி, கம்சாரி, முர என்னும் அசுரனையும், நரகாசுரனையும் கொன்றவனாகவும் இருக்கிறான்.

ஸ்ரீகிருஷ்ணன், தனுர்யாகத்திற்காக மதுராபுரிக்கு வருகிறான். மறுநாள் காலை, ஸ்ரீகிருஷ்ணன் தோட்டத்தில் ஓய்வெடுத்து, மதிய வேளையில் பலராமன் மற்றும் கோபாலகர்களுடன் மதுராபுரியைப் பார்ப்பதற்கு புறப்பட்டபோது ரஜகனின் சந்திப்பு நிகழ்கிறது. அவனிடம் ஸ்ரீகிருஷ்ணன் வஸ்திரங்களைக் கேட்க, அவன் கொடுக்க மறுப்பதால், அவன் தலையைக் கொய்து, தமக்கு வேண்டிய வஸ்திரங்களை எடுத்துக்கொண்டு முன்னேறுகிறார்கள்.

பின் சுதாமனின் சந்திப்பு. அவன், நல்ல நறுமணமுள்ள பூமாலையை ஸ்ரீகிருஷ்ணனுக்கு அர்ப்பிக்கிறார். ஸ்ரீகிருஷ்ணனும் அவருக்கு நல்ல பக்தியை வழங்கி அருள்கிறான். அடுத்து த்ரிவக்ரையின் சந்திப்பு. அவள் ஸ்ரீகிருஷ்ணனுக்கு நல்ல மணமுள்ள சந்தனத்தைக் கொடுத்து மகிழ்விக்கிறாள். அவள் தேகத்தில் மூன்று இடங்களில் வக்ரமாக (வளைந்து) இருப்பவள். அவளை குப்ஜை என்று அழைத்தனர். ஸ்ரீகிருஷ்ணன் அவள் மேல் கருணை புரிந்து, தன்னுடைய ஸ்பரிசத்தால் அவளை ஒரு அழகிய பெண்ணாக மாற்றுகிறான். பின்னர், ஸ்ரீகிருஷ்ணன் இவளை மணந்து, விஷோக என்னும் மகனைப் பெறுகிறான். ஆகையால், ஸ்ரீகிருஷ்ணனுக்கு குப்ஜாரமணன் என்று பெயர்.

ஸ்ரீகிருஷ்ணன் தன் பெற்றோரான வசுதேவ தேவகியின் பயத்தை போக்கிய விஷயத்தை இந்த நுடியின் மூன்றாவது வரியில் சொல்கிறார் ஸ்ரீதாசர். தேவகியின் வயிற்றில் பிறக்கும் எட்டாவது குழந்தை உன்னைக் கொல்லும் என்று அசரீரி கம்சனை எச்சரித்தபோது, வசுதேவ தேவகி மிகவும் துக்கப்பட்டனர். பிறகு, ஸ்ரீகிருஷ்ணன் கம்சனைக் கொன்று தன் பெற்றோருக்கு உண்டான பயத்தை போக்கினான்.

இத்தகைய ஸ்ரீகிருஷ்ணரூபி நாராயணனுக்கு என் நமஸ்காரங்கள்.

அதி[3]தி[1] கு[1]ண்ட[3]லதா[3]த[1] பகவத்த[1]வரதனெ
நாராயணாய நமோ நாராயண |
அதிபதிகளதிபதியெ பை[4]ஷ்மி ஸத்[1]யாரமண
நாராயணாய நமோ நாராயண ||17

ஒரு முறை நரகாசுரன், அதிதியின் குண்டலங்களை, வருணனின் குடையை, தேவதைகளின் மணிபர்வதம் என்னும் இடத்தை அபகரித்தான். இதனால் கவலைப்பட்ட தேவேந்திரன், த்வாரகைக்கு வந்து ஸ்ரீகிருஷ்ணனிடம், நரகாசுரனின் அட்டகாசங்களைப் பற்றி கூறினான். உடனே ஸ்ரீகிருஷ்ணன், சத்யபாமாதேவியுடன் கருடன் மேலேறி, நரகாசுரனின் தலைநகரான ப்ராக்ஜ்யோதிஷ என்னும் நகருக்கு

விரைந்தான். அந்த ஊரைச் சுற்றி இருக்கும் ஷஸ்த்ரதுர்கா, ஜலதுர்கா, அக்னிதுர்கா, வாயுதுர்கா ஆகியவற்றை ஸ்ரீகிருஷ்ணன் அழித்தான். தன்னுடைய சக்கரத்தால் முராசுரனைக் கொன்றான். இதனைக் கண்ட நரகாசுரன் மிகுந்த கோபத்துடன் போருக்கு வந்தான். ஸ்ரீகிருஷ்ணனைக் கொல்வதற்கு நரகாசுரன் திரிசூலத்தை பயன்படுத்தியபோது, ஸ்ரீகிருஷ்ணன் தனது சக்கரத்தால் நரகாசுரனின் தலையைக் கொய்து கொன்றான். தேவதைகள் பூமாரி பொழிந்தனர். நரகாசுரனின் தாயான பூதேவி, ஸ்ரீகிருஷ்ணனுக்கு வைஜயந்திமாலை, வனமாலையை சமர்ப்பித்தாள். அதிதியின் குண்டலங்களை ஸ்ரீகிருஷ்ணனுக்கு கொடுக்க, அவன் அவற்றை தேவமாதா அதிதிக்கு கொடுத்து அவளை மகிழ்வித்தான்.

நரகாசுரன் இறந்தபிறகு, பூதேவி அவனது மகனான பகதத்தனை ஸ்ரீகிருஷ்ணனிடம் அழைத்து வந்து - ‘ஹே பிரபுவே. இந்த பகதத்தன் மிகவும் பயந்திருக்கிறான். நீ இவனை காப்பாற்று. இவனுக்கு தைரியம் கொடு’ என்றாள். ஸ்ரீகிருஷ்ணனும் பகதத்தனுக்கு அபயம் அளித்து ப்ராக்ஜ்யோதிஷபுரத்திற்கு அவனை அரசனாக்கினான்.

ஸ்ரீபிரசன்ன வெங்கடதாசரே தமது ‘ஹக்கிய ஹெகலேரி பந்தவகெ’ என்னும் பாடலில் இவ்வாறு கூறுகிறார்.

உத்தம ப்ராக்3ஜ்யோதி1ஷ புரவ ப4க
த3த்த1கெ கொ1ட்ட வராப4யவ
க1ர்த1 க்ருஷ்ணய்யன நம்பி3தெ3 ஸ்ரீ
மூர்த்தி1ய பா1த3வ ஹொந்தி3தெ3 ||

இந்த உலகத்தில் இருக்கும் அதிபதிகளுக்கெல்லாம் அதிபதியானவன் ஸ்ரீகிருஷ்ணன். அவன் அனாதி காலத்திலிருந்தே அதிபதி. ப்ருஹதாரண்யக உபநிஷத்தில் இந்த வர்ணனையை காணலாம். இதையே விஷ்ணுசஹஸ்ரநாமத்தில் ‘பூதபவ்ய பவன்னாத:’ என்று ஸ்ரீகிருஷ்ணனை அழைத்திருக்கிறார்.

பீஷ்மக ராஜனின் மகளான ருக்மிணியை மணம் புரிந்ததால், ஸ்ரீகிருஷ்ணன், பைஷ்மீ ரமணன் என்று அழைக்கப்படுகிறான்.

பீஷ்மக மகளான ருக்மிணியை, அவளது அண்ணனான ருக்மி, சிசுபாலனுக்கு மணம் செய்து வைப்பதாக நிச்சயித்தான். இதனை அறிந்த ருக்மிணி, பிராமணனின் மூலம் ஸ்ரீகிருஷ்ணனுக்கு ஒரு கடிதம் எழுதி அனுப்பினாள். அந்த பிராமணன் கொடுத்த கடிதத்தைப் பெற்ற ஸ்ரீகிருஷ்ணன், உடன் அவரையும் தன் ரதத்தில் ஏற்றிக்கொண்டு விரைந்து வந்தான். அம்பிகா ஆலயத்திற்கு வந்த ருக்மிணியை ரதத்தில் ஏற்றிக்கொண்டு த்வாரகைக்கு வந்து, அனைவரின் முன்னிலையில் ருக்மிணியை மணம் புரிந்தான். துவாரகை மக்கள் அனைவரும் மகிழ்ச்சிக்கடலில் மூழ்கினர்.

ஸ்யமந்தகமணியை தரித்த ப்ரசேனனை தேடிக்கொண்டு காட்டில் அலைந்த ஸ்ரீகிருஷ்ணன், ஜாம்பவந்தனின் குகைக்கு வந்தான். அவனுடன் 28 நாட்கள் நடந்த போரில் ஜாம்பவந்தனை வென்று, ஜாம்பவதியை மணந்தான் ஸ்ரீகிருஷ்ணன். சத்ராஜித ராஜனை உக்ரசேனனின் சபைக்கு அழைத்து மணி கிடைத்த விஷயத்தை தெரிவித்து, அதனை சத்ராஜிதனிடம் கொடுத்தான். இதனால் அவமானப்பட்ட சத்ராஜிதன், அந்த ஸ்யமந்தகமணியை ஸ்ரீகிருஷ்ணனுக்கே கொடுத்து, சத்யபாமாதேவியை மணம் செய்து கொடுத்தான். ஆனால் ஸ்ரீகிருஷ்ணன் மறுபடி அந்த மணியை சத்ராஜிதனுக்கே கொடுத்துவிட்டான்.

இப்படியாக ஸ்ரீகிருஷ்ணரூபி நாராயணனுக்கு பைஷ்மீஸத்யாரமண என்ற பெயர் வந்தது.

ஷம்பு4வந்தித1பாத3 ஸாந்தீ3போ1த்த4வ ப்1ரிய
நாராயணாய நமோ நாராயண |
ஷம்ப3ராரிய ஜனக1 யக்ஞபூஜாக்3ரணியே
நாராயணாய நமோ நாராயண ||18

பகவந்தனை ஸ்ரீமதாசார்யர் அனுவியாக்யானத்தில் இவ்வாறு வர்ணிக்கிறார்.

நி:ஸேஷதோஷரஹித கல்யாணாகி2லஸத்கு3ண |
போ4திஸ்வயம்பு4 ஷர்வாதி3 வந்த்3யம் த்1வாம் நௌமி மே ப்1ரியம் ||

தோஷங்கள் அற்றவனான, சர்வகல்யாண குணபரிபூர்ணனான, லட்சுமி, பிரம்மா, ருத்ராதி தேவதைகளால் வணங்கப்படுபவனான, எனக்கு ப்ரியனான உன்னை வணங்குகிறேன். அவரே இன்னொரு கிரந்தமான நியாய விவரணத்தில் (மங்களாசரண) இவ்வாறு சொல்கிறார்.

சேதனாசேதன ஜக3ன்னியந்த்ரேsஸேஷ ஸம்விதே3 |
நமோ நாராயணாயாஜ ஷர்வஷக்1ராதி வந்தி3த1 ||

பிரம்மா, ருத்ர, இந்திரர்களால் வணங்கப்படுபவனான, சேதன ஜட உலகத்திற்கு நியாமகனான, பூர்ணஞானம் கொண்டவனான நாராயணனுக்கு நமஸ்காரங்கள்.

ஸ்ரீகிருஷ்ணன் சாந்தீபனி குருகளுக்கு ப்ரியமானவன்:
உபநயன சம்ஸ்காரம் முடிந்த கிருஷ்ண பலராமர்கள், சாந்திபனி குருகளிடம் வித்யாப்பியாசம் கற்பதற்குச் சென்றனர். 64 வித்யைகளை 64 நாட்களில் கற்றனர். (ஏனெனில் குருகளுக்கு சொல்லிக் கொடுப்பதற்கு அவ்வளவு நாட்கள் ஆனது). பின்னர், குருதட்சிணையாக, குருகள் விருப்பப்படி, இறந்திருந்த அவரது மகனை மறுபடி வரச்செய்தான். குருகள் மிகவும் மகிழ்ந்தார். ‘உமது புகழ் ஓங்குக’ என்று ஆசிர்வதித்தார். இப்படியாக ஸ்ரீகிருஷ்ணன், சாந்திபனி குருகளுக்கு ப்ரியமானவன் ஆனான்.

ஸ்ரீகிருஷ்ணன் உத்தவனுக்கு ப்ரியமானவன்:
வ்ருஷ்ணி வம்சத்தவரின் முக்கியமானவன் உத்தவன். ப்ருஹஸ்பதியின் சாக்ஷாத் சிஷ்யரான அவன், மிகவும் அறிவாளி. ஸ்ரீகிருஷ்ணனின் உற்ற நண்பனாகவும் இருந்தான். ஸ்ரீகிருஷ்ணன் தான் பரந்தாமத்திற்கு போகும் முன்னர் உத்தவனுக்கு, மோட்சத்திற்கு பயனான ஞானோபதேசத்தை மற்றும் பாகவத தர்மத்தை உபதேசம் செய்தான். இதனால், ஸ்ரீகிருஷ்ணன் உத்தவனுக்கு மிகவும் ப்ரியமானவன் என்று தெரிய வருகிறது.

ஷம்பரனின் கதை:
ஷம்பரன் மகா மாயாவி அசுரன். ஸ்ரீகிருஷ்ணனின் மகனான பிரத்யும்னனால் தான் கொல்லப்படுவேன் என்று அறிந்து, அவனைக் கொல்ல முயன்று, தோற்று, தானே அவனால் கொல்லப்பட்டவன்.

தர்மராஜர், ராஜசூயா யாகத்தை செய்ய முயன்றார். அப்போது அக்ரபூஜை (முதல் மரியாதை) யாருக்கு செய்யவேண்டும் என்ற கேள்வி வந்தது. தர்மராஜர், அனைத்து தர்மங்களை அறிந்தவரானாலும், ஸ்ரீகிருஷ்ணனே அனைவராலும் பூஜிக்கப்படும் ஸ்ரீஹரி என்பதை அறிந்திருந்தாலும், சபையில் நிறைந்திருந்த அனைத்து அரசர்களின் சந்தேகத்தை தீர்த்து வைப்பதற்காக, பீஷ்மாசார்யரிடம் தன் கேள்வியைக் கேட்டான். அதற்கு பீஷ்மர் 'ஸ்ரீகிருஷ்ணனே அனைவருக்கும் தலைவன். பரமபூஜ்யன். ஆகவே ஸ்ரீகிருஷ்ணனுக்கே அக்ரபூஜை செய்யவேண்டும்' என்று பீஷ்மர் கூறினார். இதன்படியே ஸ்ரீகிருஷ்ணனுக்கு அக்ரபூஜை நடந்தது.

இத்தகைய ஸ்ரீகிருஷ்ணரூபி நாராயணனுக்கு என் நமஸ்காரங்கள்.

பாண்டவர ப்ராண த்ரௌபதி மானரக்ஷகனே
நாராயணாய நமோ நாராயண |
பௌண்ட்ரக ஷ்ருகா^{3}ல கௌ^{1}ரவ பூமிபா^{4}ரஹர
நாராயணாய நமோ நாராயண ||19

ஸ்ரீகிருஷ்ணன், பாண்டவர்களை தனது உயிராக கருதுபவன். திரௌபதிதேவியின் மானத்தை காத்தான். இத்தகைய கிருஷ்ணரூபி நாராயணனுக்கு நமஸ்காரங்கள். பௌண்ட்ரக வாசுதேவ, ஷ்ருகால வாசுதேவ, துர்யோதனன் - இவர்கள் அனைவரும் பூமிக்கு பாரமானவர்கள். இவர்களை ஸ்ரீகிருஷ்ணன் வதம் செய்து பூமியின் பாரத்தை குறைத்தான். இத்தகைய ஸ்ரீ நாராயணனுக்கு என் நமஸ்காரங்கள்.

ஸ்ரீகிருஷ்ணன், பாண்டவர்களின் உற்ற நண்பனானவன். இது இந்த கதையின் மூலம் தெரியவருகிறது. பாண்டவர்கள் வனவாசம் முடித்து வந்தபிறகு, தன் வாரிசுகளை இழந்த சோகத்தில் இருந்த திருதராஷ்டிரன் அவர்களுக்கு அரசாட்சியை தரவில்லை. ஸ்ரீகிருஷ்ணன் திருதராஷ்டிரனிடம் செல்ல, திருதராஷ்டிரன் ஸ்ரீகிருஷ்ணனை பூஜைகள் செய்து மரியாதை செலுத்தினான்.

ஆனால், துரியோதனன் செலுத்திய பூஜையை - அவன் குணவந்தர்களான பாண்டவர்களின் எதிரி என்பதால் - ஸ்ரீகிருஷ்ணன் ஏற்றுக்கொள்ளவில்லை.

துரியோதனனைப் பார்த்து ஸ்ரீகிருஷ்ணன் இவ்வாறு கூறினான்:
'எதிரி கொடுக்கும் உணவை உண்ணக்கூடாது. எதிரிக்கு உணவளிக்கக்கூடாது. நீ என்னுடைய எதிரி இல்லை. ஆனால், என் பரம பக்தர்களான பாண்டவர்களின் த்வேஷியாக இருக்கிறார். பாண்டவர்கள் என்றால் எனக்கு மிகவும் பிரியம். அவர்களின் எதிரி எனக்கும் எதிரியே' என்றான்.

ஸ்ரீகிருஷ்ணன், திரௌபதியின் மானத்தை காத்த விதம் இப்படியாக இருக்கிறது:
சகுனியின் அறிவுரைப்படி, பாண்டவர்களின் செல்வங்களை கவரவேண்டுமென, துரியோதனன் திருதராஷ்டிரனுக்கு சொல்ல, விதுரன் மூலமாக பாண்டவர்களை சூதாட வரச்செய்கிறார் திருதராஷ்டிரன். தர்மராஜரும் தன் தம்பியருடன் சூதாட்டத்திற்கு வருகிறார். பீமன் மற்றும் விதுரர் தடுத்தும், தன்னுடைய அனைத்து செல்வங்களையும் சூதாட்டத்தில் பணயமாக வைத்து தோற்றார். பின்னர் தன் தம்பிகளை மற்றும் திரௌபதியை பின்னர் தன்னையும் பணயமாக்கி தோற்றார்.

திரௌபதியை சபைக்கு அழைத்து வர தன்னுடைய சாரதியை துரியோதனன் அனுப்பினான். திரௌபதியோ வர மறுக்க, தன் தம்பியான துச்சாதனனை அனுப்பினான். அவன் திரௌபதியின் தலைமுடியைப் பிடித்து, விழுப்பில் இருந்த அவளை சபைக்கு இழுத்து வந்தான். துரியோதனனின் ஆணைப்படி, பாண்டவர்கள் பார்த்திருக்கையிலேயே, துச்சாதனன் திரௌபதியின் சேலையை இழுக்கத் துவங்கினான்.

உடன், திரௌபதி மிகுந்த பக்தியுடன் ஸ்ரீகிருஷ்ணனை வணங்கத் துவங்க, அவளது சேலை முடிவற்று தொடர்ந்து வளர்ந்தவாறே வந்தது. ஒன்றுக்குப்பின் இன்னொன்றாக வண்ணவண்ணச் சேலைகள் வந்தன. இப்படி ஸ்ரீகிருஷ்ணன் திரௌபதியின் மானத்தைக் காத்தான்.

பலராமன், நந்தகோகுலத்திற்கு சென்ற சமயத்தில், பௌண்ட்ரன் என்னும் ராஜன், தானே வாசுதேவன் என்று சொல்லி, ஸ்ரீகிருஷ்ணனுக்கு ஒரு தூதனை அனுப்பினான். அந்த தூதனும் கிருஷ்ணனின் சபைக்கு வந்து - 'நான் ஒருவனே வாசுதேவன். வேறு யாரும் அல்ல. நீ வாசுதேவன் என்று சொல்லிக் கொள்வது பொய். அந்தப் பெயரை இனி பயன்படுத்தாதே' - என்ற செய்தியை படித்தான். உடன் ஸ்ரீகிருஷ்ணனும் தூதனிடம் பின்வருமாறு சொல்லி அனுப்பினான். 'நான் என் சின்னங்களை உன் மேல் விடுகிறேன். நீ யாருக்காக இப்படியெல்லாம் சொல்கிறாயோ, அவர் மேல் இவற்றை பயன்படுத்துகிறேன்' - என்றான்.

தூதனின் இச்செய்தியைக் கேட்டவுடன், பௌண்ட்ரக வாசுதேவன், உடனடியாக இரண்டு அக்ஷோஹிணி சைன்யத்தை அழைத்துக் கொண்டு புறப்பட்டான். அவனது நண்பனான காசிராஜன் தனது மூன்று அக்ஷோஹிணி சைன்யத்தை

உதவிக்கு அனுப்பினான். பௌண்ட்ரகன், தந்திரமான ஆயுதங்களை, வேடங்களை தரித்து வந்தான். ஸ்ரீகிருஷ்ணன், பௌண்ட்ரகனை புறக்கணித்து, தனது பாணங்களால் அவனின் ரதத்தை முறித்து, சுதர்சன சக்கரத்தால் அவன் தலையைக் கொய்து அவனைக் கொன்றான்.

ஷ்ருகால வாசுதேவனை ஸ்ரீகிருஷ்ணன் கொன்ற கதை:
ஒரு முறை ஸ்ரீகிருஷ்ணன் பலராமனுடன் கோமந்த பர்வதத்தைக் காண சென்றான். அங்கு ஜராசந்தன் முதலானவர்களை தோற்கடித்த பிறகு, கர்வத்தினால் தானே வாசுதேவன் என்று சொல்லிக் கொண்டிருந்த ஷ்ருகால வாசுதேவனைக் கொன்று, அவனது ரதம், யானை, குதிரை, செல்வம், தங்கம் ஆகியவற்றை பறித்து மதுராவிற்கு அனுப்பினான்.

குருக்ஷேத்திர யுத்தத்தில் ஸ்ரீகிருஷ்ணன் பீமன் மூலமாக துரியோதனனைக் கொன்று, பூமியின் பாரத்தைக் குறைத்தான்.

இத்தகைய ஸ்ரீகிருஷ்ணரூபி நாராயணனுக்கு என் நமஸ்காரங்கள்.

அபி⁴மன்யுனாத்மஜன ப³சுரொளகெ³ ஸலஹிதெ³யோ
நாராயணாய நமோ நாராயண ।
அப⁴யதலி பாண்டவர சந்த¹தி¹ய பெ³ளெஸிதெ³யோ
நாராயணாய நமோ நாராயண ॥ 20

அபிமன்யுவின் மகனான பரிக்ஷித், தன் தாயின் கர்ப்பத்தில் இருந்தபோதே, அஸ்வத்தாமனின் பிரம்மாஸ்திரத்திலிருந்து அவனை ஸ்ரீகிருஷ்ணன் காப்பாற்றினான். அப்படியே பாண்டவர்களுக்கு அபயம் அளித்து, அவர்களின் சந்ததியை வளர்த்து அவர்களை காப்பாற்றினான்.

குருக்ஷேத்திர யுத்தம் முடிந்தபிறகு, தர்மராஜனுக்கு பட்டாபிஷேகம் செய்து, பாண்டவர்கள் மூலம் அஸ்வமேத யாகத்தை செய்வித்து, ஸ்ரீகிருஷ்ணன் த்வாரகைக்கு புறப்பட்ட சமயத்தில், உத்தரை ஓடி வந்தாள். 'ஸ்ரீகிருஷ்ணா, காப்பாற்று. பாணம் ஒன்று என்னைத் துரத்திக் கொண்டு வருகிறது. அந்த பாணம் என்னைக் கொன்று போட்டாலும் பரவாயில்லை. ஆனால் என் கர்ப்பத்தில் இருக்கும் குழந்தையை மட்டும் கொல்லாதிருக்கட்டும்' என்றாள்.

ஸ்ரீகிருஷ்ணன் ஒரு ரூபத்திலிருந்து தானே அவளது கர்ப்பத்தில் பிரவேசித்து, குழந்தை பரிக்ஷித்தை காப்பாற்றினான். இந்த விஷயத்தை பரிக்ஷித் ராஜரே பின்னர் சொல்கிறார்.

அஸ்வத்தாமாசார்யரின் பாணத்தால், உத்தரையின் குழந்தை இறந்தே பிறந்தது. அதைக்கண்ட குந்தி முதலான ஸ்த்ரீயர் அனைவரும், ஜகத்பிரபுவான ஸ்ரீகிருஷ்ணனிடம் முறையிட்டனர். கர்ப்பத்தில் பிரவேசித்து, அஸ்திரத்திலிருந்து

குழந்தையை காப்பாற்றிய ஸ்ரீகிருஷ்ணன், பாண்டவர்களின் சந்ததியை வளர்க்கும் பொருட்டு தானே மறுபடி காப்பாற்றினான்.

இத்தகைய ஸ்ரீகிருஷ்ணரூபி நாராயணனுக்கு என் நமஸ்காரங்கள்.

க3ருட கந்த4ர்வ கி1ன்னர கீ3த1 சம்ப்ரீத1
நாராயணாய நமோ நாராயண
க1ருவெ லகு1மிய கூட3 க்1ரீடா3த்3ரியல்லிருவெ
நாராயணாய நமோ நாராயண || 21

கருடன், கந்தர்வர், கின்னரர்கள் செய்த ஸ்தோத்திரங்களால் பகவந்தன் மகிழ்ச்சியடைந்திருக்கிறான். லட்சுமிதேவியுடன் கூடி, வெங்கடாசலத்தில் இருக்கும் நாராயணரூபிக்கு நமஸ்காரங்கள்.

சாமகானத்தில் பாடுபவர்களுக்கும், வேறு வேத மந்திரங்களுக்கும் அபிமானியான கருடன் பாடும் மகிழ்ச்சியடைபவன் ஸ்ரீநாராயணன். கந்தர்வர்களும் அப்படியே பாடி ஸ்ரீநாராயணனை மகிழ்விப்பர். கின்னரர்களும் அவனை ஸ்தோத்திரம் செய்து மகிழ்விப்பர்.

ப4ஜே வெங்கடேசம் பணீஷாத்3ரிவாஸம்
ஸதா3 மந்த3ஹாஸம் க்1ரியா ஸத்3விலாஸம் ||

மகாலட்சுமியுடன் கூடி, சேஷாசலத்தில் வசிக்கும் ஸ்ரீவெங்கடேச ஸ்வாமியை வணங்குகிறேன். இப்படி லட்சுமிதேவியுடன் வசித்திருக்கும் நாராயணனுக்கு நமஸ்காரங்கள்.

ஷங்க2 சக்ரகதாப்ஜ ஸ்ரீவத்ஸ ஷோபி3த1னெ
நாராயணாய நமோ நாராயண |
ஸங்க்2யெ ரஹிதாப4ரண பூ4ஷணா வ்யாக்1ருத1னெ
நாராயணாய நமோ நாராயண ||22

சங்கு, சக்கரம், கதை, தாமரை, ஸ்ரீவத்ஸ ஆகியவற்றை தரித்திருக்கிறான். எண்ணிக்கையற்ற ஆபரணங்களால் அலங்காரம் செய்யப்பட்டிருக்கிறான். அனைத்தையும் படைப்பவனாக இருக்கிறான்.

பகவந்தனை நாரதர் துதிப்பதை இங்கு நினைவு கூறவேண்டும்.

ஸ்ரீவத்ஸாங்க1ம் க4னஷ்யாமம் பு1ருஷம் வனமாலினம் |
ஷங்க சக்ர கதாபத்மை ரபிவ்யக்த சதுர்புஜம் ||

பகவந்தனின் மார்பில் ஸ்ரீவத்ஸ சின்னம் இருக்கிறது. சரீரமானது, நீர் நிறைந்த மேகம் போல கருப்பாக இருக்கிறது. கழுத்தில் வாசமான வனமாலையை, நான்கு

தோள்களில் சங்கு, சக்கரம், கதை, தாமரைகளை தரித்திருக்கிறான். இத்தகைய நாராயணனுக்கு என் நமஸ்காரங்கள்.

ஸ்பு1ரத்3வலய கேயூர நூபுராங்கத பூ4ஷணை: |
ஷோபனைர் பூஷிதாகா1ர கல்யாண குணராஷயே ||
(பஞ்சராத்ரத்தில் சொல்லப்பட்ட ஜிதந்தே ஸ்தோத்திரம் 1-3)

மங்கலமான ஒளிரும் தாமரை, கேயூர, நூபுர இத்யாதி ஆபரணங்களால் அலங்கரிக்கப்பட்ட மூர்த்தியே, கல்யாண குணங்களைக் கொண்ட சாகரமே, உனக்கு என் நமஸ்காரங்கள்.

பகவந்தன் எல்லையற்ற தன் ஆகாயத்தை தன் கட்டுப்பாட்டில் வைத்துக் கொண்டிருப்பவனான அவனுக்கு அவ்யாக்ருதன் என்று பெயர் உள்ளது. இத்தகைய நாராயணனுக்கு என் நமஸ்காரங்கள்.

மீன கஷ்யப போத்1ரி ந்ருஹரி வாமன பா4ர்க3வ
நாராயணாய நமோ நாராயண |
மானவப1 கிருஷ்ண புத்த கல்கி கபிலாத்ரேய
நாராயணாய நமோ நாராயண ||23

அந்த ஸ்ரீஹரி, மத்ஸ்ய, கூர்ம, வராக, நரசிம்ம, வாமன, பார்கவ (பரசுராம), ராம, கிருஷ்ண, புத்த, கல்கி, கபில மற்றும் தத்தாத்ரேயனாக அவதாரங்களை எடுத்திருக்கிறான். அதன் விவரங்கள்:

1. மத்ஸ்ய அவதாரம்: ஸ்ரீஹரி மத்ஸ்ய அவதாரம் எடுத்து, ஹயக்ரீவாசுரனைக் கொன்று, பிரம்மனுக்கு வேதங்களைக் கொண்டு கொடுத்தார். சத்யவ்ரத ராஜனுக்கு தத்வோபதேசங்களை செய்து உதவினார்.

2. கூர்ம அவதாரம்: பாற்கடலை கடையும்போது, ஸ்ரீஹரி மந்தர பர்வதத்தைத் தாங்கிப் பிடித்து, தேவதைகளுக்கு அமிர்தத்தைக் கொடுத்து உதவினார்.

3. வராக அவதாரம்: சனகாதி முனிவர்களின் சாபத்தினால், ஜய விஜயர்கள், ஹிரண்யகசிபு, ஹிரண்யாக்ஷகன் என்னும் பெயர்களினால் பிறந்தனர். ஆதி ஹிரண்யாக்ஷகனே இப்போது திதியின் மகனாக ஹிரண்யாக்ஷகன் என்னும் பெயரினால் பிறந்து வந்தார். இவனில் விஜயனின் ஆவேசம் இருந்தது. இந்த ஹிரண்யாக்ஷகன் பூமியை நீரில் மூழ்கடித்தான். ஸ்ரீஹரி வராக ரூபத்தை எடுத்து, பூமியை மேலெடுக்கும்போது ஹிரண்யாக்ஷகன் அதை தடுக்க, வராக ரூபி, தன் கைகளால் அவனை கொன்றார்.

4. நரசிம்ம அவதாரம்: பகவத் பக்தனான பிரகலாதனை காப்பாற்றுவதற்காக நரசிம்ம ரூபத்தை எடுத்து, அவன் தந்தை ஹிரண்யகசிபுவை கொன்றார்.

5. வாமன அவதாரம்: இந்திரனின் ஸ்வர்கத்தை திரும்ப அவருக்கே கொடுப்பதற்காக, ஸ்ரீஹரி வாமன அவதாரத்தை எடுத்து, பலியைக் கொன்றார்.

6. பரசுராம அவதாரம்: துஷ்ட க்ஷத்ரியர்களைக் கொன்று, ஸ்ரீஹரி பரசுராம அவதாரத்தை எடுத்து 21 முறை பூமியை சுற்றி வந்து, அனைத்து துஷ்டர்களையும் கொன்றார். பின், தான் பல யக்ஞங்களை செய்து பூமியை தானம் செய்தார்.

7. ராம அவதாரம்: ராவணாதி அசுரர்களின் தொந்தரவு அதிகரிக்கவும், ஸ்ரீஹரி ராம அவதாரத்தை எடுத்து, அவர்களைக் கொன்று சஜ்ஜனர்களைக் காப்பாற்றினார்.

8. கிருஷ்ண அவதாரம்: பூதேவியின் பாரத்தைக் குறைப்பதற்கு, ஸ்ரீஹரி கிருஷ்ண அவதாரத்தை எடுத்து, பகவத் த்வேஷிகளான ஜராசந்தன், கம்ஸன், சிசுபாலன், தந்தவக்ரன் ஆகியோரைக் கொன்று, சஜ்ஜனர்களான பாண்டவர்களை காப்பாற்றினார்.

9. புத்த அவதாரம்: தைத்யர்களை மயக்குவதற்காக ஸ்ரீஹரி புத்த அவதாரத்தை எடுத்து, தேவதைகளுக்கு உபதேசங்களை போதித்தார்.

11. கல்கி அவதாரம்: உலகைக் காப்பதற்காக, தாமிரபரணி தீரத்தில், ஷம்பல கிராமத்தில் அவதரித்து, குதிரையில் வந்து, துஷ்டர்களைக் கொன்று, கலியுகத்தை முடித்து வைப்பார்.

12. கபில அவதாரம்: ஸ்ரீஹரி கபில அவதாரத்தை எடுத்து, சாங்க்ய சாஸ்திரத்தை ஆஸுரி என்னும் சிஷ்யருக்கு, தேவதைகளுக்கு, ப்ருகு முதலான முனிவர்களுக்கு மற்றும் தன் தாய்க்கு உபதேசம் செய்தார்.

12. தத்தாத்ரேய அவதாரம்: ஸ்ரீஹரி, அத்ரி மற்றும் அனுசுயா தம்பதிகளிடம் அவதரித்து, அலர்கனுக்கு, பிரகலாதனுக்கு, தர்க்க சாஸ்திரத்தை உபதேசம் செய்தார்.

இத்தகைய நாராயணனுக்கு என்னுடைய நமஸ்காரங்கள்.

ஸ்வாமி தீர்த்தா[2]ம்பு அந்தர்கங்காபி[4]ஷிக்[1]த[1]
நாராயணாய நமோ நாராயண ।
ஸ்வாமி பூவராக வைகுண்டநாத விஷ்வேஷ
நாராயணாய நமோ நாராயண ||24

அந்த வெங்கடேஸ்வர ரூபி ஸ்ரீஹரி, ஸ்வாமி புஷ்கரிணி தீர்த்தத்தின் நீரினால் அபிஷேகம் செய்து கொள்கிறான். இத்தகைய நாராயணனுக்கு நமஸ்காரங்கள். அந்த பகவந்தன், வெங்கடகிரியில் பூவராக ஸ்வாமி ரூபத்தில், பூவைகுண்டத்திற்கு ஸ்வாமியாகி, மொத்த உலகத்திற்கே தலைவனாக இருக்கிறான். இத்தகைய நாராயணனுக்கு நமஸ்காரங்கள்.

மாயாவி பரமானந்தம் த்யக்த்வா வைகுண்டமுத்தமம் |
ஸ்வாமி புஷ்கரிணி தீரே ரமயாஸஹ மோத3தே1 ||
(பிரம்மாண்ட புராணம் வெங்கடேச ஸ்தோத்திரம்)

ஸ்ரீஹரி, உத்தமமான வைகுண்டத்தை விட்டு, ஸ்வாமி புஷ்கரிணி தீரத்தில், லட்சுமிதேவியுடன் க்ரீடை செய்துகொண்டிருக்கிறான்.

ப1ஷ்யாமி விஸ்வேஸ்வர விஷ்வரூப ||
(உடுப்பி பலிமார் மடம் வெளியிட்டிருக்கும், ஸ்ரீவிஷ்ணு சஹஸ்ரநாம சம்புட புத்தகத்திலிருந்து)
உலகத்திற்கே தலைவன் என்பதையே விஸ்வேஸ்வரன் என்று கூறியிருக்கின்றனர்.

விஸ்வஸ்ய ஜகத: ஆத்மாஸ்வாமீ விஸ்வாத்மா ||
இதிலிருந்து ஸ்ரீஹரி அனைத்து உலகத்திற்கும் ஸ்வாமியானவன் என்று நிர்ணயமாகிறது.

ஷட்கோடி1 தீர்த்த4யுத1 சரண ஸ்ரீபூ4ரமண
நாராயணாய நமோ நாராயண |
ஷட்க1மல நியம சின்மய சித்குணார்ணவனே
நாராயணாய நமோ நாராயண |25

ஸ்ரீஹரி, ஆறு கோடி தீர்த்தங்களைக் கொண்ட பாதங்களை உடையவன். ஸ்ரீதேவி, பூதேவிகளுடன் வசிப்பவன். இத்தகைய நாராயணனே உனக்கு நமஸ்காரங்கள். ஆறு கமலங்களுடன் இருக்கும் இடத்தில் வசிப்பவன். ஞானமயன், ஞானாதி குணங்களால் நிரம்பி கடல்போல இருப்பவன். இத்தகைய நாராயணனுக்கு என் நமஸ்காரங்கள்.

ஸ்ரீகிருஷ்ண அஷ்டோத்தர ஷதநாம ஸ்தோத்திரத்தில்:
புண்யஸ்லோகஸ் தீர்த்த2 பாதோ3 வேதவேத்யோ தயாநிதி: ||

இதில் சொல்லியபடி, பகவந்தனுக்கு 'தீர்த்தபாத' என்று பெயர் இருக்கிறது. இதை சரியாக கவனிக்க வேண்டும். தீர்த்தங்கள் மொத்தம் ஆறு கோடி என்று இங்கு சொல்கிறார்கள். இந்த அனைத்து தீர்த்தங்களும், பகவந்தனின் பாதங்களில் இருக்கின்றன என்று சிந்தனை செய்யவேண்டும். மற்றும் 'கங்காதி சர்வ தீர்த்தானி த்வத்பாதாப்ஜே வஸந்திஹி' (ஸ்ரீஆதித்ய புராணம் - வெங்கடேச மகாத்ம்யம்) இதையும் சிந்திக்க வேண்டும்.

ஸ்ரீபூப்யாம் விஹரன் விஷ்ணோ
முக்திம் பக்தாய தேஹி மே ||

ஸ்ரீபூதேவியருடன் கூடி அருள்பாலித்து வரும் வாசுதேவரூபியான விஷ்ணுவே, எனக்கு முக்தியைக் கொடு. இதிலிருந்து ஸ்ரீவெங்கடேசன், ஸ்ரீ-பூ-ரமணனாக இருக்கிறான் என்று தெரிய வருகிறது.

ஷட்கமல நிலய சின்மய சித்குணார்ணவனே ||
ஸ்ரீஹரி ஆறு தளங்களைக் கொண்ட தாமரையில் நிலைத்திருக்கிறான். நமது நாபி பிரதேசத்தில், ஆறு தளங்களைக் கொண்ட தாமரையில், ஆறுகோண வாயுமண்டலத்தில், சங்கர்ஷண ரூபி ஸ்ரீஹரி வசித்திருக்கிறான் என்று பிம்போபாசனை புத்தகத்தில் பெங்களூரு எம்.எஸ். ஆனந்தராவ் அவர்கள் விளக்கியிருக்கிறார்.

'தயவிரலி, தயவிரலி தாமோதர' என்னும் பாடலில் ஸ்ரீகோபாலதாசர், ஸ்ரீஹரியை 'சின்மய மூர்த்தி' என்று பாடியிருக்கிறார்.

எனகெ3 ஆவுது ஒல்லெ எல்லெல்லி ஹோாத3ரு
க்1ஷணபி3ட3தெ3 நின்ன நோடுவ ஞான கொ1டுஸ்வாமி |
சின்மய மூர்த்தி கோபாலவிட்டல
க4ன்னக1ருணி மத்வமுனி மந்தி3ரவாஸ ||

மாயாவாத கண்டன கிரந்தத்தில், மங்களாசரண ஸ்லோகத்தில், ஸ்ரீமதாசார்யர் சொல்லியது இவ்வாறு:

ஜயத்யமித1ஸக்ஞான சுக2 ஷக்தி பயோநிதி: ||
அந்த நரசிம்மரூபி ஸ்ரீஹரி, யதார்த்த ஞானம், நிரந்தர சுகம், சக்தி இவைகளைக் கொண்டிருக்கிறான்.

ப4க்தாபி4மானி ப4வதூ3ர ப4க்த1ர ப்ரபு4வெ
நாராயணாய நமோ நாராயண |
ப4க்தவத்ஸல க்ருபாம்பு3தி4 பராத்பர கிருஷ்ண
நாராயணாய நமோ நாராயண ||26

அந்த ஸ்ரீஹரி, பக்தர்களைக் காப்பவன், பிறப்பு இறப்பிலிருந்து விடுபட்டவன், பக்தர்களின் தலைவன். இத்தகைய நாராயணனுக்கு நமஸ்காரங்கள். அந்த பகவந்தன் பக்தவத்ஸலன், கருணைக்கடல், லட்சுமி பிரம்மாதி தேவர்களைவிட உத்தமன், இத்தகைய ஸ்ரீகிருஷ்ணரூபி நாராயணனுக்கு நமஸ்காரங்கள்.

பகவந்தன் பக்தாபிமானியாக இருக்கிறான். பக்தர்களை எந்தவொரு காலத்திலும் கைவிடுவதில்லை.

வைகுண்டம் வா ப1ரித்1யக்1ஷ்யே ப4க்தா1ம்ஸ்த்யக்து முத்1ஸஹே ||
(ஆதித்ய புராணம், வெங்கடேச மகாத்ம்யம் 2-87)

பகவந்தன் பிறப்பு இறப்பு சுழற்சியிலிருந்து விலகியிருக்கிறான். சம்சார சாகரத்திற்கு அப்பாற்பட்டவனாக இருக்கிறான். இதையே ஸ்ரீவிஷ்ணு சஹஸ்ரநாமத்தில், பகவந்தனை 'ஜென்மம்ருத்யு ஜராதிக:' என்கிறார்.

'பக்த்யைகவஷ்ய: பிரபு:' என்று ருக்மிணீச விஜயத்தில் (4-1), ஸ்ரீவாதிராஜர் சொல்லியிருக்கிறார். அந்த பகவந்தன், பக்தர்களின் பக்திக்கு இரங்கும் ஸ்வாமியாக இருக்கிறான் என்கிறார்.

பா1லகோ1 ஹி ப3ஹூனாஞ்ச ப4க்தானாம் ப4க்தவத்ஸல: ||
(ஆதித்ய புராணம், வெங்கடேச மகாத்ம்யம் 1-31)
பக்தவத்ஸலனான ஸ்ரீவெங்கடேசன், எண்ணிக்கையற்ற (பல) பக்தர்களை காப்பாற்றுகிறான். பகவந்தன் கருணைக் கடலாக இருக்கிறான்.

'ப4வார்ணவே நிமக்3னம் மாம் அனன்ய கருணோத3தே4' என்று ஜிதந்தே ஸ்தோத்திரம் (1-11) சொல்கிறது. சம்சார சாகரத்தில் மூழ்கிருக்கும் என்னை, கருணாமயியான பகவந்தனே, காப்பாற்று.

பகவந்தன் பராத்பரனாக (சர்வோத்தமனாக) இருக்கிறான்.

ப்ரப1த்3யே புண்டரீகாக்ஷமீஷம் ப4க்தானுக1ம்பி1னம் |
லோகோ1த்த1ரம் லோக1நாத4ம் பராத்பரத1ரம் விபு4ம் ||
(ஆதித்ய புராணம், வெங்கடேச மகாத்ம்யம் 3-56)

பகவந்தன் தாமரைக் கண்ணன். பக்தர்களிடம் பரிவு உள்ளவன். அனைத்து உலகங்களுக்கும் தலைவன். லட்சுமிதேவியைவிட சிறந்தவன். பற்பல ரூபங்களை தரித்தவன். அனைத்து இடங்களிலும் வியாபித்திருப்பவனான லட்சுமிபதியை நான் வணங்குகிறேன்.

வஸுதே வைகுண்ட மந்திரவாஸ ஸ்ரீனிவாஸ
நாராயணாய நமோ நாராயண |
வஸுப்1ரீத வஸுக1ர்த வஸுதா3த1 வஸுபூர்ண
நாராயணாய நமோ நாராயண ||27

பூலோக வைகுண்டம் எனப்படும் வெங்கடாசலத்தில் 'ஸ்ரீனிவாஸ' என்னும் பெயரில் நிலைத்திருக்கிறார் பகவந்தன். இத்தகைய நாராயணனுக்கு என் நமஸ்காரங்கள். ஞானத்தினால் மகிழ்பவன், ஞானத்தைக் கொடுப்பவன், ஞானபூர்ணனுமான நாராயணனுக்கு நமஸ்காரங்கள்.

மாயாவி பரமானந்தம் த்யக்த்வா வைகுண்டம் உத்தமம் |
ஸ்வாமி புஷ்கரிணி தீரே ரமயாஸஹ மோததே ||
(பிரம்மாண்ட புராணம்)

பகவந்தன் வைகுண்டத்தில் வசிப்பவன். அவன், பக்தர்களுக்காக வைகுண்டத்தை விட்டு, ஸ்வாமி புஷ்கரிணி தீரத்தில், லட்சுமிதேவியுடன் க்ரீடை செய்தவாறு இருக்கிறான். ஆகையால், இந்த க்ஷேத்திரம் பூலோக வைகுண்டம் எனப்படுகிறது. இதை ஆதித்ய புராணத்தில் இவ்வாறு விளக்கியிருக்கிறார்கள்.

வைகுண்ட2வாஸம் வைகுண்ட2த்யாக3ம் வைகுண்ட ஸோத3ரம் ।
வைகுண்ட2த3ம் விகுண்டா3ஜம் ஸ்ரீனிவாஸம் ப4ஜே஽விஷம் ॥ (3-17)

வைகுண்டத்தில் வசிப்பவன், பக்தர்களுக்காக வைகுண்டத்தை தியாகம் செய்தவன். வைகுண்ட என்னும் சகோதரனை உடையவன். பக்தர்களுக்கு வைகுண்டத்தை கொடுப்பவன். விகுண்டா தேவியிடம் அவதரித்தவன். இத்தகைய ஸ்ரீனிவாசனை எப்போதும் வணங்குவேன்.

வசு என்றால் ஞானம், செல்வம். ஞானத்தினால் மகிழ்பவன் அந்த பகவந்தன் ஆகையால் வசுப்ரீத. வியாஸரூபி பகவந்தன் ஞானத்தை பிரம்மசூத்திரம், மகாபாரதம், புராணாதிகள் மூலமாக கொடுப்பவன். அந்த பகவந்தன் ஞானப்ரதனாக இருக்கிறான்.

ஞானப்1ரத3: ஸ ப4கவான் க1மலாவிரிஞ்சி
ஷர்வாதி3 பூர்வாஜக3தோ1 நிகி2லாத்3வரிஷ்ட: ॥
(மகாபாரத தாத்பர்ய நிர்ணய 2-59)

ஆதிநாத2 ப்ரமேயாதி3 புருஷோத்தமனே
நாராயணாய நமோ நாராயண ।
ஆதி மத்யாந்த1 ரஹிதாத்3யமூருதி1 விஷ்ணு
நாராயணாய நமோ நாராயண ॥28

அந்த பகவந்தன் அனாதி காலத்திலிருந்து ஸ்வாமி, அப்ரமேயன். அதாவது எப்போதும் யாராலும் அறியப்பட முடியாதவன். அனைவரையும்விட உத்தமன். இத்தகைய நாராயணனுக்கு நமஸ்காரங்கள். பகவந்தனுக்கு ஆதி, மத்ய, அந்த்யம் இல்லை. அவனே விஷ்ணு. இத்தகைய நாராயணனுக்கு என் நமஸ்காரங்கள்.

அப்ரமேயோ ஹ்ருஷிகேஷ: பத்பனாபோ அமரப்ரபு: ।
விஷ்ணு சஹஸ்ர நாம ஸ்தோத்திரத்தில் விஷ்ணுவை அப்ரமேய என்று அழைத்திருக்கிறார். பகவத்கீதையில் பகவந்தனுக்கு 'அப்ரமேய' என்னும் பெயர் வருகிறது. 11-17 & 11-42.

யஸ்மாத்1 க்ஷரமதீ1தோ1஽ஹமக்ஷராத3பி1 சோத்த1ம: ।
அதோ1஽ஸ்மி லோகே1 வேதே3 ச ப்ரதி2த1: பு1ருஷோத்1த1ம: ॥
(பகவத்கீதை 15-18)

நான் பிரம்மாதி க்ஷரர்களை மீறியவன். அக்ஷர எனப்படும் லட்சுமிதேவியரைவிட உத்தமன். ஆகையால் ஸ்ருதியிலும், ஸ்ம்ருதியிலும் புருஷோத்தமன் என்று அழைக்கப்படுகிறேன்.

யோ மாமேவமஸமோடோ4 ஜானாதி1 புருஷோத்தமம் |
ஸஸர்வவித்3 ப4ஜதி மாம் ஸர்வபா4வேன பா4ரத ||
(பகவத்கீதை 15-19)

யார் என்னை க்ஷர மற்றும் அக்ஷர புருஷர்களைவிட உத்தமன் என்று, ஸ்ருதி, ஸ்ம்ருதிகளில் புகழப்பட்டிருப்பவன் என்று தெளிவாக உணர்ந்து, புருஷோத்தமன் என்று அறிகின்றனரோ, அவர் அனைத்து சாஸ்திரங்களின் சாரத்தை அறிந்தவர் ஆகிறார்.

அனாதி3 மத்4யாந்தமனந்த1 வீரியம் அனந்த1பா3ஹும் ஷஷிசூர்ய நேத்ரம் ||
(பகவத்கீதை 11-19)

அர்ஜுனன் சொல்வது - 'ஹே பகவந்தா, நீ ஆதி, மத்ய, அந்த்யங்கள் இல்லாதவன். அனந்த கைகளை உடையவன். சூர்ய, சந்திரர்களை கண்களாக உள்ளவன்'. ஆத்யமூர்த்தி - விஷ்ணு தனக்குத் தானே போக்யனாகையால் அவன் 'ஆத்ய' மூர்த்தி எனப்படுகிறான். (ஐதரேய உப நிஷத் பாஷ்ய 1-3-5).

அந்த பகவந்தன் அனைத்திலும் இருப்பதால், அவனுக்கு 'விஷ்ணு' என்று பெயர்.

பது3கி1ப்1யாத3ரே நின்ன ஹொாக3ளிகெ1லி பது3கி1ஸ்யை
நாராயணாய நமோ நாராயண |
பு3த4ர சங்க3தி1 கொ1ட்டு1 மன்னிஸென்னனு த1ந்தெ3
நாராயணாய நமோ நாராயண ||29

பகவந்தனே! என்னைக் காப்பாற்றுவதானால், உன்னைக் கொண்டாடும், உன் கீர்த்தனைகளை பாடி வாழ்வதாக செய். நாராயணனே உனக்கு நமஸ்காரங்கள். எனக்கு ஞானிகளின் நட்பைக் கொடுத்து காப்பாற்று, தந்தையே. இத்தகைய நாராயணனே, உனக்கு நமஸ்காரங்கள்.

பகவந்தனை கொண்டாடுவது, கீர்த்தனை பாடி வாழ்வதே நல்வாழ்வு. இதை ஸ்ரீமதாசார்யர் இவ்வாறு சொல்கிறார்.

யத3ப்4யர்ச்ய ஹரிம் ப4க்த்யா க்1ருதே1 வர்ஷ ஸஹஸ்ரக1ம் |
ப4லம் ப்ராப்னோத்1யவிக1லம் க1லௌ சங்கீர்த்ய கேஷவம் ||
(ஸ்ரீகிருஷ்ணாம்ருத மஹார்ணவம் 61வது ஸ்லோகம்)

க்ருதயுகத்தில் ஸ்ரீஹரியை ஆயிரம் ஆண்டு பக்தியால் பூஜித்தால் கிடைக்கும் பலனானது, கலியுகத்தில் கீர்த்தனை செய்வதால் கிடைக்கின்றது.

ஆர்த்தா1விஷண்ணா: ஷிதி2லாம்ச பீ4தா
கோ4ரேஷு ச வியாதி4ஷு வர்த1மானா: ।
சங்கீர்த்ய நாராயண ஷப்தமாத்ரம்
விமுக்த து3க்கா1: சுகினோ பவந்தி ॥

ஆத்தர்கள் (துக்கமடைந்தவர்கள்), விஷண்ணர் (வாழ்க்கை வெறுத்தவர்கள்), வயதானவர்கள், பயம் கொண்டவர்கள், வியாதியால் பீடித்தவர்கள், நாராயண என்னும் சொல்லை நன்றாக கீர்த்தனை செய்து, அனைத்து துக்கங்களிலிருந்தும் விடுதலை பெற்று சுகத்தைப் பெறுகிறார்கள்.

பு3த்4யா பு3த்4வா வத3ஸ்வைனம் ஹரிரித்யக்ஷர த்3வயம் ।
ஸ்மரணாத் கீர்த்தனாத்யஸ்ய ந புனர்ஜாயதே1க்வசித்1 ॥
(கிருஷ்ணாம்ருத மஹார்ணவம் ஸ்லோகம் #69)

ஹரி என்னும் இரு எழுத்துக்களை நன்றாக அறிந்து / புரிந்து கொண்டு சொல்லுங்கள். அதன் சிந்தனை மற்றும் கீர்த்தனை செய்வதால், இன்னொரு முறை பூமியில் பிறக்க வேண்டியதில்லை. இதுவே வாழ்க்கையின் சரியான அர்த்தம்.

அர்ஜுஜன் கூறுவது - பி1தாஸிலோக1ஸ்ய சராசரஸ்ய (பகவத்கீதை 11-43)
ஹே பகவந்தா! சராசர பிரபஞ்சத்திற்கு நீயே தந்தை எனப்படுகிறாய். எனக்கு ஞானிகளின் நட்பைக் கொடுத்து மேம்படுத்து. ஞானிகளின் நட்பு வாழ்க்கையில் முக்கியமானதாக இருக்கிறது.

தே3ஹி ஸதா3 சஜ்ஜனானாம் ச சங்க3ம் ।
த3க்3த4ம் கு1ரு துர்ஜனானாம் ச சங்க3ம் ॥
(கருட புராணம்)

பகவந்தனே, அனைத்து காலங்களிலும் சஜ்ஜனர்களின் நட்பைக் கொடு. துர்ஜனர்களின் நட்பைக் கொடுக்காதே.

ஸம்ஸாரேऽஸ்மின் க்ஷணார்தோ4ऽபி1 ஸத்ஸங்க3: ஷேவதி4ர்ன்ருணாம் ।
யஸ்மாதவாப்யதே1 ஸர்வம் புருஷார்த்த2 சதுஷ்டயம் ॥
(பாகவதம் 11-2-30)

இந்த உலகத்தில், அரைக் கணமாகவது சஜ்ஜனர்களின் நட்பு கிடைத்தால், அது ஒரு மிகப்பெரிய செல்வம் ஆகும். அதிலிருந்து அனைத்து (நான்கு) புருஷார்த்தங்களும் கிடைக்கின்றன.

கி1வியல்லி முக2த3ல்லி நின்ன நாமத நெனெவு
நாராயணாய நமோ நாராயண ।

க1வலாக3த3ந்தி1ரிஸி த1வ பா1தா3ப்ஜவ தோ1ரோ
நாராயணாய நமோ நாராயண ||30

ஹே பகவந்தனே! காதுகள் உன் நாமங்களை கேட்டுக் கொண்டிருக்க வேண்டும். முகம் (நாக்கு), உன் நாமங்களை சொல்லிக் கொண்டிருக்க வேண்டும். உன் நினைவு தப்பிப் போகாமல் இருக்கச் செய்து, உன் பாத-கமலங்களைக் காட்டு. நாராயணனே உனக்கு நமஸ்காரங்கள்.

ஸ்ரீமத் பாகவதத்தில், ஸ்ரீகிருஷ்ணனின் பக்தர்களான நலகூபர், மணிக்ரீவர் ஆகியோர் செய்த பிரார்த்தனையை இங்கே பார்க்க வேண்டும்.

வாணீ கு3ணானுகத2னே ஷ்ரவணௌ க1தா2யாம்
ஹஸ்தௌ1 ச க1ர்மஸு மனஸ்த1வ பாத3யோர்னௌ |
ஸ்ம்ருத்1யாம் ஷிரஸ்த1வ ஸுர ப்1ரவரப்1ரணாமே
த்3ருஷ்டி: ஸதா1ம் த3ர்ஷனேsஸ்து1 ப4வத்த1னூனாம் ||
(பாகவதம் 10-10-38)

ஹே கிருஷ்ணா! என் முகமானது எப்போதும் உன் குணகானங்களையே பாடிக் கொண்டிருக்கட்டும். காதுகள் எப்போதும் உன் மகிமைகளையே கேட்டுக் கொண்டிருக்கட்டும். என் கைகள் இரண்டும், உன் சம்பந்தப்பட்ட வேலைகளிலேயே இருக்கட்டும். மனம் உன் பாத ஸ்மரணையிலேயே இருக்கட்டும். என் தலை, உன்னை வணங்குவதில் இருக்கட்டும். கண்கள், உன் மூர்த்தியின் தரிசனத்தைப் பெறுவதில் இருக்கட்டும். உன்னுடைய பிரதிமை எனப்படும் சஜ்ஜனர்களை பார்ப்பதில் என் பார்வை எப்போதும் இருக்கட்டும்.

அனைத்து மனிதர்களின் வாக்கில், பகவந்தனின் நாமம் இருக்கவேண்டும். இதன் மகத்துவத்தை ஸ்ரீமதாசார்யர் இவ்வாறு சொல்கிறார்.

ஹ்ருதி3 ரூபம் முகே2 நாம நைவேத்3யமுத3ரே ஹரே: |
பாதோ3த3க1ம் ச நிர்மால்யம் மஸ்தகே1 யஸ்ய ஸோsச்யுத1: ||
(கிருஷ்ணாம்ருத மஹார்ணவம் 43ம் ஸ்லோகம்)

இதயத்தில் ஸ்ரீஹரியின் ரூபம், வாயில் அவனது நாமம், வயிற்றில் அவனது நைவேத்தியம், தலையில் அவனின் பாதோதகம் மற்றும் நிர்மால்யம் ஆகியவற்றை யார் தரித்திருக்கிறாரோ, அவர் அழிவில்லாதவராக இருக்கிறார். ஸ்ரீஹரி நாமகீர்த்தனையினால் அனைத்து பாவங்களும் பரிகாரம் ஆகின்றன என்கிறார்.

யன்னாம சங்கீர்த்தனம் ப4க்த்யா விலாப1னமனுத்தமம் |
மைத்ரேயா சேஷபா1பா1னாம் தா4தூ1னாமிவ பா1வக1: ||
(கிருஷ்ணாம்ருத மஹார்ணவம் 57ம் ஸ்லோகம்)

மைத்ரேயனே! பக்தியால் செய்த ஸ்ரீஹரியின் கீர்த்தனை, நாமோச்சாரணை, அனைத்து பாவங்களையும், இரும்புக்கு நெருப்பு எப்படியோ அப்படியே சுடுவதாக இருக்கிறது. ஸ்ரீஹரி நாம சங்கீர்த்தனை பாடுவது, நாவிற்கு ஒரு அர்த்தத்தைக் கொடுக்கிறது. அதுமட்டுமல்ல, சம்சார சாகரத்தைக் கடக்கவும் அது உதவுகிறது.

ஹே ஜிஹ்வே மம நிஸ்னேஹே ஹரிம் கி1ம் நு ந பா4ஷஸே |
ஹரிம் வத3ஸ்ய க1ல்யாணி சம்ஸாரோததி4னௌர்ஹரி: ||
(கிருஷ்ணாம்ருத மஹார்ணவம் 70ம் ஸ்லோகம்)

ஹே நாக்கே! நீ ஏன் ஹரி நாமத்தை சொல்வதில்லை. நீ ஹரி என்று சொல். அவன் சம்சார சாகரத்தைக் கடக்கும் படகினைப் போல இருக்கிறான்.

ஸ்ரீகிருஷ்ணனின் நாமத்தை சொல்வது பரமானந்தத்திற்கு காரணம் என்று சொல்லியிருக்கிறார்கள். கிருஷ்ணநாமாம்ருதம் நாம பரமானந்த காரணம் || (ஸ்ரீகிருஷ்ண அஷ்டோத்தர ஷத நாம ஸ்தோத்திரம்).

பகவந்தனின் நாமஸ்மரணையின்போது, மனம் வேறு திசையில் செல்லாமல் இருந்தால், பகவந்தன் தன் பாத-கமலங்களைக் காட்டுகிறான் என்று தாசர் இங்கு சொல்கிறார்.

யன்னாமதே4ய ஷ்ரவணானு கீ1ர்த்தனாத்3
யத் ப்1ரஹ்வணாத்3 யத்1 ஸ்மரணாத3பி1க்வசித்1 |
ஷ்வாதோ3sபி1 ஸத்3ய: ஸவனாய கல்பதே1 || (3-34-6)

பகவந்தனின் நாமத்தின் மகிமையை இங்கு சொல்கிறார் - யாரின் நாமத்தைக் கேட்பதால், சொல்வதால், யாருக்கு மரியாதை செலுத்துவதால், யாரை சிந்தனை செய்தால், நாயைத் தின்னும் சண்டாளனும்கூட அதே நொடியில், யக்ஞத்தை செய்வதற்கு அருகதை உடையவனாகிறான். பவித்ரனாகி மற்றவரால் போற்றப்படுவான். இத்தகைய நாராயணனுக்கு நமஸ்காரங்கள்.

ப4வப4வதி தொ1ளதொ1ளலி ப3ளப3ளலி ப3லுத3ணிதி3
நாராயணாய நமோ நாராயண |
ப4வ விரிஞ்ச்யாதி3 க1ரிக3ப4யத3னெ நீ ஸலஹு
நாராயணாய நமோ நாராயண ||31

இந்த சம்சாரத்திற்கு மறுபடி மறுபடி வந்து நொந்திருக்கிறேன். பிரம்ம, ருத்ர முதலான தேவதைகளை, கஜேந்திரனை காப்பாற்றிய பகவந்தனே, நாராயணரூபியே உனக்கு நமஸ்காரங்கள்.

தேவஹூதி தேவி, கபிலரூபி பரமாத்மனைக் குறித்து சொல்வது இது:

நிர்விண்ணா நித1ராம் பூ4மன் அஸதி3ந்த்3ரியத1ர்பணாத்1 |

யேன ஸம்பா4வ்யமானேன ப்1ரப1ன்னாऽந்த4ந்த1ம: ப்ரபோ4 ||
(ஸ்ரீமத் பாகவதம் 3-25-7)

குணபூர்ணனான பகவந்தனே! இந்த சம்சாரத்தில் துஷ்ட இந்திரியங்களின் பலனாக, தற்காலிக விஷயங்களில் ஆசைப்பட்டு, அந்த இந்திரியங்களை திருப்திப்படுத்துவதற்காகவே பல செயல்களை செய்தேன். இத்தகைய இந்திரியங்கள் மூலமாக நான் அஞ்ஞானத்தையே பெற்றிருக்கிறேன்.

ஸ்ரீபிரகலாத ராஜர், பகவந்தனைக் குறித்து இப்படி பிரார்த்தனை செய்கிறார்.

யஸ்மாத்1 ப்1ரியாப்1ரிய வியோக3ஸுயோக3ஜன்ம
ஷோகா1க்3னினா ஸக1லயோனிஷு த3ஹ்யமான: |
து3க்2கௌஷத4ம் த1த3பி1 து3க்க2மத1த்தி4யாஹம்
பூ4மன் ப்4ரமாமி வத3 மே த1வ தா3ஸ்யயோக3ம் ||
(ஸ்ரீமத் பாகவதம் 7-9-17)

பிரபு நரசிம்மனே! நான் இந்த சம்சாரத்தில் பிறந்து, எல்லா யோனிகளிலும் இவ்வளவு பதார்த்தங்களை பயன்படுத்தி, கெட்டவைகளின் சகவாசத்தில் உண்டான நெருப்பில் வெந்து வாடியிருக்கிறேன். இந்த துக்கங்களை போக்குவதற்கு பெற்ற மருந்துகளும் துக்கத்தையே தருகின்றன. இதன் பரிகாரத்திற்கு உன் தாஸ்யத்தை எனக்குக் கொடு.

தலைசிறந்த குருகளான பிரம்மன், பகவந்தனின் நாபி கமலத்திலிருந்து வந்த தாமரையில் அமர்ந்து, உலகத்தை படைக்க வேண்டுமென்று சிந்தித்தார். ஆனால், உலகைப் படைப்பதற்கு தேவையான ஞானத்தை இன்னும் அவர் பெற்றிருக்கவில்லை. அப்போது அவருக்கு 'தப', 'தப' என்று ஒலி கேட்டது. அது ஸ்ரீஹரியின் ஆணை என்று அறிந்து, தபம் (தவம்) செய்யத் துவங்கினார். அந்த தவத்தில் மகிழ்ந்து வெளிவந்த ஸ்ரீஹரி பிரம்மனைக் குறித்து, 'பிரம்மனே! நீ என்னை மகிழ்வித்தாய்' என்று அவருக்கு அபயத்தைக் கொடுத்து அருளினார். (ஸ்ரீமத் பாகவதம் 2-9-6)

ருத்ரருக்கு, கஜேந்திரனுக்கு ஸ்ரீஹரி அபயம் கொடுத்த விஷயங்களை முன்னால் சில நுடிகளில் ஏற்கனவே பார்த்திருக்கிறோம்.

இத்தகைய நாராயணரூபி பகவந்தனுக்கு என் நமஸ்காரங்கள்.

நீ தா1யி நீ தந்தெ3 நீ ப3ந்து4 நீ ப3ளக3
நாராயணாய நமோ நாராயண |
நீதி1க3ளனரியெ நின்னய நாமவெ க3தி1யு
நாராயணாய நமோ நாராயண ||32

பகவந்தனே! நீயே தாய், தந்தை, உற்றார், உறவினர். அனைத்தும் நீயே. இத்தகைய நாராயணனுக்கு நமஸ்காரங்கள். நான் நீதி சாஸ்திரங்களை அறிந்தவனல்ல. எனக்கு உன் நாமமே கதி. அதுவே அனைத்துமாக இருக்கிறது (எனக்கு). இத்தகைய நாராயணனுக்கு என் நமஸ்காரங்கள்.

பிதா1 மாதா1 ஸுஹ்ருத்3ப3ந்து4: பி4ராதா1 பு1த்ரஸ்த்1வமேவ மே ||
(பஞ்சராத்ராகம - ஜிதந்தே ஸ்தோத்திரம் 1-7)
பகவந்தனே, நீயே எனக்கு தந்தை, தாய், நண்பன், உறவினர், சகோதரன் என

அனைத்தும் நீயே ஆகியிருக்கிறாய். இத்தகைய நாராயணனுக்கு என் நமஸ்காரங்கள்.

பார்வதிதேவியிடம் சிவன் கூறுவது இவ்வாறு.

ஈஷோ஽ஹம் சர்வஜக3தா1ம் நாம்னாம் விஷ்ணோர்ஹிஜாப1க1: |
ஸத்யம் ஸத்யம் வதா3ம்யேவ ஹரேர்னான்யா க3தி1ர்ன்ருணாம் ||
(புராண வசனம்)

நான் அனைத்து உலகங்களுக்கும் தலைவனாக இருந்தாலும், எப்போதும் பகவான் விஷ்ணுவின் பெயரையே ஜபித்திருக்கிறேன். பகவந்தனின் பெயரைத் தவிர, ஜீவர்களுக்கு வேறு கதியே இல்லை. இது சத்தியம். இதுவே சத்தியம்.

ஆர்த்தாவிஷண்ணா: ஷிதிலாம்ச பீதா
கோரேஷு ச வியாதிஷு வர்தமானா: |
சங்கீர்த்ய நாராயண ஷப்தமாத்ரம்
விமுக்த துக்கா: சுகினோ பவந்தி ||

ஆத்தர்கள் (துக்கமடைந்தவர்கள்), விஷண்ணர் (வாழ்க்கை வெறுத்தவர்கள்), வயதானவர்கள், பயம் கொண்டவர்கள், வியாதியால் பீடித்தவர்கள், நாராயண என்னும் சொல்லை நன்றாக கீர்த்தனை செய்து, அனைத்து துக்கங்களிலிருந்தும், பாவங்களிலிருந்தும் விடுதலை பெற்று சுகத்தைப் பெறுகிறார்கள். காரணம், நாராயணனின் நாமமே மனிதர்களுக்கு நற்கதியைக் கொடுப்பதாக இருக்கிறது.

த1னு நிச்சிகி1ல்ல சித்த1த3 க3தி1யு நீடில்ல
நாராயணா நமோ நாராயண |
த1னய த1ருணி கொ1னெய ஸங்க3திகெ3 ஆரில்ல
நாராயணா நமோ நாராயண ||33

இந்த மனித தேகத்தை நம்புவதற்கில்லை. மனதும் நேராக சிந்திப்பதில்லை. மகன்/ மகள், மனைவி இவர்கள் யாவரும் மரணம் வந்தால், கூட வருவதில்லை. ஜீவன் ஒருவனே (தனியாக) இந்த உலகத்தை விட்டுப் போகவேண்டியிருக்கிறது. '

நாராயணன நாம நெரெபா3ஹோத3ல்லதெ3 ஆரு ஸங்க3ட3 பா3ஹோரில்ல’ என்னும் தாசரின் வாக்கிற்கேற்ப, ஜீவர்களுடன் இறுதியில் வருவது நாராயணனின் நாமம் மட்டுமே. இத்தகைய நாராயணனுக்கு நமஸ்காரங்கள்.

ஸ்ரீகிருஷ்ணன் சொல்வது:
அந்த1வந்த1 இமே தே3ஹா நித்யஸ்யோக்1தா1 ஷரீரிண: ||
(பகவத்கீதை 2-18)

சம்சாரி ஜீவரின் ஸ்வரூபம் நித்யமே ஆகியிருந்தாலும், அவர்களது இந்த பௌதிக தேகமானது, தற்காலிகமானது. நிரந்தரமானதல்ல.

கோ1 ஹி ஜானாதி1 க1ஸ்மாத்3ய ம்ருத்யுகா1லோ ப4விஷ்யதி |
யுவைவ த4ர்மஷீல:ஸ்யாத்1 அனித்1யம் க2லு ஜீவித1ம் ||
(மகாபாரதம் சாந்திபர்வம்)

மனித தேகம் அநித்யமானது. அது எப்போது மரணிக்கும் என்பது யாருக்கும் தெரியாது. ஆகையால், வாழ்ந்திருக்கும்போது தர்மத்தை பின்பற்றி, பகவந்தனின் அருளைப் பெறவேண்டும்.

லப்3த்4வா சுது3ர்லப4மித3ம் ப3ஹுஸம்ப4வாந்தே1
மானுஷ்ய மர்த2த3மனித்1யமபீ1ஹ தீ4ர: |
தூ1ர்ணம் யதே1த1 ந ப1தே1த3னும்ருத்1யுயாவ
ந்னி:ஷ்ரேயஸாய விஷய: க2லு ஸர்வத1: ஸ்யாத்1 ||
(பாகவதம் 11-90-28)

பல பிறவிகளுக்குப் பிறகு, புண்ணியத்தின் பலனாக கிடைக்கும், அநித்யமான, நிரந்தரமில்லாத, புருஷார்த்தங்களைப் பெறுவதற்கு சாதனமான, மனிதப் பிறவியைப் பெற்று புத்திசாலியான ஜீவன், தான் மரணிப்பதற்கு முன், பகவந்தனை வணங்கி, அவரின் பிரசாதத்தைப் பெற்று, மோட்சத்திற்கான தகுதியைப் பெறுவதற்கு முயலவேண்டும்.

ஜீவனின் மரணத்தில், அவனுடன் மகன், மனைவி யாரும் உடன் வருவதில்லை. ஜீவன் தனியாக இந்த உலகத்தை விட்டு போகவேண்டியிருக்கிறது. வாழும் காலத்தில் இவன் செய்த ஹரி நாமஸ்மரணை, செய்த தர்மங்கள் மட்டுமே இவனை பின்தொடர்ந்து வருகின்றன.

ராய: க1லத்ரம் ப1ஷவ: ஸுதா1த3யோ
க்3ருஹாமஹீ கு1ஞ்சர கோ1ஷபூ4த1ய: |
ஸர்வேர்த்த2கா1மா: க்ஷணப4ங்கு3ராயஷ:
கு1ர்வந்தி1 மர்த்1யஸ்ய கி1யத்ப்1ரியம் ச1லா: ||
(பாகவதம் 7-7-41)

செல்வம், மனைவி, பசுக்கள், மகன் ஆகியோர், வீடு, வாசல் இவை அனைத்தும் சிறிது காலம் நம்முடன் இருந்து போகும் பொருட்கள் ஆகும். நிரந்தரமில்லாத இவை எப்போதும் மனிதனை மகிழ்விக்காது.

ம்ருத1ம் ஷரீரமுத்1ஸ்ருஜ்ய கா1ஷ்டலோஷ்டஸமம் க்1ஷிதௌ |
விமுகா2பா3ந்த4வாயாந்தி1 த4ர்மஸ்த4மனுக3ச்சதி1 ||
(மனுஸ்ம்ருதி)

ஜீவன் இறந்தபிறகு அவன் தேகத்தை பூமியில் வைத்து, எரித்து, பின் உறவினர் அனைவரும் புறப்பட்டு செல்கின்றனர். ஆனால் இறந்த அந்த ஜீவனை தர்மம் ஒன்றே பின் தொடர்ந்து செல்கிறது. ஆகவே, உயிருடன் இருக்கும்போது மனிதன் தர்மத்தை காப்பாற்ற / பின்பற்ற முயலவேண்டும்.

ஸ்ரீகனகதாசர் தமது கிருதி ஒன்றில் - 'ஆரு ஸங்கட பா3ஹோரில்ல - நாராயணன நாம நெரெபா3ஹோத3ல்லதே3 - என்று சொன்னதை இங்கு நினைவுகூற வேண்டும்.

தோ3ஷக3ள நரஸதெ3ன்னனு ஸாகு1 ஸாக1ய்ய
நாராயணாய நமோ நாராயண |
தா3ஸபா1லக1 தே3வ டி3ங்க3ரர சஞ்சீவ
நாராயணாய நமோ நாராயண ||34

என் குற்றங்களை (செய்த பாவங்கள், அபராதங்கள்) தேடாமல் என்னைக் காப்பாற்ற வேண்டும். நீ உன் தாசர்களை காப்பாற்றும் தலைவன். உன் பக்தர்களை ரக்ஷிக்கும் தேவனாக இருக்கிறாய். இத்தகைய நாராயணனே, உனக்கு நமஸ்காரங்கள்.

க்1ருஷம் க்1ருத1க்4னம் து3ஷ்க1ர்மகா1ரிணம் பா1ப1பா4ஜனம் |
அபராத ஸஹஸ்ராணாம் ஆக1ரம் கருணாகர ||
க்ருபயா மாம் கே1வலயா க்3ருஹாண மது4ராதி4ப |
விஷயார்ணவ மக்3னம் மாம் உத்த4ர்து1ம் த்1வமிஹார்ஹஸி ||
(பஞ்சராத்ர ஆகம - ஜிதந்தே ஸ்தோத்திரம் 1-5,6)

கெட்ட செயல்களை செய்து பாவங்களை சம்பாதித்து, ஆயிரக்கணக்கான தவறுகளுக்கு பாத்திரனான என்னை, ஹே, கருணாகரனே, மதுராதிபதியே, தயவு செய்து காப்பாற்று. சிற்றின்பம் என்னும் கடலில் மூழ்கியிருக்கும் என்னை நீ மட்டுமே காப்பாற்ற முடியும்.

'நீ க1ருணிஸோ விட்டலா, நம கா1யோ பண்டரிவிட்டலா' என்னும் பாடலில் - 'தோ3ஷிக3ளொளகெ3 ஹிரியனு நா நிர்தோஷிக3ளரஸே விட்டலா' - என்று ஸ்ரீபிரசன்ன வெங்கடதாசரே கூறியிருக்கிறார்.

பா1லகோ1 ஹி ப3ஹூனாம் ச ப4க்1தானாம் ப4க்தவத்ஸல ||
(ஆதித்ய புராண வெங்கடேச மகாத்ம்யம் 1-31)

பக்தவத்ஸலனான பகவந்தன், பல பக்தர்களை காப்பாற்றுகிறார். அந்த பகவந்தன், டிங்கரர்களின் சஞ்சீவி எனப்படுகிறார். டிங்கர என்றால் தாசன் என்று பொருள்.

யோऽந்த: ப்ரவிஷ்ய மம வாசமிமாம் ப்ரசுப்தாம்
சஞ்சீவயத்யகில ஷக்திதர: ஸ்வதாம்னா ।
அன்யாம்ஸ்ச ஹஸ்த சரண ஸ்ரவணத்வகாதீன்
ப்ராணான் நமோ பகவதே புருஷாய துப்யம் ||
(பாகவதம் 4-10-46)

ஸ்தோத்திரம் செய்வதற்கு சாமர்த்தியம் இல்லாத என் வாக் இந்திரியத்தை, இந்திரியாபிமானிகளுக்கு சக்தியைக் கொடுக்குப்பவனான, யார் எனக்குள் நுழைந்து ஸ்வ-சாமர்த்தியத்துடன் மீட்டெடுப்பார்களோ, அப்படியே இதர இந்திரியங்களுக்கு யார் சக்தியைக் கொடுப்பார்களோ, அத்தகைய தேக அந்தர்யாமியாக இருக்கும் பகவான் வாசுதேவனே, உனக்கு என் நமஸ்காரங்கள்.

சஞ்சீவயதீதி - சஞ்சீவ, பகவந்தனின் உள்ளிருந்து ஜீவர்களை உயிர் வாழுமாறு செய்கிறான். அதையே இங்கு சஞ்சீவ என்னும் சொல்லில் தாசர் விளக்குகிறார். 'ஸ்ரீவெங்கடாசல நிவாஸா ! நின்ன ஸேவானு ஸேவகர தாஸா எனிஸி' என்னும் பத்யத்தில் ஸ்ரீஜகன்னாததாசர், பகவந்தனிடம் - 'க3தி1யாரு நின்னளிது3 தே3வ । ரமாபதி நீனே பக்தஸஞ்சீவ' என்று பாடியிருப்பதை கவனிக்க வேண்டும்.

அத்தகைய நாராயணரூபி பகவந்தனுக்கு என் நமஸ்காரங்கள்.

நின்ன மூருதி1 நோடி நோடி நோடி நோடி
நாராயணாய நமோ நாராயண ।
நின்ன பி3ம்ப3வனெந்து க1ண்டு3 கொண்டாடுவேனோ
நாராயணாய நமோ நாராயண ||35

பகவந்தனே! நான் உன் மூர்த்தியை பார்த்து, மறுபடி மறுபடி பார்த்து, நீயே என் பிம்பனாக இருக்கிறாய் என்று கண்டுகொண்டு உன்னை கொண்டாடுகிறேன். இத்தகைய நாராயணரூபி பகவந்தனே, உனக்கு என் நமஸ்காரங்கள். அந்த பகவந்தனின் ரூபத்தைப் பார்ப்பது மட்டுமே, நம் கண்களுக்கு உண்மையான பொருளைத் தரும்.

ஷிரஸ்து1 த1ஸ்யோப4ய லிங்க3மானமேத்1
த1தே3வயத்1வஷ்யதி1 தத்தி4சக்1ஷு: ||
(பாகவதம் 10-80-4)

சராசரமான இந்த உலகத்தை, பகவந்தனின் அசல பிரதிமை என்றறிந்து வணங்கும் தலையே, சிறந்த தலை. அனைத்து இடங்களிலும் பகவந்தனின் மூர்த்தியை பார்க்கும் கண்களே, உண்மையான கண்கள். ஆகவே, பகவந்தனின் மூர்த்தியை மறுபடி மறுபடி பார்த்திருக்க வேண்டும்.

ரூப1ம் ரூப1ம் ப்1ரதிரூபோப3பூ4வ ||
(கட ஸ்ருதி 2-5-9)

இந்த ஸ்ருதி வாக்கியத்தில், பகவந்தன் பிம்பன், ஜீவர்கள் பிரதிபிம்பர்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். 'பிம்பக்ரியயைவ க்ரியாவான்' என்று சொல்வதற்கேற்ப, ஜீவன் பிம்பனான பகவந்தனுக்கு கட்டுப்பட்டவன் என்று அறியவேண்டும்.

நின்ன மை பெ3மரொளெயல்லென்ன முளுகி3ஸி
நாராயணாய நமோ நாராயண |
நின்னவ நா நின்னவர கை1யலி கொ1டு3 க3ட3 க3ட3
நாராயணாய நமோ நாராயண ||36

பகவந்தா, உன் வியர்வையான விரஜா நதியில் என்னை மூழ்கடித்து, லிங்க தேகம் பங்கமாகுமாறு செய்து, நான் உன்னுடையவன் என்று, என் ஸ்வரூபானந்தத்தை வெளிப்படுத்தி, உன் பக்தர்களின் கையில் என்னைக் கொடு. அவர்களுக்கு கட்டுப்பட்டு நான் (முக்தியில்) இருக்கிறேன்.

ஜகன்னாததாசர் தமது ஹரிகதாம்ருதசாரத்தில் இந்த விஷயத்தை விளக்கியிருக்கிறார்.

ஈ புருஷ நாமக1னு ஷுப4ஸ்வீ
தா3ப1ளெனிஸி ரமாம்ப3 தா1 பி3ர
ம்மா ப1ரோக்ஷிக3ளாத3வர லிங்கா3ங்க3 கெ1டி3ஸுவளு ||
(ஹரிகதாம்ருதசாரம் 4-15)

பிரகாஷ சம்ஹிதையில் சொல்லியிருப்பதையும் பார்க்கலாம்.

ப்1ரதா4ன ப1ரமவ்யோம்னோரந்த1ரா விரஜாநதி3 |
தே3வாங்க3ஸ்வேத3ஜனிதா1 .... || (1-15-22)

புருஷ நாமகனான ஸ்ரீஹரியின் மங்களகரமான வியர்வை என்று கருதப்படும் விரஜா நதியின் ரூபமாக, தாயான மகாலட்சுமி தான் பிரம்மாபரோக்ஷ ஞானத்தைப் பெறுபவர்களின் லிங்கதேகத்தை நாசம் செய்கிறார். இத்தகைய விரஜா நதியில் என்னை மூழ்குமாறு செய் என்கிறார் தாசர். இங்கு ஸ்னானம் செய்தவர்களின் லிங்கதேகம் பங்கம் ஆவது நிச்சயம்.

பிரம்மணா ஸஹ விரஜாநதி3 ஸ்னானேன த்1யக்த1லிங்கா3னாம் ||

(ஸ்ரீராகவேந்திர ஸ்வாமிகள் இயற்றிய பிராத: சங்கல்ப கத்யம்)

அபரோக்ஷ ஞானம் ஆனபிறகு, பிரம்மதேவருடன் விரஜா நதி ஸ்னானம் ஆனபிறகு, லிங்கதேகம் பங்கம் ஆகி, ஸ்வரூப தேகத்துடன் வாசுதேவ பகவத்ரூப தரிசனம் செய்து, அங்கிருக்கும் முக்தர்களுடன் இருந்து, தன்னுடைய ஸ்வரூபானந்தத்தை அனுபவிப்பதே முக்தி. இந்த முக்தர்களிடம் என்னைக் கொடு என்றால், நான் உத்தமர்களின் ஆதீனத்தில் (கட்டுப்பாட்டில்) இருந்து, முக்தி சுகத்தை அனுபவிக்கிறேன் என்று பொருள். இந்த முக்தி சுகத்தைக் கொடுக்கும் ஸ்ரீநாராயணனே உனக்கு நமஸ்காரங்கள்.

வாரியலி ஸ்த2ளத3ல்லி அடவிலெல்லெல்லி கா1யோ
நாராயணாய நமோ நாராயண |
வாராஹ வாமன ந்ருசிம்ஹ கே1ஷவ ஸ்வாமி
நாராயணாய நமோ நாராயண ||37

தண்ணீரில், நிலத்தில், காட்டினில் வராகன், வாமனன், ந்ருசிம்ஹ கேசவரூபியான ஸ்வாமி ஸ்ரீ நாராயணனே நீயே என்னை காப்பாற்ற வேண்டும். உனக்கு நமஸ்காரங்கள்.

ஜலேஷு மாம் ரக்1ஷது மத்ஸ்யமூர்த்தி:
ஸ்த2லேஷு மாயாவடு வாமனோऽவ்யாத்1 |
து3ர்கே3ஷ்வட1 வ்யாஜிமுகா2தி3ஷு ப்ரபு4:
பா1யான் ந்ருஸிம்ஹோ ऽஸுரயூத2பா1ரி:
மாம் கே1ஷவோ க3த3யா ப்1ராத1ரவ்யாத்3 ||
(பாகவதம் 6-8-13, 14, 20)

மத்ஸ்ய ரூபியான பகவந்தன் தண்ணீரில் காப்பாற்றட்டும். பிரம்மசாரி ரூபத்தை தரித்த பகவான் வாமனன் நிலத்தில் காப்பாற்றட்டும். பகவான் நரசிம்மன் காட்டில், போர்க்களத்தில் காப்பாற்றட்டும். காலையில் கேசவரூபி பகவந்தன் கதையைப் பிடித்து காப்பாற்றட்டும்.

பிரளயத்தில் மூழ்கிய பூமியை காப்பாற்றிய வராகரூபி ஸ்ரீஹரியால், ஹிரண்யாக்ஷகன் கொல்லப்பட்டான். இரண்டாம் முறையாக ஹிரண்யாக்ஷகன், பூமியை அபகரித்து கடலில் மூழ்கடித்தான். வராகரூபி பகவந்தன் இந்த பூமியை மேலெடுக்கும்போது, ஹிரண்யாக்ஷகன் வராகரூபி பகவந்தனின் கையால் அடிபட்டு இறந்தான். இந்த காரணத்தால், தண்ணீரில் வராகரூபி பகவந்தன் காப்பாற்றட்டும் என்கிறார் தாசர்.

இப்படி அனைத்து இடங்களிலும் காப்பாற்றும் நாராயணரூபி பகவந்தனுக்கு நமஸ்காரங்கள்.

ஸத்1கு1லோத்ப4வனாதெ3 ஸன்மார்க3ரியலில்ல

நாராயணாய நமோ நாராயண ।
ஸத்1க1ர்மக3ளிகெ3 ப3ஹிஷ்க்1ருத1னாகி3 பா3ளுதி1ஹெ
நாராயணாய நமோ நாராயண ॥38

பகவந்தனே! நான் நற்குலத்தில் பிறந்து வந்தேன். ஆனால் நல்வழி எதுவென்று அறியவில்லை. நற்செயல்களை செய்யவேண்டும். ஆனால், அவற்றிலிருந்து விலகியிருந்தேன். நாராயணரூபி பகவந்த நீயே காப்பாற்றவேண்டும்.

ஸாது4ஸேவாவிஹீனஸ்ய து3ஷ்டஸங்க3ரத1ஸ்யச ।
ஸன்மார்க்க3 ப1ரிப்4ரஷ்ட1ஸ்ய ஸதா3 து3ர்மார்க்க3வர்தி1ன: ।
ஸம்ஸாரே க3ஹ்வரே ப1த்னீ பு1த்ரமித்ராதி3த3ஸ்யுபி4: ।
வ்யஸனே த3ஹ்யமானஸ்ய பா3ஷப3த்த4ஸ்ய மே ப1ஷோ: ।
அப1ஸ்யதோ1 ரக்1ஷமாணம் கு1ரு வெங்கடரக்ஷணம் ॥
(ஸ்ரீவெங்கடேச ஸ்தவராஜ ஸ்லோகம் #32)

சாதுகளுக்கு சேவை செய்யாதிருப்பது, துஷ்டர்களுடன் பழக்கத்தில் இருப்பது, சன்மார்க்கத்தை பின்பற்றாமல் இருப்பது, எப்போதும் துர்மார்க்கத்திலேயே இருப்பது, இந்த சம்சாரம் என்னும் காட்டினில் மனைவி, மக்கள் முதலான திருடர்களினால் துக்கப்படுவது, சம்சாரம் என்னும் கயிற்றினால் கட்டப்பட்ட பசுவைப் போல இருக்கும் என்னை காப்பாற்றுவோர் யாருமில்லை. ஹே, வெங்கடேசா, நீயே என்னை காப்பாற்ற வேண்டும்.

வைஷ்ணவ பிறவி வந்திருக்கும்போது சத்கர்மங்களை செய்யவேண்டும். ஸ்ரீவிஷ்ணு பக்தி செய்வது மிகவும் அவசியம். ஸ்ரீமத்வர் த்வாதச ஸ்தோத்திரத்தில் சொல்லியபடி:

கு1ரு பு4ங்க்ஷ்வச க1ர்ம நிஜம் நியத1ம் ।
ஹரிபா1த3 வினம்ரதி4யா ஸத1த1ம் ॥

ஸ்ரீஹரியின் பாத கமலங்களில், மிகுந்த பக்தியுடன், நியமிக்கப்பட்ட கர்மங்களை செய் / பின்பற்று. அதன்மூலம் வரும் பலன்களை அனுபவி.

கு1ர்வன்னேவேஹ க1ர்மாணி ஜிஜீவி ஷேச்சத1ம்ஸமா: ।
ஏவம் த்1வயி நான்யதே4தோ1sஸ்தி1 ந க1ர்ம லிப்1யதே1 நரே ॥

இந்த உலகத்தில் சத்கர்மங்களை பகவத்பூஜை என்று நினைத்து செய்து, நூறு ஆண்டுகாலம் வாழ நினைக்கவேண்டும். இதைத்தவிர வேறு வழியில்லை. இதனால் அந்த கர்மங்கள் நஷ்டமடைவதில்லை. ஆகையால், இத்தகைய சத்கர்மங்களை பின்பற்றும் வாழ்க்கையானது, வீண் போவதில்லை என்கிறார் தாசர்.

ஒந்து3 ஜாவத3 த1ப்ப1னெந்தெ3ந்தி3 கு3ணலாரெ

நாராயணாய நமோ நாராயண ।
வந்தி[3]ஸுவெ ஸாஷ்டாங்க[3] த்[1]ராஹித்[1]ராஹி பாஹி த்[1]ராஹி
நாராயணாய நமோ நாராயண ॥39

பகவந்தனே! ஒரு பொழுதில் செய்த தவறுகளை, அதன் பலன்களை உண்ண மாட்டேன். நான் உனக்கு சாஷ்டாங்க நமஸ்காராம் செய்வேன் என்னை காப்பாற்று, காப்பாற்று, காப்பாற்று, காப்பாற்று.

நீ கருணிஸோ விட்டலா, நம ஸாகோ பண்டரிவிட்டலா
என்னும் பாடலில் ஸ்ரீபிரசன்னவெங்கட தாசரே இவ்வாறு சொல்கிறார்.

ஜாவகெ[1] மாடுவெ ஸாவிர த[1]ப்பனு கா[1]யோ த[3]யாம்பு[3]தே[4] விட்டலா ।
ஸ்ரீவர ப்ரசன்ன வெங்கடவிட்டல ஜீவகெ[1] ஹொணெ நீ விட்டலா ॥

பகவந்தனே! நான் தினமும் காலையில் ஆயிரம் தப்புகளை செய்கிறேன். நீ கருணைக்கடல். நீயே என்னை காப்பாற்று. பிரசன்னவெங்கட விட்டலன் நீயே என்னைக் காப்பாற்று என்கிறார் தாசர்.

அவரே இன்னொரு பத்தியில், 'தப்புகளெல்ல பரிஹரிஸுவ நம்மப்பனல்லவே நீனு' என்கிறார். தினமும் காலையில் எழுந்தவுடன் பகவந்தனின் ஸ்மரணை செய்யவேண்டும் என்கிறார். இதற்கு என்ன காரணம்?

உத்தா[2]ய அப[1]ரராத்[1]ராந்தே[1] ப்[1]ரயத[1]: ஸுஸமாஹிதா[1]: ।
ஸ்மரந்தி[1] மம ரூபா[1]ணி முச்யந்தே[1] தே[1]sம்ஹஸோsகி[2]லாத்[1] ॥
(பாகவதம் 8-4-24)

இரவில் கடைசி நாழிகையில், எந்த பக்தர் தூக்கத்திலிருந்து விழித்து, என் ரூபங்களை, நாமங்களை நினைப்பரோ அவர் அனைத்து பாவங்களிலிருந்தும் முக்தராகிறார்.

மத்வேஷ மத்வப்ரிய மத்வமத பரிபால
நாராயணாய நமோ நாராயண ।
மத்வகுரு ஸ்துத்ய மத்வார்ச்சித ப[1]தாப்[3]ஜஹரி
நாராயணாய நமோ நாராயண ॥40

ஹே பகவந்தா! நீ மத்வருக்கு ஸ்வாமி. ஸ்ரீமத்வருக்கு ப்ரியமானவன். மத்வமதத்தை நிர்வகிப்பவன். ஸ்ரீமத்வகுருகளால் வணங்கப்படுபவன். ஸ்ரீமத்வரால் அர்ச்சிக்கப்படும் பாத கமலங்களை உடையவன். இத்தகைய ஸ்ரீநாராயணனுக்கு நமஸ்காரங்கள்.

மந்த[3]ஹாஸ ம்ருது[3]ஸுந்த[3]ரானனம் வந்த[3]னீயமபி வந்த்[3]ய ஸத்[1]வதி[1]ம் ।
ப்ராக்[3]ஞு மௌலி மணிரப்[4]யனுக்[3]யயா த[1]ஸ்ய தா[1]வத[3]க[3]மன் மஹாமதி[1]: ॥

(மத்வ விஜயம் 9-3)

ஞானிகளான ஸ்ரீமத்வர் புன்னகையுடன் கூடிய அழகிய முகத்தைக் கொண்ட, அனைத்து ரீதியிலும் வணங்குவதற்கு அருகதையுள்ள, ஸ்வாமியான ஸ்ரீநாராயணாபின்ன ஸ்ரீவேதவியாசரை வணங்கி, அவரது அனுமதியை பெற்றுக்கொண்டு அங்கிருந்து புறப்பட்டார்.

ஸ்ரீமத்4வவல்லப4 வேத3 ப1தே1 ஜய நரசிம்ஹா ஜயநரசிம்ஹா ஜய நாராயண |
ஸ்ரீ நரசிம்மகீதையில் வர்ணித்தவாறு ஸ்ரீ நாராயணன் ஸ்ரீமத்வருக்கு ஸ்வாமியாக இருக்கிறார்.

ஸ்வத1ந்த்1ராயாகி2லேஷாய நிர்தோ3ஷ கு3ணரூபி1ணே |
ப்1ரீயஸே மே ஸுபூ1ர்ணாய நமோ நாராயணாயதே1 ||
(விஷ்ணு தத்வ நிர்ணய - கடைசி ஸ்லோகம்)

ஸ்வதந்த்ரனான, அனைத்து உலகங்களுக்கும் ஸ்வாமியான, தோஷங்கள் அற்ற, குணபூர்ணனான, அத்யந்த பூர்ணனான நாராயணனான, எனக்கு மிகவும் ப்ரியனான உனக்கு நமஸ்காரங்கள்.

நமோ நாராயணாயாஜ ப4வ ஷக்1ரோஷ்ண1ருங் முகை2: |
ஸதா3வந்தி3த1 பா1தா3ய ஸ்ரீஷாய ப்1ரீயஸேsதி4க1ம் ||
(கர்ம நிர்ணய - கடைசி ஸ்லோகம்)

பிரம்ம, ருத்ர, இந்திர, சூர்ய முதலான தேவதைகளால் எப்போதும் வணங்கப்படும் பாதங்களை உள்ள, லட்சுமிபதியான, எனக்கு மிகவும் ப்ரியனான நாராயணனுக்கு நமஸ்காரங்கள்.

மத்வ மதத்தை நிர்வகிக்கும் / ஆட்சி செய்பவனாக ஸ்ரீ நாராயணன் இருக்கிறார். தாச ஸ்ரேஷ்டரான புரந்தரதாசர் தமது ஒரு கிருதியில் - 'ஹனுமன மதவே ஹரிய மதவு' - என்று சொல்லியிருப்பதை கவனிக்க வேண்டும்.

அது மட்டுமல்ல, ஸ்ரீமத்வர் இயற்றிய கிரந்தங்கள் அனைத்தும் ஸ்ரீ நாராயணனுக்கு மிகவும் பிடித்தமானவை. ஸ்ரீமத்வாசார்யர் கீதாபாஷ்ய கிரந்தத்தை ஸ்ரீவேதவியாசருக்கு அர்ப்பித்தார். அன்றிரவு அங்கு வந்த ஸ்ரீ நாராயணர், பூமியைத் தட்டி சத்தம் செய்து 'இன்னொருமுறை அந்த பிரவசனத்தை செய்யுங்கள்' என்றார். இதிலிருந்து மத்வரின் பாஷ்யாதி கிரந்தங்கள் ஸ்ரீ நாராயணரின் பாராட்டிற்கு தகுந்தது என்று அறியலாம்.

இதனால் ஸ்ரீ நாராயணன், மத்வ மதத்தை ஆட்சி செய்பவனாக இருக்கிறான் என்று சொல்வது மிகவும் பொருத்தமாக இருக்கிறது.

ஸ்ரீமத்வர் பாவி (எதிர்கால) பிரம்மர். அவரால் போற்றப்பட்டவர் நாராயணர்.

நிஜபூ1ர்ண ஸுகா2மித1 போ3த4த1னு:
ப1ரஷக்தி1ரனந்த1 கு3ண: ப1ரம: |
அஜராமரண: ஸக1லார்த்தி1ஹர:
க1மலாப1திரீட்3ய த1மோऽவது1ன: ||
(த்வாதச ஸ்தோத்திரம்)

அதிக மகிழ்ச்சியும், அதிக துக்கமும் இல்லாத மிதமானவ்ரான, ஞானமே சரீரமாக உள்ளவரான, விலக்ஷணமும் உத்தமமுமான சாமர்த்தியம் உள்ளவரான, அனந்தகுண பரிபூர்ணரான, சர்வோத்தமரான, பிறப்பு இறப்பு இல்லாதவரான, அனைவரின் துக்கங்களை பரிகரிப்பவரான, லட்சுமிபதி நம்மை காப்பாற்றட்டும்.

ஸ்ரீமத்வரால் பூஜிக்கப்படும் பாதங்களை உடைய ஸ்ரீஹரி.

அச்யுதோ1 யோ கு3ணைர் நித்1யமேவாகி2லை:
ப்ரச்யுதோ1 ஸேஷதோ3ஷை: ஸதா3 பூர்தி1த1: |
உச்யதே1 சர்வவேதோ3ருவாதை3ரஜ:
ஸ்வர்ச்சிதோ1 ப்ரம்ம ருத்ரேந்த்3ர பூ1ர்வைஸ் சதா3 ||

(த்வாதச ஸ்தோத்திரம் 8-8)

அனைத்து நற்குணங்களையும் பெற்ற, எவ்வித தோஷங்களும் அற்ற, குணபூர்ணனான, சிறந்த தேவர்களால் பூஜிக்கப்படும், பிறப்பு இல்லாத, பிரம்ம ருத்ராதிகளால் பூஜிக்கப்படுபவன் இவனாக இருக்கிறான்.

இத்தகைய நாராயணனுக்கு நமஸ்காரங்கள்.

ஏனரியத3வ நானு நீனே ப1ரக3தி எனகெ3
நாராயணாய நமோ நாராயண |
ப்1ராண நினக3ர்ப்பிஸிதெ3 ப்ரசன்னவெங்கட க்ருஷ்ண
நாராயணாய நமோ நாராயண ||41

நான் எதுவும் அறியாதவன். எனக்கு நீயே பரகதியாக இருக்கிறாய். என் உயிரையே உனக்கு அர்ப்பித்திருக்கிறேன். ப்ரசன்ன வெங்கடகிருஷ்ண ரூபி நாராயணனே உனக்கு நமஸ்காரங்கள்.

த1ஸ்மாத3க்1ஷரம் த1ஸ்மாத3க்1ஷர மித்யாசக்1ஷத1 ஏத1மேவ ஸந்த1ம் |
என்று ஸ்ரீஹரியை வேதங்கள் ‘அக்ஷர’ என்று அழைக்கின்றன. அவனையே

‘பரகதி’ என்னும் அழைக்கிறார்கள். ஏனெனில் அவனை அடைந்த யாரும் மறுபடி பிறவி எடுத்து வருவதில்லை. அதுவே என் உத்தமமான ஸ்வரூபம் என்று பகவந்தனே கீதையில் சொல்லியிருக்கிறார்.

ஸ்ரீஹரிக்கு சமமானவர்கள் வேறு யாரும் இல்லை. ஸ்ரீஹரியைத் தவிர வேறு கதி யாருக்கும் இல்லை. பகவந்தன் கொடுத்திருப்பதை அனைவரும் அவனுக்கே அர்ப்பணம் செய்ய வேண்டும் என்பது மிகவும் அவசியம். அதே காரணத்தால், ‘ப்ராண’னை (உயிரை), ஹே பிரசன்ன வெங்கடகிருஷ்ணா உனக்கு அர்ப்பிக்கிறேன் என்று ஸ்ரீபிரசன்ன வெங்கடதாசர் சொல்லியிருக்கிறார்.

க்ஷேமம் ந விந்த^{3}ந்தி^{1} வினா யத^{3}ர்ப^{1}ணம்
(பாகவதம் 2-4-17)

பகவந்தனுக்கு அனைத்தையும் சமர்ப்பிக்க வேண்டும். ஒரு வேளை இப்படி செய்யாதிருந்தால், அந்த ஜீவர்கள் முக்தியை சேர்வதேயில்லை.

இஷ்ட^{1}ம் த^{3}த்த^{1}ம் ஹுத^{1}ம் ஜப்த^{1}ம் பூ^{1}ர்த^{1}ம் யச்சாத்^{1}மன: ப்^{1}ரியம் |
தா^{3}ரான் ஸுதா^{1}ன் ப்^{1}ரியான் ப்^{1}ராணான் ப^{1}ரஸ்மை ஸன்னிவேத^{3}யேத்^{1} ||
(ஸ்ரீமதாசார்யரின் சதாசார ஸ்ம்ருதி ஸ்லோகம் #12)

யக்ஞ, தான, ஹோம, ஜபங்களை செய்வது, சரோவரத்தை நிர்மாணிப்பது, தனக்கு ப்ரியமான செல்வம், மனைவி, மக்கள், உயிர் மற்றும் இந்திரியங்களால் நடைபெறும் அனைத்து செயல்களையும் ஸ்ரீஹரிக்கு சமர்ப்பிக்க வேண்டும்.

இந்த காரணத்தால், ஸ்ரீபிரசன்ன வெங்கடதாசர், தமது ஆராத்யமூர்த்தியான ப்ரசன்ன வெங்கடகிருஷ்ணனுக்கு உயிரையும் அர்ப்பிக்கிறேன் என்று சொல்வது மிகவும் பொருத்தமாக இருக்கிறது.

ஸ்ரீகிருஷ்ணார்ப்பணமஸ்து